REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2022 ஜனவரி 20 வியாழக்கிழமை

# தினகரன்
THINAKARAN தினகரன்

வரு. 90 இல. 17 | Thursday 20, January, 2022 | 16பக்கங்கள் | 30/-







## பொதுச்சேவையை நம்பியே மக்கள்:
## அமைச்சு செயலாளர்களது பொறுப்பு அதிவிசாலமானது

செயலாளர்கள் நியமன நிகழ்வில் ஜனாதிபதி உரை



நாட்டின் அனைத்து விடயங்களும், பொதுச் சேவையை நம்பியே உள்ளன. அதனால், அனைத்து அமைச்சுக்களின் செயலாளர் களுக்கும் பாரிய பொறுப்புக்கள் வழங்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி

06

## தமிழ் கட்சிகள் ஒன்றிணைந்து தயாரித்த ஆவணம்;
## இந்திய பிரதமருக்கு வழங்க முன் ஜனாதிபதிக்கு வழங்க வேண்டும்

அமைச்சர் உதய கம்மன்பில தெரிவிக்கிறார்

ஷம்ஸ் பாஹிம்

இந்தியப் பிரதமர் மோடிக்கு தமிழ் கட்சிகள் 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவது தொடர்பில் கடிதம் அனுப்பி கோரிக்கை விடுவதற்கு முன்னர் ஜனாதிபதியிடமே கோரிக்கை விடுத்திருக்க வேண்டும் என இணை அமைச்சரவை பேச்சாளர்

06

## பொருளாதார நெருக்கடிக்கு தீர்வாக
## IMF உடன் அரசு எவ்விதமான பேச்சுக்களையும் நடத்தவில்லை

ஷம்ஸ் பாஹிம்



நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலை தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்துடன் இதுவரையில் அரசாங்கம் எந்தவித பேச்சுவார்த்தையையும் நடத்தவில்லை என்று அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் டளஸ் அழகப்பெரும

06

## எதிர்வரும் 08 தினங்களுக்கு தேவைப்படும்
# மின் உற்பத்திக்கு தேவையான எரிபொருள் மின்சார சபைக்கு



பத்தாயிரம் மெற்றிக் தொன் டீசலை வழங்க தீர்மானம்

ஷம்ஸ் பாஹிம்

மின் உற்பத்திக்கு தேவையான 10,000 மெற்றிக் தொன் டீசலை மின்சார சபைக்கு வழங்குவதற்கு தீர்மானித்திருப்பதாக இணை அமைச்சரவை பேச்சாளர் எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

**மின்சக்தி அமைச்சருக்கும் எனக்கும் இடையில் எவ்வித முரண்பாடும் கிடையாது என்கிறார் அமைச்சர் கம்மன்பில**

எதிர்வரும் 08 தினங்களுக்கு தேவையான எரிபொருள் வழங்கப் படவிருப்பதாக தெரிவித்த அவர், தனக்கும் மின்சக்தி அமைச்சருக்குமிடையில் எந்த கருத்து வேறுபாடும் கிடையாதெனவும் டொலர் பிரச்சினை தான் இருவருக்கும் இருக்கிறதென்றும் அவர் குறிப்பிட்டார்.

மின்வெட்டு அமுல்படுத்துவதாக இருந்தால் அது தொடர்பில் முன்கூட்டி அறிவிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

06



இலங்கை நிர்வாக சேவையின் சிரேஷ்ட அதிகாரியான காமினி செனரத், ஜனாதிபதியின் புதிய செயலாளராக நியமிக்கப்பட்டார். ஜனாதிபதியினால் நேற்று (19) ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து நியமனக் கடிதம் காமினி செனரத்திடம் கையளிக்கப்பட்டபோது...



கொவிட் தொற்றுக்குள்ளான நிலையிலுள்ள
## மாணவர்கள் பரீட்சைக்கு தோற்ற சந்தர்ப்பம்

03

## வெள்ளவத்தை கடலில் தென்பட்ட முதலை



வெள்ளவத்தை கடலில் நேற்று காலை முதலை ஒன்று தென்பட்டமை தொடர்பில் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், மீண்டும் முதலைகள் கடலில் நடமாடுவது தொடர்பில் கருத்துகள் வெளியாகின்றன. சில நாட்களுக்கு முன்னர் தெஹிவளை, கல்கிசை மற்றும் காலி முகத்திடல் கடற்பரப்புகளில் அவ்வப்போது முதலைகள் காணப்பட்டன.

06

## துறைமுகத்தில் சிக்கியுள்ள
## 800 கொள்கலன்கள் இன்று விடுவிக்கப்படும்



டொலர் பற்றாக்குறை காரணமாக துறைமுகத்தில் சிக்கியுள்ள அத்தியாவசிய உணவுப் பொருட்கள் அடங்கியுள்ள 800 கொள் கலன்களை விடுவிப்பதற்கான டொலர்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்தன குறிப்பிட்டுள்ளார். கொள்கலன்களின் விடயதானங்கள் அடங்கிய ஆவணங்களை மத்திய வங்கிக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அதனடிப்படையில், இன்று (20) முதல் அக் கொள்கலன்கள்

06

## உணவு நெருக்கடி தொடர்பில் எவ்வித அச்சமும் தேவையில்லை

அரசிடம் பல்வேறு திட்டங்கள் உள்ளன

ஷம்ஸ் பாஹிம்



உணவு நெருக்கடி தொடர்பில் தேவையில்லாத அச்சமோ, சந்தேகமோ ஏற்படுத்திக்கொள்ளத் தேவையில்லை. உணவு நெருக்கடி நிலைமை ஏற்படுவதை தடுப்பதற்காக அரசாங்கம் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளதாக இணை அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்துள்ளார். அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் கருத்துத்

06

## சர்வதேச குத்துச்சண்டை போட்டியில்
## முல்லைத்தீவு வீராங்கனை இந்துவுக்கு தங்கப்பதக்கம்



பாகிஸ்தானில் இடம்பெற்ற குத்துச்சண்டை இறுதிப் போட்டியில் முல்லைத்தீவு வீராங்கனை கணேஸ் இந்துகாதேவி தங்கப்பதக்கம் பெற்று சாதனை படைத்துள்ளார்.

06

## பிரதமர் மோடியின் உயிருக்கு அச்சுறுத்தல்

உளவுத்துறை கடும் எச்சரிக்கை



இந்திய குடியரசு தின விழாவில் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்த சதி திட்டம் தீட்டி இருப்பதாகவும், பிரதமர் மோடியின் உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாகவும் உளவுத்துறை எச்சரித்துள்ளது. இதுதொடர்பாக மத்திய உளவுத்துறை 9 பக்க அறிக்கையை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில், பிரதமர் மோடி மற்றும் குடியரசு தின விழாவில் பங்கேற்கும் முக்கிய பிரமுகர்களுக்கு அச்சுறுத்தல்

06

## 13 வது திருத்தத்தை பாதுகாக்கவே நாம் இந்தியாவை நாடினோம்

அதில் தவறில்லையென்கிறார் சித்தார்த்தன்

இலங்கை இந்திய ஒப்பந்தத்தில் ஒரு தரப்பு இந்தியா என்பதாலேயே 13 ஆவது திருத்தத்தை ஒழிப்பதற்கு எதிராக இந்தியாவை நாடியுள்ளோம். இது நாட்டுக்கு எதிரானதல்ல என தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.



பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய அவர்,

தேசிய இனப்பிரச்சினைக்கு சமஷ்டி அடிப்படையில் தீர்வுக்காக தமிழ் மக்கள் வாக்களித்து வருகின்றனர். இது தொடர்பில் ஜனாதிபதி தனது உரையில் எங்கும் குறிப்பிடவில்லை.

06

## பொரளை தேவாலய கைக்குண்டு விவகாரம்:
## கைதான வைத்தியரின் வீட்டில் துப்பாக்கிகள், தோட்டாக்கள் மீட்பு

வாள்கள், கத்திகள் சிக்கின



பொரளையில் உள்ள 'அனைத்து புனிதர்கள்' தேவாலயத்திலிருந்து கைக் குண்டு மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட ஓய்வு பெற்ற வைத்தியரின் வீட்டிலிருந்து பெருமளவிலானதுப்பாக்கிகள் மற்றும்தோட்டாக்கள்கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

06

## எமது முயற்சியை குழப்பும் சுமந்திரன்

சுரேஸ் குற்றச்சாட்டு



நாங்கள் இந்திய அரசிடம் தமிழ் மக்களின் உரிமைகளை முழுமையாகப் பெற்றுக்கொடுப்பதற்கான வழி முறையைப் பற்றிச் சிந்தித்துச் செயற்படும்போது அதனைக் கேள்விக் குள்ளாக்கக்கூடிய வகையில் சுமந்திரன்

06









ஜனாதிபதியின் புதிய செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள காமினி செனரட், நேற்று ஜனாதிபதி செயலகத்தில் தனது பொறுப்புகளை உத்தியோகபூர்வமாக ஆரம்பிப்பதை படங்களில் காணலாம்.

# பேராசிரியர் அல்லாமா உவைஸின் நூற்றாண்டு விழா நிகழ்வுகள்







**(அஷ்ரப் ஏ சமத்)**

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் ஏற்பாட்டில் பேராசிரியர் அல்லாமா ம.மு. உவைஸ் அவர்களின் நூற்றாண்டு விழா செவ்வாய்க்கிழமை (18) கொழும்பு, பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கல்வி உயர் கல்வியமைச்சர் தினேஷ் குணவர்த்தன கலந்து கொண்டார். கௌரவ அதிதிகளாக பல்கலைக்கழக ஆணைக்குழுவின் தலைவர் சம்பத் அமரதுங்க, பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல், முன்னாள் அமைச்சர்களான ஏ.எச்.எம். பௌசி, பைஸர் முஸ்தபா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

பேராசிரியர் அல்லாமா உவைஸ் பற்றி தென்கிழக்கு பல்கலைக்கழகம் வெளியிட்ட 'மர்க்கசி' எனும் நூல் அமைச்சர் தினேஷ் குணவர்தனவுக்கும் மற்றும் ம.மு. உவைஸின் புத்திரர்களுக்கும் வழங்கி வைக்கப்பட்டன.

தபால் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட பேராசிரியர் உவைஸின் நூற்றாண்டு ஞாபகார்த்த முதல் நாள் நினைவு முத்திரையும் தபால் உறையும் பிரதி தபால் மா அதிபரினால் அமைச்சர் தினேஷ் குணவர்தனவிடம் கையளிக்கப்பட்டு வெளியிடப்பட்டதோடு அவ்வுறையை அமைச்சர், பேராசிரியரின் புதல்வரும் இலங்கை ஹஜ் கமிட்டியின் தலைவருமான அஹ்கம் உவைஸிடம் கையளித்தார்.




இந்நிகழ்வில் பேராசிரியர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் உட்பட இலக்கியவாதிகள், முக்கிய பிரமுகர்களும் கலந்து சிறப்பித்தனர்.





# கடந்த அரசு கட்டுப்பாடின்றி பொருட்களை இறக்குமதி செய்ததால் நாட்டுக்கு பாரிய அந்நிய செலாவணி நெருக்கடி ஏற்பட்டது

## வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன

**சபை நிருபர்கள்:**
**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**



கட்டுப்பாடின்றி கடந்த அரசு பொருட்களை இறக்குமதி செய்ததாலே நாட்டுக்கு பாரிய அந்நிய செலாவணி நெருக்கடி நிலைக்கு முகங்கொடுக்க நேரிட்டதாக வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை மீதான விவாதத்தில் உரையாற்றிய அவர் மேலும் குறிப்பிட்டதாவது.

நாடுமுகங்கொடுத்துள்ள நெருக்கடிகள் பற்றி ஜனாதிபதி சபையில் தெளிவுபடுத்தினார். அந்நிய செலாவணி நெருக்கடி இன்று நேற்று உருவானதல்ல. சுதந்திரம் கிடைத்தது முதல் இந்தப் பிரச்சினை காணப்படுகிறது. பல அரசுகள் நிரந்தர தீர்வு வழங்காத பிரச்சினையின் உச்ச கட்டத்தை நாடு எதிர்கொண்டுள்ளது.

2015 இல் உங்கள் தரப்பிற்கு தவறு நடந்தது. உலக அளவில் உகந்த நிலை காணப்பட்டது. பால்மா விலை.எரிபொருள் விலை குறைந்திருந்தது. எரிபொருள் விலை இறக்குமதயில் 2 பில்லியன் டொலர் லாபம் எஞ்சியது. ரூபாவின் பெறுமதி குறையாதிருக்க தினமும் சந்தைக்கு டொலரை இட்டார்கள். கட்டுப்பாடின்றி பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டன. 2015 இல் வாகன இறக்குமதி செலவு 40 வீதத்தினால் அதிகரித்தது. எரிபொருள் இறக்குமதி செலவு 66 வீதத்தினாலும் அதிகரித்தது. அநேக பொருட்களின் இறக்குமதி செலவு அதிகரித்திருந்தது. தங்கம் மாத்திரம் 650 மில்லியன் டொலர்களுக்கு இறக்குமதி செய்யப்பட்டது.

இதனால் பெருமளவு நிதிவெளியில் சென்றது. வெளிநாட்டு கடனை முகாமைத்துவம் செய்வதற்கு முன்னுரிமை வழங்குமாறு நிபுணர்கள் கோரியிருந்தனர்.

முழுநாட்டை காட்டிக்கொடுக்கும் மிலேனியம் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட முயன்றார்கள். சுற்றுலா துறை மூலம் இவற்றை சீர் செய்ய வாய்ப்பு இருந்தாலும் உயிர்த்த ஞாயிறு தாக்குதலினால் அதுவும் முடியாமல் போனது. நாட்டிற்கு வெளியில் பணம் செல்வதை தடுக்கவும் அந்நிய செலாவணியை அதிகரிக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.









**கயந்த கருணாதிலக்க (ஐ.ம.ச)**

பசளை பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும் என விவசாயிகள் எதிர்பார்த்தார்கள்.அது நிறைவேறவில்லை. ஜனாதிபதி ஆற்றும் முக்கியமான உரையாகவே கொள்கை விளக்க உரை கருதப்படுகிறது. முழுநாடும் அதனை ஆவலுடன் எதிர்பார்க்கும். ஜனாதிபதி இரு தடவைகள் பாராளுமன்றத்தில் உரையாற்றினார்.அவை குறிப்பிட்டவை நிறைவேற்றப்படும் என எதிர்பார்த்தோம். ஆனால் அவை நிறைவேறவில்லை.

இன்று வெளியிடும் வர்த்தமானி அடுத்த நிமிடம் மாற்றப்படும்.எடுக்கப்படும் முடிவுகளுக்கு பொறுப்புக்கூற எவரும் இருக்கவில்லை.

**வேலுசாமி இராதாகிருஷ்ணன்:**
**ஐக்கிய மக்கள் சக்தி எம். பி.**

சீனாவின் செல்லப் பிராணியாக இருப்பதை விடுத்து இந்தியாவின் செல்லப் பிள்ளையாக அயல்நாட்டின் நட்புறவைப் பேணிப்பாதுகாப்பதில் அரசாங்கம் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

நாட்டில் ஒரே நாடு ஒரே சட்டம் நடைமுறையில் உள்ளதாக அரசாங்கம் குறிப்பிட்டாலும் ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஒவ்வொரு சட்டம் இருப்பதையே காணமுடிகிறது.

அரசாங்க ஊழியர்களுக்கு அரசாங்கம் 5,000 ரூபாய் சம்பள அதிகரிப்பை வழங்கியுள்ள நிலையில் மலையக மக்களுக்கு அது கிடைக்கவில்லை. தெற்கில் ஒரு சட்டம் மலையகத்தில் ஒரு சட்டம் என செயற்படுத்தப்படுகிறது.

மத ரீதியில் பிளவுகளை ஏற்படுத்தும் வகையில் சில சக்திகளால் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. கத்தோலிக்க தேவாலயங்களில் குண்டுகளை வைப்பதும் அக்கரப்பத்தனை பகுதியில் மூன்று தேவாலயங்கள் உடைக்கப்பட்டுள்ளதையும் குறிப்பிட முடியும்.அது தொடர்பில் அரசாங்கம் உரிய கவனம் செலுத்த வேண்டும். ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரையில் நாட்டின் தற்போதைய பிரச்சினைகளுக்கு எத்தகைய தீர்வும் முன்வைக்கப்படவில்லை.

பால் மாவுக்கு தட்டுப்பாடு எரிவாயு தட்டுப்பாடு என்ற நிலை தொடரும்போது மக்கள் தொழிலுக்குச் செல்வதா வரிசையில் நின்று அத்தியாவசியப் பொருட்களை வாங்குவதா என்ற நிலை நாட்டில் உருவாகியுள்ளது. இரண்டு, மூன்று தினங்களுக்கே எரிபொருள் கையிருப்பு உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.அதன்பின் அரசாங்கம் என்ன செய்யப் போகிறது?

**அனுர பிரியதர்ஷன யாப்பா:**
**பொது ஜன பெரமுன எம்.பி**

ஏற்றுமதி இறக்குமதி வருமானம் தொடர்பில் முக்கிய கவனம் செலுத்துவதன் மூலமே நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியும்.

அதற்கிணங்க ஏற்றுமதி உற்பத்தித் துறையை மேம்படுத்துவதன் மூலமே நாட்டின் பொருளாதாரத்தை பலப்படுத்த முடியும்.

அத்துடன் தொடர்ச்சியாக நாம் நம்பிக் கொண்டிருக்கும் துறைகளில் மட்டும் கவனம் செலுத்தாமல் மாற்று வருமானத்திற்கு முக்கியத்துவம் அளித்து பொருளாதார மறுசீரமைப்பை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

வெளிநாட்டு அந்நிய செலாவணியை பெற்றுக் கொள்ளுதல் மற்றும் சுற்றுலாத்துறை வருமானம் ஆகிய இரண்டை மட்டுமே நாம் நாட்டின் பொருளாதாரத்திற்காக எதிர்பார்த்துள்ளோம். எனினும் கடந்த இரண்டு வருட கால கொரோனா சூழ்நிலையில் அந்த வருமானங்கள் இழக்கப்பட்டுள்ளன.

எமது முக்கிய கேந்திர நிலையங்களான மின்சார சபை, இலங்கை போக்குவரத்து சபை, விமான சேவை நிறுவனம், பெற்றோலியக் கூட்டுத்தாபனம் போன்ற நிறுவனங்கள் வெளிநாட்டுடன் சம்பந்தப் படுகின்றன.

இந்த நிறுவனங்கள் தொடர்ச்சியாக நட்டத்தில் இயங்கி திறைசேரி மூலமே அவற்றுக்கான நிதியை வழங்க வேண்டியுள்ளது.இத்தகைய நிலையில் திறைசேரி மூலம் அந்த நிறுவனங்களுக்கு நிதி வழங்காமல் அந்த நிறுவனங்கள் மூலமே அவற்றுக்கான நிதியை பெற்றுக்கொள்வதற்கான மாற்று செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

**வடிவேல் சுரேஷ்**
**( ஐக்கிய மக்கள் சக்தி எம். பி)**

அரசாங்க ஊழியர்களுக்கு அரசாங்கம் 5000 ரூபா கொடுப்பனவொன்றை வழங்கியுள்ள நிலையில் தோட்டத் தொழிலாளர்களுக்கும் அதனைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தொழிலமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தோட்ட கம்பனிகளுடன் அது தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தி உரிய பணிப்புரைகள் வழங்க வேண்டியது அவசியம்.

நாட்டை நேசிக்கும் மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் தொடர்பில் அரசாங்கம் உரிய கவனம் செலுத்தத் தவறியுள்ளது. தோட்டத் தொழிலாளர்களின் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் நாம் பாராளுமன்றத்திலும் வெளியிலும் விடயங்களை முன்வைத்து வரும்போதும் அரசாங்கத்தினால் அதற்கான கவனம் செலுத்தப்படவில்லை.

நாட்டில் தொழில் சட்டங்கள் நடைமுறையில் உள்ள போதும் மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்கு அந்த சட்டங்கள் மூலமான பிரதிபலன்கள் கிடைப்பதில்லை.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பாராளுமன்றத்தில் அரசாங்கத்தின் கொள்கை விளக்கவுரையை நிகழ்த்திய போதும் பெருந் தோட்டத் தொழிலாளர்கள் தொடர்பில் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

அனைத்து அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ள நிலையில் மக்கள் தமது வாழ்வாதாரத்தை கொண்டு நடத்துவதில்பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர்.அது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம்.

தினகரன் விளம்பரம்
0112429367

விற்பனை பிரிவு
0112429444,
0112429378

ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 ஜனவரி 20 வியாழக்கிழமை

தினகரன்
THINAKARAN
තිනකරන්




**தொழுகை நேரம்**

18முதல் 20 வரை

| | |
|---|---|
| சுபஹ் | 05.08 |
| ளுஹர் | 12.22 |
| அஸர் | 03.44 |
| மஃரிப் | 06.15 |
| இஷா | 07.29 |

**இன்றைய சுபதினம்**

பிலவ வருடம் தை 7

ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை

யோகம்: சித்தஅமிர்த யோகம்

திதி: திரிதியை



யாழ்பாணம் சத்திரம் அருள்மிகு ஸ்ரீ ஞான வைரவர் தேவஸ்தானத்தில் பட்டிப் பொங்கல் தினத்தன்று ஏற்பாடு செய்யப்பட்ட 'கோமாதா உற்சவம் 2022' சிறப்பு நிகழ்வில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிற்கு வழங்கப்பட்ட நினைவுச் சின்னத்தை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதமரிடம் கையளித்தார். கோமாதா மற்றும் இடபவதைக்கு எதிராக பிரதமர் மேற்கொண்டுள்ள தீர்மானத்திற்கு நன்றி தெரிவிக்கும் வகையில் விழா ஏற்பாட்டாளர்களினால் குறித்த நினைவுச் சின்னம் வழங்கி வைக்கப்பட்டது.

# நிதி அமைச்சர் பஷிலை விடுவிப்பதா? நீதிமன்றின் தீர்மானம் பெப்ரவரி 1இல்

முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரும் தற்போதைய நிதி அமைச்சருமான பஷில் ராஜபக்ஷ, முன்னாள் திவிநெகும பணிப்பாளர் தமித் கித்சிறி ரணவக்க ஆகியோருக்கு எதிராக சட்டமா அதிபர் தாக்கல் செய்துள்ள வழக்கின் முறைப்பாட்டாளர் தரப்பு சாட்சி நெறிப்படுத்தல் நிறைவடைந்துள்ளது.



நேற்றைய தினம் (19) குறித்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது, வழக்கை நெறிப்படுத்தும் சட்டமா அதிபர் தரப்பில் சட்டவாதி இதனை மன்றுக்கு அறிவித்தார்.

இந் நிலையில் வழக்கின் பிரதிவாதி தரப்பு சாட்சியங்களை ஆராயாது பிரதிவாதிகளை விடுவிப்பதா அல்லது, பிரதிவாதி தரப்பு சாட்சிகளை அழைப்பதா என்ற தீர்மானத்தை அறிவிக்க வழக்கை எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதலாம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்வதாக நீதிபதி தமித் தொட்டவத்த அறிவித்தார்.

திவி நெகும் திணைக்களத்துக்கு சொந்தமான 2 கோடியே 94 இலட்சம் ரூபாவை, தேர்தல்கள் ஆணையாளரின் சுற்று நிருபத்தையும் மீறும் வகையில் கடந்த 2015 ஆம் ஆண்டுக்கான பஞ்சாங்கங்கள் அச்சிடப்பட்டுள்ளதாகவும் இதனூடாக அரசாங்க பணம் விரயம் செய்யப்பட்டுள்ளதாகவும் கூறி 5 குற்றச்சாட்டுக்களின் கீழ் அந்த குற்றப் பத்திரிகை பஷில் ராஜபக்ஷ, கித்சிறி ஜயலத் ஆகியோருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## கொவிட் தொற்றுக்குள்ளான நிலையிலுள்ள மாணவர்கள் பரீட்சைக்கு தோற்ற சந்தர்ப்பம்



கொவிட் வைரஸால் பாதிக்கப்பட்ட, தனிமைப்படுத்தப்பட்ட அல்லது நோய் அறிகுறிகளை வெளிப்படுத்தும் மாணவர்களுக்கு இந்த ஆண்டு நடைபெறவுள்ள க.பொ.த உயர்தரம் மற்றும் புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றுவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும், வீட்டிற்கும் பரீட்சை எழுதும் மத்திய நிலையத்திற்கும் இடையில் அதிக தூரம் காணப்படுமிடத்து, அவ்வாறானவர்கள் வீட்டிற்கு அருகில் உள்ள விசேட பரீட்சை நிலையத்தில் பரீட்சை எழுத முடியும் என குடும்ப சுகாதார பணியகத்தின் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் சித்ரமாலி டி சில்வா தெரிவித்துள்ளார்.

நிதியை வழங்கியது மத்திய வங்கி:

## எரிபொருள் நெருக்கடிக்கு தற்காலிக தீர்வு கிடைத்தது

கொழும்பு துறைமுகத்தில் உள்ள 2 கப்பல்களில் இருந்து எரிபொருளைப் பெறுவதற்கு மத்திய வங்கி நிதி வழங்கியுள்ளதாக அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

அதன்படி 37 ஆயிரம் மெட்றிக் தொன் எரிபொருள் பெற்றுக் கொள்ளப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

8 நாட்களுக்கு போதுமான 10 ஆயிரம் மெட்றிக் தொன் எரிபொருள் மின்சார சபைக்கு வழங்கப்படும் என்றும் அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

எரிபொருளை விடுவிப்பதன் மூலமாக, நாட்டில் மின் தடை ஏற்படாது என்பதோடு மூடப்பட்ட மின் உற்பத்தி நிலையங்களை மீண்டும் திறக்க வாய்ப்புள்ளது.

இதேவேளை, இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனமானது எரிபொருள் விநியோகம் தொடர்பாக ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கை காரணமாக நாட்டில் மின்வெட்டு ஏற்படாது என அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

## கொவிட் தொற்றுக்குள்ளான சிறுவர் தொகை அதிகரிப்பு

பெற்றோருக்கு சுகாதார தரப்பு அறிவுறுத்து



கொழும்பு சீமாட்டி ரிஜ்வே வைத்தியசாலையில் கொவிட் தொற்று உறுதியான நிலையில் சிகிச்சை பெறும் சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இதற்கமைய சிறுவர்களுக்கு கொவிட் பரவுவதைக் கட்டுப்படுத்துவதற்காகச் சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றுமாறு சுகாதார தரப்பினர் வலியுறுத்துகின்றனர்.

கொழும்பு சீமாட்டி ரிஜ்வே வைத்தியசாலையில் கொவிட் தொற்று உறுதியான 31 சிறுவர்கள் தற்போது சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கடந்த மாத ஆரம்பத்தில் குறித்த வைத்தியசாலையில் கொவிட் தொற்று உறுதியான 4 சிறுவர்கள் மாத்திரமே சிகிச்சை பெற்றிருந்தனர். எனினும் இந்த எண்ணிக்கை தற்போது 31 ஆக அதிகரித்துள்ளது.

எனவே, சிறுவர்களைப் பாடசாலைக்கு அனுப்பும் போதும் வேறு இடங்களுக்கு அனுப்பும் போதும் உரிய சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றுமாறு சுகாதார தரப்பினர் வலியுறுத்தியுள்ளனர்.


மக்கள் வங்கியின் ஊடாக
WesternUnion WU பணத்தினை
அதிகம் பெற்று
அதிகம் வெல்லுங்கள்



ரூ. 1,000,000/- பெறுமதியான
பரிசு வாய்ப்புகளை பெறுங்கள்

வெஸ்டர்ன் யூனியன் ஊடாக அனுப்பும் பணத்தை மக்கள் வங்கியிடமிருந்து பெற்று, தலா ரூ.10,000/- பணப்பரிசினை வெல்லும் அதிர்ஷ்டசாலிகள்

மார்ச், ஏப்ரல், மே - 2021

| மார்ச் | | ஏப்ரல் | | மே | |
|---|---|---|---|---|---|
| கிளை/சேவை நிலையம் | வெற்றியாளர் | கிளை/சேவை நிலையம் | வெற்றியாளர் | கிளை/சேவை நிலையம் | வெற்றியாளர் |
| மிஹிந்தலை சே.நி. | என்.பி. லஹிரு தேஷான் | அநுராதபுரம் | கே. கல்யாணவதி | எப்பாவல | டீ. டபிள்யூ. ஜீ. ஆர். திலீப் சோமரத்ன |
| மஹியங்கனை | எஸ். டீ. என். சி. சேசத் தேவகே | மீகஹாகிவுல | எம். சமீரா பிரசாத் | மஹியங்கனை | ஜே. எம். ஏ. தாரக ரத்நாயக்க |
| சித்தன்டி சே.நி. | ஈ. நேசம்மா | மட்டக்களப்பு டவுன் | எஸ். கிஷானிகா | கிரண்குளம் சே.நி. | டி. தனுஷ்கரன் |
| தலவத்துகொட சே.நி. | டி. டீ. கமகே | ஹோமாகம | டீ. ஷிரியானி ரணசிங்ஹ | அவிசாவளை | எம். லோகநாதன் |
| நிட்டம்புவ | எம். சாஹிரா முனா.ஃபர் | கொட்டிகாவத்தை | எம். எச். யசவதி | வத்துபிட்டிவல சே.நி. | பி. ஜீ. டீ. அப்சரா விமல் |
| காலி பிரதான வீதி | பி. பீ. ரோஹினி | சீதுவை | டபிள்யூ. லீலாவதி சொய்ஸா | உரகஸ்மன்ஹந்திய | கே. பி. நந்தனசீலி |
| கோப்பாய் சே.நி. | வி. பிரசாத் | காலி பிரதான வீதி | எம். எச். ரிஸ்லான் | பண்டத்தரிப்பு சே.நி. | என். எட்வின் குமார் |
| கலகெதர | எச். பி. டி. ஹிமாலி தர்மசிங்ஹ | வல்வெட்டித்துறை | டி. ஞானசேகரம் | கண்டி | பி. எம். அமிதா உம்மா |
| மத்துகம | எல். டீ. தீபானி பிரியங்கிகா | அக்குரண | எம். எஸ். எம். அப்துல் ரஸாக் | ஹொரணை | எம். சுரேஷ் குமார |
| பிதுருவெல சே.நி. | எல். ஜீவராணி | மத்துகமை | டபிள்யூ. ராஜரத்னம் | மலியதேவ சே.நி. | எச். எஸ். ஆர். சி. ரணசிங்ஹ |
| மாஸ்பொத சே.நி. | எம். டீ. ஹேமாகுமாரி | மல்லவபிட்டிய சே.நி. | எச். பி. என். அக்ஷானி பண்டார | கரவனெல்ல சே.நி. | எச். கருணாதிலக்க |
| தேவாலேகம சே.நி. | எஸ். யொஹான் | புலத்கொஹுபிட்டிய | எம். எல். எஸ். பிரதீப் லக்சிறி | கம்புருபிட்டிய | கே. ஜே. ரம்யலதா |
| கிரிந்த புஹுல் வெல்ல | எம். நயீம் சித்தி | பிட்டபெத்தர | டீ. தினேஷிகா வீரநாயக்க | மடவல உல்பொத்த சே.நி. | ஏ. ஜீ. ரன்மெனிக்கா |
| பல்லேபொல சே.நி. | கே. டீ. சுமனாவதி | மாத்தளை | டபிள்யூ. மாயழகு | ஹட்டன் | ஜே. சகாயமணி |
| அக்கரப்பத்தன சே.நி. | எஸ். சுவாகரன் | ஹட்டன் | கே. முரளிதரன் | உடவலவ | எல். அமிதா ரோஹினி |
| குருவிட்ட | ஈ. பி. நிரஞ்சனி விஜேகுமாரி | அயகம | பி. ஜி. குமாரதுங்க | ஒலுவில் சே.நி. | இப்ரா லெப்பை அப்துல்லா |
| பொத்துவில் | எம். எம். நஜீப் | நிந்தவூர் | எம். மொஹமட் இஷாக் | உஹன | கே. ஜீ. எல். ஹர்ஷா |
| கந்தளாய் | டீ. எம். நிமல் விஜேரத்ன | தோப்பூர் சே.நி. | பி. டி. எம். முனீர் | தோப்பூர் சே.நி. | எம். ஜுனைதீன் மொஹமட் |
| பக்கமூன | டீ. ஜீ. ஜீ. எஸ். நதீஷா | பக்கமூன | எம். சுதர்ஷனி | ஹிங்குரங்கொட | பி. ஆர். ரம்யலதா |
| வெல்லவாய | பீ. எல். மொரீன் உர்சுலா | படல்கும்புர | ஜீ. எம். காமினி | தனமல்வில | எல். ஏ. புஷ்பா குமுதினி |
| தங்கொட்டுவ | டபிள்யூ. சசிந்தி தாரிகா | மாரவில | பி. ஏ. டீ. பீ. கே. அப்புஹாமி | கல்பிட்டி | எம். ஏ. ருவனி தில்ருக்ஷி |
| பரந்தன் | கே. துரைராசா | முருங்கன் | எஸ். திரேசா | வவுனியா | வி. பிரியதர்ஷினி |
| மல்வத்த வீதி | டபிள்யூ. பீ. எம். ஜீ. புஷ்ப குமார | கொட்டாஞ்சேனை | எஸ். சிறிமான்னே | கொட்டாஞ்சேனை | கே. பி. டீ. எஸ். பெர்னான்டோ |
| யூனியன் பிளேஸ் | எஸ். டபிள்யூ. எஸ். ரசிகா சம்பத் | கொம்பனி வீதி | ஜி. ஃபரீடா அமித் | வெள்ளவத்தை | எஸ். பிரபாஹரன் |
| ஹம்பாந்தோட்டை | ஜே. கே. நந்தா மாலனி | வலஸ்முல்ல | டபிள்யூ. மாலன் விக்ரமாரச்சி | வீரக்கெட்டிய | ஏ. பி. மதுரங்க |

*நிபந்தனைகள் உண்டு

www.peoplesbank.lk
1961 PEOPLE'S BANK CALL CENTRE
PEOPLE'S BANK
Pride of the Nation
AA- (lka) Fitch Rating, AAA- Brand Finance Rating
People's Bank is a licensed commercial bank supervised by the Central Bank of Sri Lanka.

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

பிலவ வருடம் தை மாதம் 07ம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ஜுமாதல் ஆகிறா பிறை 16


### குறள் தரும் சிந்தனை



எய்தற் கரியது இயைந்தக்கால் அந்நிலையே
செய்தற் கரிய செயல்

கிடைப்பதற்கு அரிய காலம் வாய்க்கும் போது அதைப் பயன்படுத்திக் கொண்டு, அப்போதே செயற்கரிய செய்து முடிக்க வேண்டும்.

# அபிவிருத்திக்கான சந்தர்ப்பத்தை தமிழர் தரப்பு தவற விடலாகாது!

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பாராளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் ஆற்றிய சிம்மாசன உரையானது அரசியல் தரப்பினர் உட்பட பலதரப்பினரதும் கவனத்தை ஈர்த்திருக்கின்றது. ஜனாதிபதியின் இந்த உரையானது தமிழ் அரசியல் தரப்பைப் பொறுத்தவரை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஏனெனில் வடக்கு, கிழக்கின் அபிவிருத்தி தொடர்பாகவும், தமிழ் அரசியல்வாதிகள் வழங்க வேண்டிய ஒத்துழைப்பு குறித்தும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது உரையில் சுட்டிக் காட்டியுள்ளார்.

அதாவது ஜனாதிபதி தனது உரையில் வடக்கு, கிழக்கின் அபிவிருத்திக்கு முக்கியத்துவமளித்திருப்பதை அவதானிக்க முடிகின்றது. அதற்கான ஆதரவையும் தமிழ் அரசியல் தரப்புகளிடம் அவர் கோரியிருப்பதை அவதானிக்க முடிகின்றது.

'இருள் சூழ்ந்த கடந்த கால ஞாபகங்களை ஒருபுறம் வைத்து விட்டு அனைத்து சமூகங்களும் சமாதானத்துடனும், சகவாழ்வுடனும் வாழக் கூடிய பாதுகாப்பான நாடொன்றை உருவாக்குவது எமது நோக்கமாகும். இதற்காக அனைவரும் இன, மத, அரசியல் வேறுபாடுகளின்றி ஒன்றிணைதல் வேண்டும்' என்று ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார்.

'யுத்தத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மக்களின் வாழ்க்கையை வழமை நிலைமைக்கு கொண்டு வருவதற்கு நாங்கள் பாரிய முதலீடுகளைச் செய்துள்ளோம். நாங்கள் இனவாதத்தை நிராகரிக்கின்றோம். நாட்டில் வாழும் அனைத்து பிரசைகளும் கௌரவத்துடன் வாழ்வதற்கும், அவர்களது அனைத்து உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் நாங்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றோம். இதனால் குறுகிய அரசியல் நோக்கங்களின் அடிப்படையில் மக்களை ஒருவர் மீது ஒருவரை ஏவி விடுவதை தற்போதாவது நிறுத்துமாறு அவ்வாறான அரசியல்வாதிகளிடம் வேண்டுகோள் விடுகின்றோம்' என்று ஜனாதிபதி கேட்டுள்ளார்.

இன்றைய அரசியல் சூழலைப் பொறுத்தவரை ஜனாதிபதியின் இந்த வேண்டுகோளானது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். முப்பது வருட காலம் நிலவிய உள்நாட்டு யுத்தத்தின் விளைவாக கொடுமையான அவலங்களை எமது நாடு சந்தித்து வந்துள்ளது. கொடிய யுத்தத்தின் விளைவாக எமது நாடு அனுபவித்த வேதனைகளை வார்த்தைகளால் விபரிக்க இயலாது. யுத்தத்தின் போது தமிழ் மக்கள் மாத்திரமன்றி ஏனைய இன மக்களும் பாதிக்கப்பட்டனர்.

உள்நாட்டு யுத்தமானது இலங்கையின் வரலாற்றில் ஆறாத வடுவாகவே என்றும் இருக்கப் போகின்றது. அதன் பாதிப்புகள் பல தலைமுறைகளுக்குத் தொடரப் போகின்றன. யுத்தத்தினால் தமிழினம் கண்ட பலன் எதுவுமே இல்லை. உயிரழிவுகளும், உடைமை அழிவுகளுமே எஞ்சியுள்ளன. அதேசமயம் ஏனைய இனங்களும் யுத்த காலத்தில் நிம்மதியாக வாழ்ந்ததில்லை. ஒட்டுமொத்த நாடும் இப்போதுதான் நிம்மதிப் பெருமூச்சு விடுகின்றது.

இலங்கையைப் பொறுத்தவரை இதுவொரு கொடியதும், வெறுக்கத்தக்கதுமான அனுபவம் ஆகும். இனங்களுக்கிடையில் ஐக்கியம் பேணப்பட்டாலேயே முழுநாடும் சுபிட்சமடையுமென்பதை கொடிய யுத்தம் எமக்கெல்லாம் நன்கு உணர்த்தியிருக்கின்றது. இனங்களுக்கிடையில் பேதங்களை வளர்த்தவாறு நாம் தொடர்ந்தும் பயணிக்க முடியாதென்பதையும் கடந்த கால கசப்பான வரலாறு எமக்கெல்லாம் உணர்த்தியிருக்கின்றது.

யதார்த்த நிலைமை இவ்வாறிருக்கையில், வடக்கின் அரசியல் தரப்புகள் தங்களது அரசியலை பயனுள்ள முறையில் முன்னெடுக்க வேண்டிய அவசியம் தற்போது ஏற்பட்டுள்ளது. வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் இன்றைய உண்மையான எதிர்பார்ப்பு என்னவென்பதையிட்டு தமிழ் அரசியல் கட்சிகள் தமக்குள் சுயபரிசோதனை செய்து கொள்வது இப்போது அவசியம். தேர்தலை இலக்கு வைத்து தமிழ்க் கட்சிகள் வெறும் வார்த்தைகளை எப்போதுமே அள்ளி வீசுவதையே வாடிக்கையாகக் கொண்டுள்ளன.

வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் அபிவிருத்திக்காக ஏங்கிக் கொண்டிருக்கையில், தமிழ் அரசியல் கட்சிகளோ சாத்தியமற்ற நிகழ்ச்சித் திட்டங்களை தமிழ் மக்கள் முன்னிலையில் கூறிக் கொண்டிருப்பதையே எப்போதும் காண முடிகின்றது. தமிழ் அரசியல் கட்சிகள் முன்வைக்கின்ற யோசனைகள் ஒருபோதுமே சாத்தியமாகப் போவதில்லையென்ற யதார்த்தம் அக்கட்சிகளுக்கு புரியாததல்ல. ஆனாலும் வடக்கு, கிழக்கு தமிழ் மக்களை உருவேற்றும் அரசியலையே அக்கட்சிகள் எந்நாளும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

வடக்கு, கிழக்கில் தமிழர்களின் அரசியல் இவ்வாறு வீணாக நகர்ந்து கொண்டிருக்கையில், அங்கே மற்றொரு புறத்தில் அபிவிருத்திகள் வேகமாக நடைமுறைப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. தமிழர்களின் பிரதேசங்கள் நீண்ட காலமாக அபிவிருத்தி செய்யப்படாமல் கிடப்பதை கண்கூடாகவே காண முடிகின்றது. அரசின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு தமிழ் அரசியல் தரப்புகள் ஒத்துழைப்பு வழங்காததன் விளைவுதான் இது.

இவ்வாறான சூழலில் வடக்கு, கிழக்கின் அபிவிருத்தி தொடர்பாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விடுத்திருக்கும் அழைப்பை அங்குள்ள தமிழர் தரப்புகள் அனுகூலமான முறையில் கவனத்தில் கொள்வதே உசிதமாகும். அரசியல் தீர்வு தொடர்பாக அக்கட்சிகள் குரல் கொடுப்பதில் தவறில்லை. ஆனால் அபிவிருத்திக்கான சந்தர்ப்பத்தைத் தவற விடக் கூடாதென்பதே தமிழர்களின் எண்ணமாகும்.

editor.tkn@lakehouse.lk

# கொழும்பு துறைமுக நகரை பார்வையிட ஒரு வாரத்தினுள் 90,000 பேர் வருகை




கொழும்பு துறைமுக நகரத்தின் கடற்கரை நடைபாதை ஜனவரி 10 அன்று பொதுமக்களுக்காக திறக்கப்பட்ட நாள் முதல் இதுவரை சுமார் 90,000 பார்வையாளர்கள் வருகை தந்துள்ளதுடன், இது கொழும்பில் கட்டாயமாக பார்க்க வேண்டிய பிரபல இடமாக மாறியும் உள்ளது.

புதிய அழகிய நிலப்பரப்பை நோக்கி பெருவாரியாக மக்கள் வருகை தர ஆரம்பித்துள்ள நிலையில், காலிமுகத்திடலில் இருந்து பொதுமக்களுக்காக திறக்கப்பட்ட கதவுகளுக்கு வெளியே பெரும் வரிசையில் மக்கள் நிற்பதுடன், புதிய நிலப்பரப்பைப் பார்வையிட பொதுமக்கள் மிகுந்த ஆர்வத்துடன் அணிதிரள்வதை காணக்கூடியதாகவும் உள்ளது.

குறிப்பாக பொதுமக்களுக்காக திறக்கப்பட்ட முதல் வாரமான ஜனவரி 10 முதல் 17 ஆம் திகதி வரை விடுமுறை நாட்களில் எப்போதும் இல்லாத அளவில் மக்கள் பெருமளவில் ஒன்றுதிரண்டு பார்வையிட வருகை தந்துள்ளனர். கடற்கரை நடைபாதையானது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் சீன வெளிவிவகார அமைச்சர் வாங் யி ஆகியோரால் ஜனவரி 9 அன்று சம்பிரதாயபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

## மக்கள் பார்த்து ரசிக்க வேண்டிய மனங்கவர் கடற்கரை நடைபாதை





கொழும்பு துறைமுக நகரத்தின் கடற்கரை நடைபாதையானது பாரிய செயற்திட்டத்தில் பொதுமக்கள் செல்லக் கூடிய முக்கிய இடமாகும். இலங்கை மற்றும் சீனா இடையில் முறையான இராஜதந்திர உறவுகள் ஸ்தாபிக்கப்பட்டு 65 ஆண்டுகள் நிறைவு பெற்றுள்ளமை மற்றும் இரு நாடுகளுக்கும் இடையில் வரலாற்றுச் சிறப்பு மிக்க இறப்பர்_ அரிசி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு 70 ஆண்டுகள் நிறைவு பெற்றுள்ளமை ஆகிய இரண்டு நிகழ்வுகளின் பூர்த்தியை ஒட்டியதாக இந்த திறப்பு விழா இடம் பெற்றுள்ளது.



ஜனவரி 10 முதல் 17 வரையிலான வாரத்தில் மொத்தமாக 89,540 பேர் கடற்கரை நடைபாதைப் பகுதிக்கு வருகை தந்துள்ளனர். 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று 25,580 பேர் வருகை தந்துள்ளமை இதுவரை நாளொன்றில் வருகை தந்துள்ள அதிகூடிய எண்ணிக்கையிலான பார்வையாளர்களாக பதிவு செய்யப்பட்டுள்ளது. அதற்கு அடுத்த அதிகபட்ச எண்ணிக்கையாக வெள்ளிக்கிழமை மற்றும் திங்கட்கிழமை ஆகிய இரண்டு விடுமுறை நாட்களும் பதிவாகியுள்ளதுடன், முறையே 19,717 மற்றும் 21,665 பார்வையாளர்கள் வருகை தந்துள்ளனர்.

கடற்கரை நடைபாதையானது 500 மீற்றர் நீளமான நடைபாதையைக் கொண்ட அழகிய நிலப்பரப்பைக் கொண்டுள்ளதுடன், கொழும்பு துறைமுக நகருக்குள் பொதுமக்களுக்காக திறக்கப்படும் என எதிர்பார்க்கப்படும் பல பொதுப் பகுதிகளில் இதுவும் ஒன்றாகும். 53 ஏக்கர் பசுமையான இடங்கள், 2 கி.மீ கடற்கரை மற்றும் மத்திய பூங்காவிற்கு 14 ஏக்கர் நிலம், நடைபாதைகள், நீர்வழிகள் மற்றும் பூங்கா இணைப்பு பாதைகள் என மொத்தம் 91 ஹெக்டேயர் நிலம் பொதுப் பயன்பாட்டுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

கடற்கரை நடைபாதையானது பொது மக்களுக்காக காலை 9.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை திறந்திருக்கும் என்பதுடன், ஜனாதிபதி செயலகத்திற்கு எதிரே அமைந்துள்ள விசேட நுழைவாயிலின் ஊடாக பொதுமக்கள் உள்நுழைய முடியும். தற்போது வாகனங்கள் உள்ளே செல்வதற்கு அனுமதிக்கப்படுவதில்லை என்பதுடன், பொதுமக்கள் தங்கள் வருகையின் போது கொவிட்19 தொடர்பான அனைத்து தடுப்பு வழிகாட்டுதல்களையும் பின்பற்றுமாறு ஊக்குவிக்கப்படுகிறார்கள்

பார்வையாளர்கள் அதிக எண்ணிக்கையில் இருப்பதாலும், பொதுமக்களின் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டும், கடற்கரை நடைபாதையில் எந்த நேரத்திலும் அதிகபட்சமாக 700 பேர் மட்டுமே உட்செல்வதற்கு அனுமதி வழங்க இத்திட்ட அதிகாரிகள் முடிவு செய்துள்ளனர்.

கொழும்பு துறைமுக நகரம் என்பது கொழும்பின் வணிக மையமான மத்திய வர்த்தக மாவட்டத்தின் நீட்டிப்பாக, கடலில் இருந்து மீட்டெடுக்கப்பட்ட 269 ஹெக்டேயர் பரப்பளவில் வியாபித்துள்ளது. உலகத்தரம் வாய்ந்த நகரத்தை கட்டியெழுப்புவதன் மூலம் வாழ்வதற்கு சிறந்த இடங்களில் ஒன்றாக கொழும்பின் நிலத்தோற்றத்தை அதிகரித்துக் கொள்ள முடிந்துள்ளது. சர்வதேசமயமாக்கலை விரைவுபடுத்துவதன் மூலம் நிலைபேண்தகு பொருளாதார எதிர்காலத்தை உறுதிசெய்ய திறமைசாலிகளையும் முதலீட்டையும் ஈர்ப்பதை துறைமுக நகரம் நோக்கமாகக் கொண்டுள்ளது. அண்மையில் இயற்றப்பட்ட கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட பல சேவை சிறப்புப் பொருளாதார வலய அந்தஸ்து, கிழக்கு மற்றும் மேற்கை இணைக்கும் இலங்கையின் புவியியல் இருப்பிடத்தை மேம்படுத்துவதற்கு கொழும்பை சிறந்த தளமாக மாற்றும்.

# உடல் உபாதைகளை தீர்ப்பதில் 'மூலிகைகளின் அரசி' துளசி


நவீன வாழ்க்கை முறை காரணமான நாட்பட்ட நோய்களால் உலகளாவிய ரீதியில் மக்கள் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். பலவித ஆரோக்கியமான வாழ்க்கை நடைமுறைகள், உணவுப் பழக்கவழக்கங்கள் மற்றும் மூலிகைகளின் நுகர்வு என்பவற்றில் கவனம் செலுத்துவதன் மூலம் நோய்கள் மற்றும் இறப்பு வீதத்தைக் குறைக்கலாம்.

அனைத்து மூலிகைகளிலும் துளசி முதன்மையானது. அத்துடன் தற்போது அறிவியல் ஆராய்ச்சி அதன் மருத்துவ நன்மைகளை உறுதிப்படுத்துகின்றது. துளசியின் இலை, தண்டு, பூ, வேர் என அனைத்து பகுதிகளும் மருத்துவகுணம் வாய்ந்தவை. துளசி என்பது Lamiaceae (tribe Ocimeae) குடும்பத்தில் உள்ள மூலிகைச் செடி ஆகும். இது வடமத்திய இந்தியாவில் தோன்றியதாக கருதப்படுகின்றது. தற்போது கிழக்கு உலக வெப்ப மண்டலங்கள் முழுவதும் வளர்கின்றது. இவற்றில் 9 இனங்கள் காணப்படுகின்றன.

மூலிகை மருத்துவத்தில் துளசியானது 'ஒப்பற்ற ஒன்றாக, இயற்கை மருத்துவப் பொருளாக, மூலிகைகளின் அரசியாக, வாழ்க்கையின் அமுதமாக கருதப்படுகின்றது. துளசி குணமாக்கும் நோய்கள் ஏராளமாகும். அதனால்தான் இது 'மூலிகைகளின் அரசி' என அழைக்கப்படுகின்றது.

வீடுகளில் துளசிச் செடியை கடவுளாக வணங்குகின்றார்கள். துளசிச் செடியற்ற நந்தவனத்தை காண முடியாது. பொதுவாக துளசி படர்ந்துள்ள இடத்தை 'பிருந்தாவனம்' என்று சொல்வார்கள்.

மன அழுத்தம் என்பது தற்போது அதிகம் உள்ளது. துளசி இலையை தினமும் சாப்பிட்டு வந்தால் அதில் உள்ள 'அடாப்டேஜென்' மனஅழுத்தத்தைக் குறைக்கும். துளசியின் மருத்துவ குணங்கள் பற்றி நூற்றுக்கணக்கான அறிவியல் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த ஆய்வுகளின் அறிக்கைகளின்படி துளசிக்கு தனித்துவமான பல மருத்துவ பண்புகள் உள்ளன என்பது அறியப்பட்டுள்ளது.



துளசியில் உயிர்ச்சத்து சி மற்றும் நாகச்சத்து அதிகளவில் காணப்படுவதன் காரணமாக இது வைரஸ், பக்ரீரியா மற்றும் பங்கசு போன்ற தொற்றுகளிலிருந்து பாதுகாப்பதுடன் உடலின் இயற்கையான நோயெதிர்ப்பு சக்தியையும் அதிகரிக்கின்றது. மேலும் சுரம் ஏற்படும் நிலைகளில் உடல் வெப்பநிலையை குறைப்பதிலும் பெரும் பங்காற்றுகின்றது. துளசி இலைகளை ஏலத்துடன் சேர்த்து ஒரு கோப்பை நீரில் வேகவைத்து அதனுடன் பால், சீனி சேர்த்து அருந்த சுரம் தணியும். துளசியிலைச் சாற்றுடன் மிளகு பொடி சேர்த்தும் அருந்தலாம். அல்லது 10 துளசியிலைகளுடன் 5 மிளகு தட்டிச் சேர்த்து அதனுடன் 2 கோப்பை நீர் சேர்த்து சுண்டக் காய்ச்சி வடிகட்டி அருந்துவதாலும் காய்ச்சல் படிப்படியாகக் குறையும்.

துளசியிலைச் சாற்றுடன் தேன், இஞ்சிச் சாறு சேர்த்து அருந்துவதால் இருமல், சளி, இழுப்பு, தடிமன் போன்ற நிலைகளிலிருந்து நிவாரணம் கிடைக்கும். துளசிச் சாற்றுடன் எலுமிச்சை சாற்றையும் கலந்து சூடாக்கி சிறிதளவு தேன் சேர்த்து உணவின் பின் உள்ளெடுத்து வர உடல் எடை படிப்படியாகக் குறையும். தினமும் 10 துளசியிலைகளை வாயிலிட்டு மென்று வர வாயில் உண்டாகும் துர்நாற்றம் தீரும். சாற்றை உள்ளுக்குள் விழுங்கி வர வாய் மற்றும் குடல் பகுதிகளில் ஏற்படும் நோய்கள் தீரும். அத்துடன் இரத்தம் சுத்தியாகும். அதேபோல ஒரு செம்பு பாத்திரத்தில் நீர் விட்டு அதனுடன் கைப்பிடியளவு துளசியிலைகளை சேர்த்து 8 மணித்தியாலம் மூடிவைத்து வெறும் வயிற்றில் அந்நீரை அருந்தி வர வேண்டும். இதனால் சமிபாடு மேம்படுவதுடன், உடலின் அமிலத்தன்மை சீராக பேணப்படும். தினமும் துளசியிலைகளை உட்கொள்வதாலும், துளசி ஊறிய நீரைப் பருகிவருவதாலும் துளசியில் உள்ள antioxidant காரணமாக புற்றுநோய் அபாயம் குறைகின்றது.

சொறி, சிரங்கு போன்ற தோல்நோய் நிலைகளில் துளசியிலையை எலுமிச்சை சாறு விட்டு அரைத்து பற்றுப் போடலாம். ஆய்வுகளின் மூலம் துளசியிலைச் சாறு நீரிழிவு நோயாளிகளில் குருதியில் குளுக்கோசின் அளவை குறிப்பிடத்தக்க அளவு குறைப்பதாக கூறப்பட்டுள்ளது. எனவே தினமும் சிறிதளவு துளசியிலைகளை மென்று சாப்பிட்டு வரலாம். மேலும் குருதியில் கொழுப்பின் அளவை குறைப்பதன் மூலம் அதிஉயர் குருதியமுக்க நிலைகளிலும், இதயம் மற்றும் குருதிச் சுற்றோட்டத்தொகுதி சார்ந்த நோய்நிலைகளிலும் உரிய தீர்வை அளிக்கின்றது. எனவே நாம் தினமும் துளசியை நுகர்வதனால் எமது உடலில் ஏற்படும் உபாதைகளுக்கு தீர்வு ஏற்படுகின்றது.


கலாநிதி திருமதி
கௌரி ராஜ்குமார்...
(சிரேஷ்ட விரிவுரையாளர், தாவரவியல் துறை, விஞ்ஞான பீடம்)

வைத்திய கலாநிதி செல்வி
வினோதா சண்முகராஜா...
(சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவ அலகு)
யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்

# அரசின் மக்கள்நலத் திட்டங்களை திறம்பட செயற்படுத்த பொருத்தமான ஒரு அதிகாரி

இலங்கை நிர்வாக சேவையின் முதல் தர உத்தியோகத்தராக விளங்கும் பிரதமர் அலுவலகச் செயலாளர் காமினி செனரத் ஜனாதிபதி செயலாளராக நேற்று 19 ஆம் திகதி பதவி ஏற்றார். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இந்த நியமனத்தை வழங்கியிருந்தார்.

1984 இல் இலங்கை நிர்வாக சேவைப் பரீட்சையில் சித்தியடைந்த காமினி செனரத் திருகோணமலை மாவட்ட, மொரவெவ பிரதேச செயலகத்தில் உதவி செயலாளராக நியமிக்கப்பட்டார். அங்கு கடமை பொறுப்பேற்றது முதல் இற்றை வரை அரச சேவையில் பல உயர் பதவிகளை வகித்துள்ளார். இவர் நேற்று ஜனாதிபதி செயலாளராகக் கடமைகளைப் பெறுப்பேற்றார்.

மாத்தறை மாவட்டத்திலுள்ள ஹக்மனவில் இவர் பிறந்தார். இவரை ஜனாதிபதி செயலாளராக நியமிப்பதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மேற்கொண்ட தீர்மானத்தை பௌத்த, இந்து , இஸ்லாம், கத்தோலிக்க சர்வமதத் தலைவர்கள் பெரிதும் வரவேற்றுள்ளனர்.

ஹக்மனவில் பெருந்தோட்டங்களுக்குச் சொந்தக்காரரான லயனல் ஜோர்ஜ் சேதர செனரத் மற்றும் ரத்நாயக்க தம்பதியருக்கு மகனாகப் பிறந்த இவர் பிரதேச மக்களின் கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட பொதுவசதிகளை மேம்படுத்துவதில் விஷேட கவனம் செலுத்தி செயற்பட்டு வருகின்றார்.

அரச சேவையில் சுமார் நான்கு தசாப்தங்களாக கடமையாற்றி மக்களின் நலன்களுக்காக பணியாற்றி பரந்த அனுபவத்தைப் பெற்றுள்ள இவர், மக்களின் உள்ளங்களை வென்றெடுத்த செயற்றிறன் மிகுந்த அரச அதிகாரியாவார்.



## ஜனாதிபதி செயலாளராக பதவியேற்றுள்ள காமினி செனரத் கடந்து வந்த வெற்றிப் பாதை

அன்று மொரவெவ பிரதேசத்தின் உதவி செயலாளராகப் பதவியேற்ற இவர், அப்பிரதேசத்தில் வறிய மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டார். இதன் ஊடாக அப்பிரதேச மக்கள் மத்தியில் பிரபல்யம் மிக்க அதிகாரியானார் இவர். அப்பிரதேசத்தின் சமய வழிபாட்டுத் தலங்களதும் உட்கட்டமைப்பு வசதிகளதும் மேம்பாட்டில் அதிக அக்கறை எடுத்துக் கொண்டார்.

அதனைத் தொடர்ந்து குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் பிரதம கட்டுப்பாட்டாளர், மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் தலைமைப் பதவி, பிரதமரின் மேலதிக செயலாளர், ஜனாதிபதி செயலகத்தின் பணியாட்தொகுதி பிரதானி, பிரதமர் செயலாளர் எனப் பல உயர் பதவிகளை வகித்துள்ளார். இக்காலப் பகுதியில் மக்கள் வங்கி, இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம், லிட்ரோ எரிவாயு நிறுவனம் உள்ளிட்ட அரசாங்க நிறுவனங்கள் பலவற்றின் தலைவராகவும் இவர் கடமையாற்றியுள்ளார்.

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் அன்று தனியார் வர்த்தகர் ஒருவருக்கு சொந்தமாக வழங்கப்பட்டு இருந்தது. 6.2. பில்லியன் ரூபாவை செலுத்தி அந்நிறுவனத்தை அரசாங்கம் பொறுப்பேற்க வழிவகை செய்த இவர், அதனை குறுகிய காலத்தில் இலாபமீட்டும் நிறுவனமாக மாற்றியமைத்தார். அத்தோடு ஷெல் எரிவாயு நிறுவனத்தில் 4 பில்லியன் ரூபாவை முதலீடு செய்து இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தை அதன் நிர்வாக நிறுவனமாக நியமித்து அதன் மேம்பாட்டுக்கு வழிவகை செய்தார்.

ஷெல் எனக் காணப்பட்ட எரிவாயு நிறுவனத்தின் பெயரை இலகுவாக மக்கள் மத்தியில் பிரபல்யப்படுத்தும் நோக்கில் 'லிட்ரோ' என்ற பெயரில் நிறுவனமொன்றை உருவாக்கவும் அவர் நடவடிக்கை எடுத்தார். அதன் ஊடாக ஆரம்பித்த முதல் மூன்று மாதங்களில் இலாபம் ஈட்டும் நிறுவனமாக லிட்ரோ எரிவாயு நிறுவனம் உருவானது.



அதேநேரம் தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் பயணிகள் ஓய்வெடுத்துச் செல்வதற்காக வெலிப்பன்னையில் பொதுச்சேவை வசதிகள் நிலையமொன்றை 100 மில்லியன் ரூபா முதலீட்டில் அமைக்க அவர் ஏற்பாடு செய்தார். அரச சேவையாளர்களின் அன்பை வென்ற ஒரு அரச உயரதிகாரியாகவும் விளங்குகிறார் இவர்.

களனி பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை நிறைவு செய்த இவர், கொழும்பு பல்கலைக்கழகத்தில் பட்ட மேற்படிப்பை மேற்கொண்டார். அது கணனி துறையிலான மேற்படிப்பாகும். தற்போது உலகம் முகம் கொடுத்துள்ள சவால்களை வெற்றி கொள்வதற்கு தகவல் தொழில்நுட்பம், டிஜிட்டல் மயப்படுத்தல் போன்ற துறைகளை அதிகம் பயன்படுத்துவது அவசியம். இவ்விடயத்தில் ஜனாதிபதி ஏற்கனவே விஷேட கவனம் செலுத்தி நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளார். இவ்வாறான சூழலில் இத்துறை தொடர்பில் பரந்த அனுபவமும் அறிவும் கொண்டுள்ள காமினி செனரத் ஜனாதிபதி செயலாளராக நியமிக்கப்படுவது அரச சேவையை டிஜிட்டல் மயப்படுத்தும் நடவடிக்கையை விரைவுபடுத்துவதற்கு பாரிய பலமாக அமையும்.

**மர்லின் மரிக்கார்...**

# முன்னைய ஆட்சிக் காலத்தில் தமிழர்களின் பிரதேசங்கள் அபிவிருத்தியில் புறக்கணிப்பு

## இன்று அனைத்துக் கிராமங்களுக்கும் அபிவிருத்திக்கான நிதி சரிசமமாக பகிர்ந்தளிப்பு

### –இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன்

முன்னைய அரசாங்க காலத்தில் தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்கள் பாரபட்சம் காட்டப்பட்டு ஒதுக்கப்பட்டதன. இதனை அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் கொக்கட்டிச்சோலை பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.



மண்முனை தென்மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில், கொக்கட்டிச்சோலையில் இருந்து களுவாஞ்சிகுடி செல்லும் பிரதான வீதியில் மிகவும் பாதிப்புற்ற நிலையில் காணப்பட்ட (கொக்கட்டிச்சோலை மற்றும் அம்பிளாந்துறை பிரதான பாதை) பாலம் புனரமைக்கப்பட்டுள்ளது. கடந்த காலத்தில் அவ்வப்போது ஏற்படும் வெள்ளப்பெருக்கினால் இப்பாலம் பாதிக்கப்பட்டு உடைந்து காணப்பட்டது. இப்பாலம் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரனின் முயற்சியால் 15 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் புனரமைக்கப்பட்டு மக்களின் பாவனைக்கு கையளிக்கப்பட்டுள்ளது.

மேற்படி நிகழ்வில் அவர் உரையாற்றும் போது "கடந்த அரசாங்க காலத்தின் போது வடக்கு, கிழக்கு மாகாணங்களின் பின்தங்கிய பிரதேசங்களில் உள்ள கிராமங்கள் உட்கட்டமைப்பு அபிவிருத்தி தொடர்பில் புறக்கணிக்கப்பட்டு வந்தன. குறிப்பாகத் தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களுக்கு வீதி, பாலம் போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் வழங்கப்படாது அக்கிராமங்கள் புறக்கணிக்கப்பட்டன. ஆனால் அந்த நிலை தற்போது இல்லை. ஜனாதிபதியின் நாட்டை கட்டியெழுப்பும் வேலைத் திட்டத்தின் கீழ் எமது நாட்டின் ஒன்பது மாகாணங்களுக்கும் சரிசமமாக நிதி பகிர்ந்தளிக்கப்படுகின்றது.





பின்தங்கிய பிரதேசங்களில் உள்ள கிராமங்களின் உட்கட்டமைப்பு வசதிகள் பாரிய அளவில் அபிவிருத்தி செய்யப்படுகின்றன. கிராமங்களின் உள்ளக வீதிகள், பிரதான வீதிகள், பாலங்கள், நீர்த்தேக்கங்கள், நீர் வழங்கும் வடிகால் திட்டங்கள், கிராமங்களை சார்ந்த நகர கடைத் தொகுதிகள் அபிவிருத்தி என்பன மேற்கொள்ளப்படுகின்றன. அனைத்து சமூகத்தினரும் பயன் பெறும் வகையில் அவை அபிவிருத்தி செய்யப்படுகின்றன. அனைத்து வேலைத்திட்டங்களும் கிராமங்களை அபிவிருத்தி செய்வதையே இலக்காக கொண்டு முன்னெடுக்கப்படுகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான்கரை பிரதேச கிராமங்களில் விவசாயம், நன்னீர் மீன்பிடி, மேட்டுநில பயிர்ச்செய்கை, கால்நடைகள் வளர்ப்பு போன்றவை முக்கிய துறைகளாகும். பொருளாதார மையமாக படுவான்கரைப் பிரதேசம் காணப்படுகின்றது. இங்கு உற்பத்தித் துறையை மேலும் பலப்படுத்துவதற்கு பிரதேசங்களுக்கான வீதிகள் அபிவிருத்தி செய்யப்படுவது மிக முக்கியமாகும். இவ்வாறு அபிவிருத்தி செய்யும் போது கிராமங்கள் பொருளாதாரரீதியாக தன்னிறைவு பெறும். கிராமங்களை அபிவிருத்தி செய்வதை இலக்காக கொண்டு பாரிய அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன" எனத் தெரிவித்தார்.


**ராஜரத்தினம் சுரேஷ்குமார்...**
*(அமைச்சரின் ஊடக இணைப்பாளர்)*

# உலகெங்கும் வாழும் படைப்பாளிகளுக்கு களம் அமைத்து கொடுத்த இலக்கியவாதி

கொரோனோ பெருந்தொற்று உலகெங்கும் உக்கிரத் தாண்டவம் ஆடத் தொடங்கிய காலப்பகுதியில், கடந்த ஆண்டு ஜனவரி மாதம் 22 ஆம் திகதி 'தேனீ' இணைய இதழின் ஆசிரியர் ஜெமினி கெங்காதரனையும் அது ஜெர்மனியில் காவு கொண்டு விட்டது.

புங்குடுதீவில் 1965 ஆம் ஆண்டு கணேஷ் – மங்கையற்கரசி தம்பதியரின் புதல்வனாகப் பிறந்த ஜெமினி கெங்காதரன் யாழ். இந்துக் கல்லூரியின் முன்னாள் மாணவர். 1980 களில் ஐரோப்பாவுக்கு புலம்பெயர்ந்த அவர், 1989 ஆம் ஆண்டு தொடக்கத்தில் நண்பர்களுடன் இணைந்து 'தேனீ' என்ற சிற்றிதழை ஆரம்பித்தார். கலை, இலக்கிய, அரசியல், சமூக அக்கறை சார்ந்த படைப்புகளுக்கு இந்த இதழ் களம் வழங்கியது.

அதனையடுத்து 'அக்கினி' என்ற இதழையும் சிறிது காலம் நடத்தினார். அதன் பின்னர் 'தேனீ' இணைய இதழை தொடங்கி தினமும் பல வருடங்களாகப் பதிவேற்றினார். 'தேனீ' இணைய இதழை தனிமனிதராக அர்ப்பணிப்போடு வெளியிட்டு, மாற்றுச்சிந்தனைகளுக்கும் சிறந்த களம் வழங்கினார். கலை, இலக்கியம் மற்றும் அரசியல் ஆய்வுத் தொடர்களுக்கும் பயனுள்ள நேர்காணல்களுக்கும் மொழிபெயர்ப்புகளுக்கும் களம் வழங்கி, வாசகர்களிடம் சேர்ப்பித்தார். அதற்காக எந்த ஊதியமும் பெறாமல் கருத்துகளையும் எதிர்வினைகளையும் விமர்சனங்களையும் மாத்திரமே ஏற்றுக் கொண்டவர்.



தேனீயில் வெளிவரும் ஆக்கங்களுக்கு அவற்றை எழுதியவர்களே பொறுப்பு என்றவுணர்வுடன் ஊடக தர்மத்தை பின்பற்றி, பாரதூரமான விமர்சனங்கள் வரும் போது அவற்றை உரியவர்களுக்கே அனுப்பி அவர்களின் கவனத்திற்குட்படுத்தி ஊடக தர்மத்தின் கண்ணியத்தையும் காப்பாற்றினார். ஆங்கில ஊடகங்களில் சிறந்த அரசியல் ஆய்வுகள் வெளிவரும் பட்சத்தில் அவற்றை தெரிவு செய்து இலங்கைக்கு அனுப்பி மொழிபெயர்ப்பாளரிடமிருந்து மொழி மாற்றம் செய்து தருவித்து, தானே கணினியில் பதிவு செய்து வெளியிட்டார். தனது குடும்பத்திற்காக இரவுநேர வேலைக்குச் சென்று, அதிகாலை வீடு திரும்பி, உறங்காமல் விழித்திருந்து தேனீயை பதிவேற்றி விடுவார்.

உலகடங்கிலும் வாழும் கலை, இலக்கிய ஆளுமைகள் பலரைப் பற்றிய ஆக்கங்களும் தேனீயில் வெளியாகியிருக்கின்றன. ஜெமினி கெங்காதரனின் ஓராண்டு நினைவேந்தல் நிகழ்வு நாளைமறுதினம் 22 ஆம் திகதி சனிக்கிழமை மெய்நிகரில் நடைபெறவிருக்கிறது. இலங்கையிலிருந்து எழுத்தாளர் மற்றும் ஊடகவியலாளர்களான 'டான்' தொலைக்காட்சி எஸ். எஸ். குகநாதன் மற்றும் கருணாகரன், அவுஸ்திரேலியாவிலிருந்து இலக்கியவாதி லெ. முருகபூபதி, பிரித்தானியாவிலிருந்து அரசியல் ஆய்வாளர் விஸ்வலிங்கம் சிவலிங்கம் ஆகியோர் நினைவுரைகளை நிகழ்த்துவர். எழுத்தாளர் நடேசன் இந்நிகழ்வை அவுஸ்திரேலியாவிலிருந்து ஒருங்கிணைத்துள்ளார்.

அவுஸ்திரேலியா நேரம் இரவு 10.00 மணிக்கு இந்நிகழ்வு ஆரம்பமாகும். இலங்கை–இந்திய நேரம் பிற்பகல் 4.30 மணி, பிரித்தானியா நேரம் முற்பகல் 11.00 மணி.

**மெய்நிகர் இணைப்பு:**
Join Zoom Meeting
https://us02web.zoom.us/j/88645005608?pwd=M1J5TS9TR3ZUbzVxZVVMQlcySFBJZz09
Meeting ID: 886 4500 5608
Passcode: 334900

(தகவல்: முருகபூபதி)

## 'தேனீ' இணைய இதழ் ஆசிரியர் ஜெமினி கெங்காதரன் ஓராண்டு நினைவேந்தல் நிகழ்வு நாளைமறுதினம் மெய்நிகரில்

# பாணந்துறை பிரதேச சபை முதல்வரின் ஒத்துழைப்பினால் அபிவிருத்தி பணிகள்

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பலமான ஆட்சி நிர்வாகத்தில் பாணந்துறை பிரதேச சபை இருந்த போதிலும், ஆரம்பம் தொட்டு சபையின் முதல்வர் ஹேமந்த பெர்னாண்டோவுடன் ஒத்துழைப்புடன் செயல்பட்டு வருவதாலேயே பல்வேறு அபிவிருத்தி வேலைகளையும் கடந்த ஆண்டில் செய்து கொள்ள முடிந்ததாக பிரதேச சபையின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர் அசார் மரிக்கார் தெரிவித்தார்.



## சு.க உறுப்பினர் அசார் மரிக்கார்

"பிரதேச சபையின் சிறுபான்மை உறுப்பினர்கள் கடந்த வருடங்களில் தமது வட்டார ரீதியில் அபிவிருத்தித் திட்டங்களை செயல்படுத்தியுள்ளனர். மேலும் பொதுவான தேவைகளையும் தலைவரின் ஒத்துழைப்புடன் செய்துள்ளேன். பாணந்துறை பிரதேச சபையின் கெசல்வத்தை உபபிரிவைச் சேர்ந்த ஆர்டன் பொரஸ்ட் ஜும்ஆப் பள்ளிவாசல் வீதி, பாடசாலை வீதி மற்றும் சுஹைர் மாவத்தை உள்ளடங்கியதாக பலகோடி ரூபா செலவில் காபர்ட் வீதியாக அபிவிருத்தி செய்யப்படுகின்றன. பிரதேச சபையின் தலைவர் ஹேமந்த பெர்ணான்டோவினதும் எனதும் வேண்டுகோளின் பேரில் துறைமுக கப்பல்துறை அமைச்சர் ரோஹித அபேகுணவர்தனவினால் இதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன" எனவும் உறுப்பினர் அஸார் மரிக்கார் மேலும் தெரிவித்தார்.

மேற்படி வீதி அபிவிருத்தித் திட்டம் தொடர்பான ஆரம்ப நிகழ்வுகள் அண்மையில் இடம்பெற்றன. அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு பிரதேச சபைத் தலைவர் ஹேமந்த பெர்ணான்டோ சகிதம் வேலைத் திட்டத்தை தொடக்கி வைத்தார். மேல் மாகாண சபை முன்னாள் உறுப்பினர் சுனேத்ரலால் பெர்னாண்டோ, பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் பிரமுகர்களும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

பள்ளிமுல்ல மர்கஸ் வீதி உள்ளிட்ட பல்வேறு வீதி அபிவிருத்தி வேலைகள், கால்வாய் துப்புரவு செய்தல் மற்றும் வீதி விளக்கு பொருத்தல் போன்ற பல்வகை பணிகள் தலைவரின் ஒத்துழைப்புடன் நிறைவேற்றப்பட்டன. வட்டார ரீதியான அபிவிருத்திப் பணிகளுடன், பொதுவான தேவைகள் மற்றும் பொதுமக்களின் இன்னோரன்ன தேவைகள் செய்து கொடுக்கப் பட்டுள்ளன.

தலைவருடன் ஒத்துழைத்து செயல்படும் எண்ணக் கருவினால் முடிந்த பணிகளை வட்டார ரீதியிலும் பொதுவாகவும் மக்களுக்கு செய்ய முடிந்ததாகவும் இந்த வழிமுறையினால் ஏனைய உறுப்பினர்களும் அபிவிருத்திகளை முன்னெடுத்தள்ளதாகவும் உறுப்பினர் அசார் மரிக்கார் மேலும் தெரிவித்தார்.

**எம்.எஸ்.எம்.முன்தஸிர்...**
*(பாணந்துறைமத்திய குறூப் நிருபர்)*




பிரதமரின் புதிய செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள டீ.எம்.அநுர திசாநாயக்கவுக்கான நியமனக் கடிதத்தை, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று வழங்கினார். அநுர திசாநாயக்கவின் புதிய நியமனம் காரணமாக வெற்றிடமாகியுள்ள நீர்ப்பாசன அமைச்சின் செயலாளர் பதவிக்கு கே.டபிள்யூ. ஐவன் டீ சில்வா நியமிக்கப்பட்டார். அவருக்கான நியமனக் கடிதத்தையும் ஜனாதிபதி நேற்று வழங்கினார்.

# காத்தான்குடியைச் சேர்ந்தவரின் சடலம் சவூதியில் மீட்பு

காத்தான்குடியைச் சேர்ந்த ஒருவர் சவூதி அரேபியா ஜித்தாவில் செவ்வாய்க்கிழமை (19) சடலமாக மீட்கப்பட்டுள்ளார். முகம்மட் மபாஸ் (31) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளளார்.

ஜித்தாவிலுள்ள வீடு ஒன்றில் சாரதியாக தொழில் புரிந்து வந்த நிலையில் இவர் தங்கியிருந்த அறையில் சடலமாக அவர் மீட்கப்பட்டுள்ளார்.

காத்தான்குடியை பிறப்பிடமாகவும் பூநொச்சிமுனையை வசிப்பிடமாகவும் கொண்ட இவர் இரண்டு பிள்ளைகளின் தந்தையாவார்.

இரண்டு வருட காலத்தை நிறைவு செய்த பின்னர் அடுத்த மாதம் 10 ஆம் திகதி அவர் ஊர்வர இருந்தார் என குடும்பத்தினர் தெரிவித்தனர்.

சடலம் ஜித்தாவிலுள்ள வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## ஹேமசிறிக்கு எதிரான வழக்கு: நீதிமன்றின் தீர்மானம் பெப்ரவரி 18 ஆம் திகதி

முன்னாள் பாதுகாப்பு செயலாளர் ஹேமசிறி பெர்ணான்டோவுக்கு எதிரான வழக்கிலிருந்து அவரை விடுதலை செய்வதா அல்லது, பிரதிவாதித்தரப்பு சாட்சியங்களை ஆராய அனுமதியளிப்பதா என்பது குறித்த தீர்மானம் அடுத்த மாதம் அறிவிக்கப்படவுள்ளது.

அதன்படி எதிர்வரும் பெப்ரவரி 18 ஆம் திகதி இது குறித்த நீதிமன்றின் தீர்மானத்தை அறிவிப்பதாக, இந்த வழக்கினை விசாரிக்க என அமைக்கப்பட்டுள்ள கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நாமல் பலல்லே தலைமையிலான, மேல் நீதிமன்றின் ஆதித்ய பட்டபெதிகே மற்றும் மொஹம்மட் இஸ்ஸதீன் ஆகியோர் அடங்கிய நீதிபதிகள் குழாம் அறிவித்தது.

இந்த வழக்கினை விசாரிக்க விஷேட ட்ரயல் அட்பார் நீதிமன்றம் அமைக்கப்பட்டுள்ள நிலையில் குறித்த வழக்கானது அந் நீதிமன்ற நீதிபதிகள் குழாம் முன்னிலையில் நேற்று விசாரிக்கப்பட்டது.

இதன்போது, முறைப்பாட்டாளர் தரப்பின் சாட்சி நெறிப்படுத்தலை முடித்துக்கொள்வதாகவும், சட்டமா அதிபர் சார்பில் ஆஜராகும் பிரதி சொலிசிட்டர் ஜெனரால் சுதர்ஷன டி சில்வா அறிவித்தார்.

### பிரதமரின் தலைமையில்

# 2022ஆம் ஆண்டுக்கான முதலாவது ஆளுங்கட்சி உறுப்பினர்கள் கூட்டம்




ஒன்பதாவது பாராளுமன்றத்தின் இரண்டாவது அமர்வு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில நேற்று முன்தினம் (18) ஆரம்பமாகியதைத் தொடர்ந்து. 2022 ஆம் ஆண்டின் ஆளுங்கட்சி உறுப்பினர்கள் கூட்டம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் பாராளுமன்ற குழு அறை 01 இல் நேற்று நடைபெற்றது.

ஜனாதிபதியினால் முன்வைக்கப்பட்ட கொள்கை பிரகடனம் தொடர்பிலான ஒத்திவைக்கப்பட்ட விவாதத்தை 19 மற்றும் 20 ஆகிய இரு தினங்கள் நடத்துவதற்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் தீர்மானிக்கப்பட்டதுடன் ஆளுங்கட்சி உறுப்பினர்கள் பலர் விவாதத்தின் போது கருத்து தெரிவிக்க தயாராகவிருப்பதால் 21ஆம் திகதி வெள்ளிக்கிழமையையும் விவாதத்திற்காக ஒதுக்குமாறு அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ இதன்போது பிரதமரிடம் கோரிக்கை விடுத்தார்.

அதற்கமைய சபாநாயகருக்கு எடுத்துரைத்து 21ஆம் திகதி வெள்ளிக்கிழமையையும் விவாதத்திற்காக ஒதுக்கிக் கொள்ளுமாறு பிரதமர் ஆலோசனை வழங்கினார்.

'எண்ணெய் தாங்கிகள் மீண்டும் நாட்டிற்கு' எனும் தொனிப்பொருளில் திருகோணமலை எண்ணெய் தாங்கிகளை அபிவிருத்தி செய்வது தொடர்பிலான ஒப்பந்தம் குறித்து வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெளிவுபடுத்தினார்.

இக் கூட்டத்தில் அமைச்சர்களான தினேஷ் குணவர்தன, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, பசில் ராஜபக்ஷ, ஜீ.எல்.பீரிஸ், நிமல் சிறிபால த சில்வா, விமல் வீரவங்ச, மஹிந்த அமரவீர உள்ளிட்ட அமைச்சரவை அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் ஆளுங்கட்சி உறுப்பினர்கள், ஜனாதிபதியின் பாராளுமன்ற விவகாரங்களுக்கான ஒருங்கிணைப்பு செயலாளர் ஷானிகா கொபல்லவ, பிரதமரின் பாராளுமன்ற விவகாரங்களுக்கான ஒருங்கிணைப்பு செயலாளர் பிரியந்த ரத்நாயக்க உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## 800 கொள்கலன்கள் இன்று...

விடுவிக்கப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார். அரிசி, சீனி மற்றும் பருப்பு ஆகிய பொருட்கள் இதன் மூலம் சந்தைக்கு விடுவிக்கப்படும் என அமைச்சர் பந்துல குணவர்தன இதன்போது சுட்டிக்காட்டினார்.

## கைதான வைத்தியரின் வீட்டில்...

அவரிடமிருந்து மேலும் இரண்டு வாள்கள் மற்றும் கத்தியொன்றும் கைப் பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் எம்பிலிப் பிட்டிய – பனாமுர பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டார். சந்தேக நபரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணையின் போது, அவர் குறித்த வைத்தியர் தொடர்பில் தகவல்களை வழங்கியதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## வெள்ளவத்தை கடலில்...

தெஹிவளை – புகையிரத நிலைய பகுதி கடலில் அண்மையில் நபர் ஒருவர் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது முதலை தாக்கி உயிரிழந்துள்ளார். குறித்த சம்பவத்தை அடுத்து, முதலைகளைப் பிடிப்பதற்காக வன ஜீவராசி அதிகாரிகள் காலி முகத்திடலைச் சூழவுள்ள கடற்பரப்பில் பல்வேறு நட வடிக்கைகளை முன்னெடுத்திருந்தனர். இவ்வாறானதொரு பின்னணியிலேயே நேற்று வெள்ளவத்தை கடலில் முதலை ஒன்று இருப்பதாகத் தெரியவந்துள்ளது.

## முல்லைத்தீவு வீராங்கனை...

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கரிப்பட்டமுறிப்பு புதிய நகர் கிராமத்தில் தந்தையை இழந்த நிலையில் தாயின் அரவணைப்பில் வாழ்ந்துவந்த அவர் குத்துச் சண்டை போட்டிகளில் பங்கேற்று வந்தார். இந்நிலையில், இந்துகா தேவி பாகிஸ்தானில் இடம்பெற்று வரும் சர்வதேச போட்டியில் பங்குகொள்ள தெரிவாகி பாகிஸ்தான் சென்றிருந்தார்.

நேற்றுமுன்தினம் (18) பாகிஸ்தான் லாகூரில் இடம்பெற்ற 25 வயதுக்குட்பட்ட 50_55 கிலோகிராம் எடைப்பிரிவின் இடம்பெற்ற குத்துச் சண்டை போட்டியில் தங்கப் பதக்கம் வென்று நாட்டுக்கும் முல்லைத் தீவு மாவட்டத்துக்கும் பெருமை தேடித் தந்துள்ளார்.

## எமது முயற்சியை...

தொடர்ந்து செயற்படுவது நல்ல விடயமல்ல என ஈ.பி.ஆர்.எல்.எப்பின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளர்களிடம் கருத்துரைத்த அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தும்படி ஆவணம் கொடுப்பது தொடர்பாகக் கடந்த சில மாதங்களாகப் பல்வேறுபட்ட அரசியல் கட்சிகள் பேச்சுகளை நடத்தி ஆவணத்தைத் தயார்படுத்தி இந்திய தூதுவர் கொடுத்தது.

ஆனால், சுமந்திரன் ஊடகவியலாளர்களைச் சந்திக்கின்றபோது நாங்கள் இந்த ஆவணத்தை முற்று முழுதாக மாற்றிவிட்டோம். இது தமிழரசுக் கட்சியினுடைய ஆவணமாக மாறிவிட்டது என்று ஒரு விடயத்தை தொடர்ந்து சொல்லி வருகின்றார்.

இந்த 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தும் ஆவணத்தை கொடுப்பதற்கு சுமந்திரன் விரும்பவில்லை என்பதை யாழ்ப்பாணத்தில் நடந்த பொதுக் கூட்டத்தில் தெளிவாகக் கூறி இருக்கின்றார்.

ஆனால், சம்பந்தன் உட்பட ஏனைய கட்சிகள் அனைத்தும் இப்போது 13ஐ நடைமுறைப்படுத்தும்படி கூறும் போது வடிவேலு பாணியில் நாங்கள் மாற்றிவிட்டோம் என்று சுமந்திரன் கூற ஆரம்பித்திருக்கின்றாரா என்ற கேள்வி எழுகின்றது.

உண்மை என்னவென்றால் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப் படுத்தும்படி நாங்கள் கூறிய கோரிக்கையில் எந்த மாற்றமும் இல்லை. அந்த ஆவணத்தில் 13ஆவது திருத்த வரலாற்றை சேர்த்திருக்கலாம்.

அந்த வரலாற்றைச் சேர்த்தால் கூட கோரிக்கை 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதுதான்.

ஆகவே, நாங்கள் இந்திய அரசிடம் தமிழ் மக்களின் உரிமைகளை முழுமையாகப் பெற்றுக்கொடுப்பதற்கான வழி முறையைப் பற்றிச் சிந்தித்துச் செயற்படும்போது அதனைக் கேள்விக்குள்ளாக்கக்கூடிய வகையில் சுமந்திரன் தொடர்ந்து செயற்படுவது நல்ல விடயமல்ல.

தன்னை ஒரு புத்திஜீவியாகவும் அனைத்தும் தெரிந்தவராகவும் கூறிக் கொண்டு இவ்வாறான கருத்துக்களை கூறுவதை கைவிட்டு செயற்பட வேண்டும்' என்றார்.

## 13 வது திருத்தத்தை பாதுகாக்கவே...

ஆனால் அவர் எமது ஒத்துழைப்பை கோருகிறார். பொருளாதார நெருக்கடிக்கு தமிழ் இனப் பிரச்சினையும் அதனால் வந்த அழிவுகளுமே பிரதான காரணியாகும். பண்டா செல்வா காலம் முதல் பல பேச்சுகள், பல போராட்டங்கள் நடந்துள்ளன. நியாயமான தீர்வு காண்பது முக்கியமானது. 2009 இல் யுத்தம் முடிவுக்கு வந்தது.ஆனால் சமாதானம் வரவில்லை. யுத்தம் நிறைவடைந்ததானது சமாதானம் நிலைநாட்டப்பட்டதாகாது. யுத்தத்தால் சேதமான எமது பகுதிகளை முன்னேற்ற நியாயமான தீர்வு முன்வைக்கப்படுவது பிரதானமானது. 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்த அரசு தயங்குவது இந்த நாட்டில் மாத்திரமே நடக்கிறது. மாகாண சபை தேர்தல்களை நடத்த வேண்டும். இருக்கும் அதிகார பரவலாக்கல் கூட வழங்கப்படவில்லை. 13 ஆவது திருத்தத்தை இல்லாமல் செய்வதற்கான நோக்கம் பலருக்குள்ளது. இந்திய இலங்கை ஒப்பந்தத்தில் ஒரு தரப்பான இந்தியாவிடம் உதவி கேட்க நேரிட்டுள்ளது. 13 ஆவது திருத்தம் தமிழ் மக்களின் பிரச்சினைக்கான முழுமையான தீர்வல்ல. ஆனாலும் இன்றிருக்கும் நிலையில் 13 ஆவது திருத்தம் ஒழிக்கப்பட்டால் எதுவும் அற்ற நிலை ஏற்படும். இது நாட்டுக்கு எதிரான செயற்பாடல்ல. ஒப்பந்தத்தில் இந்தியாவும் கையெழுத்திட்டதால் தான் இந்தியாவிடம் கோரியுள்ளோம்.

## பிரதமர் மோடியின் உயிருக்கு...

இருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் அல்லது ஆப்கானிஸ்தான் பிராந்தியத்தை சேர்ந்த குழுக்களிடம் இருந்து இந்த அச்சுறுத்தல் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர்கள் உயர் பதவியில் இருக்கும் பிரமுகர்களை குறி வைத்தும், பொதுக்கூட்டங்கள், முக்கிய நிறுவனங்கள் மற்றும் மக்கள் அதிகமாக கூடும் நெரிசலான இடங்களையும், இலக்கு வைக்கலாம்.

லஷ்கர்இதொய்பா, ஜெய்ஷ்இமுகமது, ஹர்கத்உல்முஜாகிதீன், ஹிஸ்புல் முஜாகிதீன் போன்ற தீவிரவாத அமைப்புகள் இதன் பின்னணியில் இருப்பதாகவும் உளவுத்துறை தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது. உளவுத்துறையின் எச்சரிக்கையை தொடர்ந்து டெல்லியில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

## IMF உடன் அரசு எவ்விதமான...

தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நாட்டின் பொருளாதார நெருக்கடியை தீர்க்க சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்ள அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதா என எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

இது தொடர்பில் அமைச்சரவை ஊடாகவோ அல்லது நிதி அமைச்சின் ஊடாகவோ இன்னும் கலந்துரையாடவில்லை. ஆனால் 1950 ஆம் ஆண்டில் சர்வதேச நாணய நிதியத்துடன் உறுப்பு நாடாக இருக்கின்றோம். சர்வதேச நாணய நிதியத்துடன் 16 தடவைகள் கொடுக்கல் வாங்கல்களை நடத்தியுள்ளோம்.

யுத்த காலத்தில் 2.5 பில்லியன் டொலரை பெற்றிருந்தோம். இதனால் சர்வதேச நாணய நிதியத்தை எம்முடன் தொடர்பில்லாத அமைப்பு என்று கூறமுடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

## இந்திய பிரதமருக்கு...

அமைச்சர் உதய கம்மம்பில தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக மாநாட்டில்

தமிழ் எம்.பிகள் இணைந்து 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவது தொடர்பில் இந்திய உயர்ஸ்தானிகரிடம் கடிதம் ஒன்றை கையளித்துள்ளது தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தமிழ் கட்சிகளுக்கு 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவது தொடர்பில் ஆர்வம் இருக்குமாக இருந்தால் அவர்கள் இது தொடர்பில் இந்திய பிரதமர் மோடியிடம் கோருவதை விட எமது நாட்டு ஜனாதிபதியிடமே கோர வேண்டும். எமது நாடு இந்தியாவின் மாநிலமல்ல. தமிழ் கட்சிகளுக்கு 13 ஆவது திருத்தத்தை செயப்படுத்துவது தொடர்பில் பேசுவதாக இருந்தால் தேர்தல் மூலம் தெளிவாக அரசாங்கத்திடமே பேச வேண்டும் என்றார்.

இணை அமைச்சரவை பேச்சாளர் ரமேஷ் பத்திரண கருத்துத் தெரிவிக்கையில், நாம் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தி வருகிறோம். 2009 இல் வடக்கு, கிழக்கு மாகாண சபைகளுக்கான தேர்தல்களை அன்றைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நடத்தினார். 13 ஆவது திருத்தம் அமுல்படுத்தப்படுகிறது.

அரசியல் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் ஜனாதிபதியின் உரையில் அறிவிக்கப்படுமென தமிழ் தேசிய கூட்டமைப்பு உள்ளிட்ட கட்சிகள் எதிர்பார்த்தன. அது நிறைவேறவில்லையென அவை தெரிவித்துள்ளதாகவும் அந்த கட்சியுடன் அரசு பேச்சு நடத்துமா? என வினவப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் டளஸ் அழகப்பெரும,

பாராளுமன்ற உரையின் போது ஜனாதிபதி கட்சிகளுக்கு பகிரங்க அழைப்பு விடுத்தார். தமிழ் பேசும் கட்சிகளுக்கும் அவர் அழைப்பு விடுத்தார். ஊடகங்கள் சுட்டிக்காட்டாத ஒரு விடயமுள்ளது. எமக்கு இரு மக்கள் ஆணைகள் கிடைத்துள்ளன. ஜனாதிபதிக்கும் பாராளுமன்றத்திற்கும் கிடைத்த ஆணை என்பன ஜனநாயகத்தை நிலைநாட்ட சிறந்த வாய்ப்பாக இருக்கும் என்றார்.

## அமைச்சு செயலாளர்களது...

கோட்டாபய ராஜபக்ஷ நேற்று தெரிவித்தார்.

ஜனாதிபதியின் செயலாளர் மற்றும் பிரதமரின் செயலாளர், நீர்ப்பாசன அமைச்சின் செயலாளர் ஆகயோருக்கான நியமனக்கடிதங்களை வழங்கிய பின்னர் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுக்களின் செயலாளர்கள் மத்தியில் ஜனாதிபதி உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டார்.

ஜனாதிபதி தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

அரசாங்கத்தின் எதிர்காலத் திட்டங்கள் மற்றும் இலக்குகள் என்பன அமைச்சுகளுக்கே வழங்கப்பட்டுள்ளன. அதனால், உரிய அதிகாரிகளை ஊக்கப்படுத்தி, எதிர்பார்த்திருக்கும் இலக்குகளை அடைவதற்கான முழுப் பொறுப்பும் அமைச்சுக்களின் செயலாளர்களிடமே உள்ளது என்றும் ஜனாதிபதி இதன்போது சுட்டிக்காட்டினார்.

மகா சங்கத்தினர், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ , அமைச்சரவை மற்றும் இராஜாங்க அமைச்சர்கள், ஜனாதிபதியின் முன்னாள் செயலாளர் பி.பீ. ஜயசுந்தர, ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க, அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் அரச அதிகாரிகள் பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

## மின் உற்பத்திக்கு தேவையான...

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில்,இது தொடர்பாக மேலும் தெரிவித்த அவர், மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட அமெரிக்க டொலர்கள் மூலம் இரண்டு கப்பல்களில் 35 ஆயிரம் மெற்றிக் தொன் டீசல் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

நாளாந்த மின் உற்பத்திக்கு 1,500 மெற்றிக் தொன் தேவைப்படுகிறது. இதன் காரணமாக நேற்று கொண்டுவரப்பட்ட ஒரு தொகை டீசலில் 10,000 மெற்றிக் தொன்னை மின்சார சபைக்கு வழங்குமாறு ஆலோசனை வழங்கியுள்ளேன் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

எரிபொருள் இறக்குமதி செய்வதில் நெருக்கடி நிலை உள்ளது. கப்பல்கள் துறைமுகத்தில் காத்திருக்கின்றன. ஒவ்வொரு வாரமும் டீசல் கப்பல் நாட்டுக்கு வருகிறது. 5 நாட்களுக்கு ஒரு தடவை பெற்றோல் ஏற்றிய கப்பல் வருகிறது. பல மாதங்களுக்கு தேவையான எரிபொருளை ஒரே தடவையில் தருவிப்பது கிடையாது. ஒரு வாரத்திற்கு தேவையான எரிபொருள் கையிருப்பு உள்ளது. அதற்கிடையில் அடுத்த கப்பல் வந்துவிடும். டொலர் கிடைத்ததும். 2,3 நாளில் அடுத்த கப்பலிலுள்ள எரிபொருள் இறக்கப்படும். நீண்ட கால தீர்வாக புதுப்பிக்கத்தக்க வலுசக்திகளின் மூலம் மின்உற்பத்திகளை அதிகரிக்க வேண்டும். எமது நாட்டிலுள்ள எரிபொருள் வளத்தை பெறவேண்டும்.

நுரைச்சேலை அனல் மின்நிலையம் காரணமாக மின்நெருக்கடி ஏற்பட்டதாக கூற முடியாது. 3 மின் உற்பத்தி நிலையங்களில் ஒன்று பழுதடைந்துள்ளது. அது 24 ஆம் திகதி செய்யப்படுவதோடு நிலைமை சீராகும்.

எதிர்வரும் மாதங்களில் எவ்வளவு அந்நிய செலாவணி கிடைக்கும் என்று தெரியாது. முன்னுரிமை வழங்கும் பொருட்களின் விநியோகத்தை உறுதி செய்ய அரச நடவடிக்கை எடுத்துள்ளது. மின்வெட்டு அமுல்படுத்துவதாக இருந்தால் முன்கூட்டிஅறிவிக்கப்படும்.

ஒக்டேன் 91 தருவிப்பது தொடர்பில் முடிவு செய்யப்பட்டதா? தரம் குறைந்த எரிபொருள் இறக்கமதி செய்யப்பட்டுள்ளதாக தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளதாக எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர், எரிபொருள் கூட்டுத்தாபனத்தின் எந்த தொழிற்சங்கமும் அவ்வாறு குற்றஞ்சாட்டவில்லை. ஓய்வு பெற்ற ஒருவர் தான் இவ்வாறு தெரிவித்துள்ளார். எரிபொருளின் தரம் தொடர்பில் சமூக வலைத்தளங்களில் தெரிவிக்கப்பட்டாலும் அவ்வாறு தரத்தை மாற்றுவது குறித்து எந்த விதத்திலும் ஆராயப்படவில்லை. ஒக்டேன் 92 மற்றும் 95 இறக்குமதி செய்யும் போது அவை 4 தடவைகள் பரிசோதனைக்குட்படுத்தப்படுகின்றன. டீசல் மற்றும் பெற்றோல், மண்ணெண்ணெய் போன்றன எரிபொருள் நிரப்பு நிலையங்களில் கலப்படம் செய்யப்படலாம்.இது தொடர்பில் எந்த முறைப்பாடும் கிடைக்கவில்லை. சமூக ஊடகங்களில் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டு தொடர்பில் எமக்கு தலையீடு செய்ய முடியாது என்றார்.

## உணவு நெருக்கடி தொடர்பில்...

தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் நாட்டில் உணவு நெருக்கடி ஏற்படலாம் என்று வெளியாகும் செய்தி தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

உணவு நெருக்கடிக்கு முகம்கொடுப்பதற்கு தேவையான வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. பசுமை விவசாயத் திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளது. எனினும் உற்பத்திகள் குறைவடைந்தால் தேவையான அரிசியை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சீனாவுடனான அரிசி – இறப்பர் உடன்படிக்கைக்கு 75 வருடங்கள் பூர்த்தியாவதால் 10 இலட்சம் மெற்றிக் தொன் அரிசியை இலங்கைக்கு நன்கொடையாக வழங்க சீனா தீர்மானித்துள்ளது. இது மார்ச் மாதத்தில் இலங்கைக்கு கிடைக்கும்.அதேபோன்று வீட்டுத் தோட்டங்களில் பயிர் செய்யக்கூடிய வகையில் 5,000 ரூபா உதவியை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன்படி வீடுகளில் பயன்படுத்தக் கூடிய காணிகளில் தமக்கு தேவையான பயிர்ச்செய்கை மேற்கொள்ளுமாறு கோரியுள்ளோம் என்றார்.

# இலங்கையின் முதல் விமானப்படை தளபதிக்கு ஜனாதிபதி இறுதி அஞ்சலி



இலங்கை விமானப்படையின் முதல் விமானப்படைத் தளபதியான அமரர் ஓய்வு பெற்ற எயார் ஷீப்மார்ஷல் பத்மன் ஹரிப்பிரசாத மெண்டிஸின் பூதவுடலுக்கு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இறுதி அஞ்சலி செலுத்தினார்.

கல்கிஸை பிரதேசத்திலமைந்துள்ள தனியார் மலர்ச்சாலையில், இறுதி அஞ்சலிக்காக அவரது பூதவுடல் வைக்கப்பட்டுள்ள நிலையில், நேற்று (19) அங்கு சென்ற ஜனாதிபதி இறுதி அஞ்சலி செலுத்தியதோடு, குடும்பத்தினருக்கு தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொண்டார்.

ரோயல் லங்கா விமானப்படையின் ஐந்தாவது பயிற்சி அதிகாரியாகத் தனது தொழில் வாழ்க்கையை ஆரம்பித்த மெண்டிஸ், பிரித்தானியாவில் விமானி ஆலோசகர் பதவி மற்றும் விமானப் பயிற்றுவிப்பாளருக்கான பயிற்சிகளைப் பெற்ற முதல் இலங்கையர் என்றும் வரலாற்றில் இடம்பிடித்துள்ளார்.

1971ஆம் ஆண்டில், ரோயல் லங்கா விமானப்படையின் நான்காவது விமானப்படைத் தளபதியாக ஹரிப்பிரசாத மெண்டிஸ் நியமனம் பெற்றார்.

1972 ஆம் ஆண்டில், ரோயல் லங்கா விமானப்படையானது இலங்கை விமானப்படையாக மாற்றம் பெற்ற நிலையில், அதன் முதலாவது விமானப்படைத் தளபதியாக அவரே பதவி வகித்தார்.

ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் கமல் குணரட்ண, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜனத் அல்விஸ், விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் சுதர்ஷன பத்திரண உள்ளிட்ட பலரும் இறுதி அஞ்சலி நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

உள்ளூராட்சித் திணைக்களம் - வடக்கு மாகாணம்

**௨0௧௨ஆம் ஆண்டின் ௨௨ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தின் கீழான கூட்ட அறிவித்தல்**

வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளராகிய மரியதாஸ் பற்றிக் டிறஞ்சன் ஆகிய என்னால் 2012ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தின் 66(எ) பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் வடக்கு மாகாணத்திற்குள் அமைந்துள்ள மன்னார் பிரதேச சபையின் வெற்றிடமாகவுள்ள உப தவிசாளரை தேர்ந்தெடுப்பதற்கான கூட்டம் 2022.02.01ஆம் திகதி காலை 10.30 மணிக்கு மன்னார் பிரதேச சபையின் மண்டபத்தில் கூட்டப்படும் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

**மரியதாஸ் பற்றிக் டிறஞ்சன்,**
**உள்ளூராட்சி ஆணையாளர்,**
**வடக்கு மாகாணம்**

**உள்ளூராட்சி திணைக்களம்,**
**வடக்கு மாகாணம்,**
**முதியோர் இல்ல வளாகம்,**
**A9 வீதி, கைதடி,**
**யாழ்ப்பாணம்.**
**18.01.2022**

# இசை சங்கமம் பாடல் வெளியீட்டு விழா



கவிஞரும் , தமிழ் திரைப்பட பாடலாசிரியருமான பொத்துவில் அஸ்மின் எழுதிய பாடல்களின் வெளியீட்டு விழா எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணிக்கு Colombo City Center Scope திரையரங்கில் நடைபெறவுள்ளது.

தெரண தொலைக்காட்சி அனுசரணையில் "நாடி" தயாரித்துள்ள இப்பாடல்களுக்கு நிமேஸ் குலசிங்க, சத்துரங்க டி சில்வா ஆகியோர் இசை வழங்கியுள்ளனர்.

பாடல்களை கோகுலன் சாந்தன், சுதர்சினி கோணேஸ்வரன், குகனேஸ்வரன், சாதீர் அஹமட், ரவி றொயிஸ்ட்டர் ஆகியோர் பாடியுள்ளனர். தெரண தொலைக்காட்சியின் பிரதித்தலைவரும் பிரதம நிறைவேற்று பணிப்பாளருமான லக்சிறிவிக்ரமகேயின் எண்ணக்கருவில் உருவான "இசை சங்கமம்" பாடல்களில் இலங்கையின் அனைத்து சமூகத்தை சேர்ந்த கலைஞர்களின் பிரதிநிதிகளும் பங்களிப்பு செய்துள்ளனர்.

இந்த பாடல்களை இயக்கி, விழாவினை நெறிப்படுத்தியுள்ளார் தெரண தொலைக்காட்சியின் நிகழ்ச்சி பிரிவு பணிப்பாளர் சர்மிளா தர்மராசா. இப்பாடல் வெளியீட்டு விழாவுக்கு இசையமைப்பாளர்களான தினா,சதீஸ் வர்சன், சிறிகாந்தேவா, ஆர்.கே.சுந்தர், தாஜ்நூர், பாடகர் வேல் முருகன், நடிகரும் இயக்குனருமான காதல் சுகுமார், நண்டு ஜெகன், இயக்குனர் ராசய்யா கண்ணன், இயக்குனர் ஆர்.முத்துக்குமார், பிரபல தமிழ் சினிமா விமர்சகர் "வலைப்பேச்சு" அந்தணன் ஆகியோர் வாழ்த்துக்களை வழங்கியுள்ளனர்.

**2012 இல. 22 உள்ளூராட்சி நிறுவன வாக்கெடுப்பு (திருத்தப்பட்டது) சட்டத்தின் திருத்தப்பட்ட உள்ளூராட்சி நிறுவன வாக்கெடுப்பு சட்டவாக்கத்தின் 66 எ பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 66 உ பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்**

சப்ரகமுவ மாகாணத்தின் உள்ளூராட்சி ஆணையாளர் துலிப் சொமிரத்ன ஆகிய நான் 2012 இல. 22 எனும் உள்ளூராட்சி நிறுவன வாக்கெடுப்பு (திருத்தப்பட்ட) சட்டத்தின் திருத்தப்பட்ட 262 அதிகாரமான உள்ளூராட்சி நிறுவன வாக்கெடுப்பு சட்டவாக்கத்தின் 66எ பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 66உ பிரிவின் கீழ் எனக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் சப்ரகமுவ மாகாணத்தின் அமைந்துள்ள இங்கு கீழே அட்டவணையின் கீழ் பெயர் குறிப்பிடப்படும் உள்ளூராட்சி நிறுவனத்தில் வெற்றிடமாகவுள்ள தலைவர் பதவிக்காக புதிதாக தலைவர்களை தேர்ந்தெடுக்கும் விடயத்திற்காக அவ்அட்டவணையில் மாதிரியாக காட்டப்பட்டுள்ள நாட்களில் குறித்த நேரத்தில் அங்கு குறிப்பிடப்படும் இடங்களில் கூட்டத்திற்காக அழைக்கப்படும் என்பதை இத்தால் அறிவித்துக் கொள்கிறேன்.

**சொல்லப்பட்ட அட்டவணை**

| உள்ளூராட்சி நிறுவனத்தின் பெயர் | தேர்ந்தெடுக்கப்படும் பதவி | கோரப்படும் தினம் | கோரப்படும் நேரம் | கோரப்படும் இடம் |
|---|---|---|---|---|
| 1. பலாங்கொடை நகர சபை | தலைவர் பதவி | 2022.01.27 | மு.ப. 10.00 | பலாங்கொட நகர சபையின் சபைக் கூட்ட மண்டபம் |
| 2. மாவனல்லை பிரதேச சபை | தலைவர் பதவி | 2022.01.26 | மு.ப. 10.00 | மாவனல்லை பிரதேச சபையின் சபைக் கூட்ட மண்டபம் |

**துலிப் சொமிரத்ன**
**உள்ளூராட்சி ஆணையாளர்,**
**சப்ரகமுவ மாகாணம்.**

**2022 ஜனவரி 20ம் திகதி**
**இரத்தினபுரி புதிய நகரில் அமைந்துள்ள**
**சப்ரகமுவ மாகாண சபையின் உள்ளூராட்சி திணைக்களம்**


திகதி 18.01.2022 செவ்வாய்க்கிழமை www.nlb.lk உத்தியோகபூர்வ முடிவுகள் NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4651
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 10,958,910.00
ஆங்கில எழுத்து U வெற்றி இலக்கங்கள் 6 9 4 9 2 3
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 28,063,666.00

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் : 2946
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 65,305,920.00
ஆங்கில எழுத்து W வெற்றி இலக்கங்கள் 03 23 37 45
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 60,000,000.00

Mega POWER மெகா பவர் கோடி 10
சீட்டிழுப்பு இலக்கம் 999
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,856,320.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 167,715,234.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து E சுப்பர் இலக்கம் 21 வெற்றி இலக்கங்கள் 02 18 41 47

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 681
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,708,120.00
ஆங்கில எழுத்து C வெற்றி இலக்கங்கள் 31 52 62 81
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 93,054,759.20

செவண உங்களுக்கு வீடு - கைகளில் காசு
சீட்டிழுப்பு இலக்கம் : 344
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,377,060.00
ஆங்கில எழுத்து R வெற்றி இலக்கங்கள் 23 54 76 86
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 14,166,342.40

சுபிரி வாசனா
சீட்டிழுப்பு இலக்கம் :1671
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,895,920.00
சுப்பர் இலக்கம் 15 வெற்றி இலக்கங்கள் 05 13 36 58
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,644,430.40

ජාතික ලොතරැයි මණ්ඩලය தேசிய லொத்தர் சபை National Lotteries Board
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324 பெக்ஸ்: 0114 669 416


# காரைதீவு தவிசாளருக்கு கொரோனா தொற்று

*காரைதீவு குறூப் நிருபர்*

காரைதீவு பிரதேச சபைத் தவிசாளர் கிருஸ்ணபிள்ளை ஜெயசிறிலுக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டிருக்கிறது. புதன்கிழமை (19) காய்ச்சல் இருப்பதையுணர்ந்த தவிசாளர் காரைதீவு சுகாதார வைதத்திய அதிகாரி பணிமனையுடன் தொடர்புகொண்டு அன்ரிஜன் செய்யவேண்டி ஆலோசனையை கேட்டார்.

அதன்படி சிரேஸ்ட பொதுச் சுகாதார பரிசோதகர் சா.வேல்முருகு தலைமையிலான குழுவினர் தவிசாளரது வீட்டிற்கு விஜயம்செய்து அன்ரிஜன் சோதனையை மேற்கொண்டனர்.

அதன்படி தவிசாளர் அவரது மனைவி மற்றும் அவரது மகள் ஆகியோருக்கு தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டது.

2022ஆம் ஆண்டு பெப்ரவரி 23ஆம் திகதி 1.00 p.m இற்கு மேற்படி வழக்கின் 2019.ஆம் ஆண்டு ஒக்டோபர் 02ஆம் திகதி வெளியிடப்பட்ட தீர்ப்பினை நடைமுறைப்படுத்தும் முகமாக எதிராளிக்கு உரித்தான பின்வரும் அட்டணையில் குறிப்பிடப்பட்டுள்ள அசையும் ஆதனம் இலக்கம் 24/2, 6ஆம் ஒழுங்கை நாவல, ராஜகிரிய என்ற முகவரியில் விற்பனைக்காக மேற்கொள்ளப்பட்ட ஏல விற்பனையில் ஏனைய போட்டி ரீதியிலான கேள்விதாரர்கள் இல்லையெனின் மேற்குறிப்பிடப்பட்டுள்ள வழக்கில் வழங்கப்பட்டுள்ள எக்ஸ்கியின் கீழ் விற்பனைக்காக விளம்பரம் செய்யப்பட்ட ஆதனங்களை விலைமதிப்பீடு செய்யப்பட்ட பெறுமானத்திற்கு அல்லது அதற்கு மேற்பட்ட தொகை அல்லது முறைப்பாட்டாளரினால் உரித்துரிமை கோரப்பட்ட தொகையினதும் அதன் வட்டியின் மற்றும் வழக்குக் கட்டணத்தின் பெறுமானம் மற்றும் அதன் பெறுமானத்திற்கு நிகரான தொகைக்கு விண்ணப்பதாரர்கள் இல்லையெனின், அதன் பின்னாலுள்ள கூடிய கேள்விதாரருக்கு அல்லது கேள்வி கோரி கொள்வனவு செய்வதற்கு முறைப்பாட்டாளருக்கும் அவரின் பிரதிநிதிகளுக்கும் அவர் சார்பில் ஏதேனும் நபரொருவருக்கும் வாய்ப்பளிக்குமாறு முறைப்பாட்டாளரினால் குறித்த ஆதனமானது, கொள்வனவு செய்யப்படுமிடத்து, அவரினால் உரித்துரிமை மேற்கொள்ளப்படும் தொகையினதும், அதன் வட்டியினதும் வழக்குக் கட்டணங்களின் தொகை வரை முறைப்பாட்டாளருக்கு வரவு கிடைக்கக்கூடியவாறு கொழும்பு மாவட்ட நீதிமன்றப் பதிவாளர் மற்றும் பிஸ்கால் அலுவலருக்கு இத்தால் கட்டளை பிறப்பிக்கப்படுகின்றது.

**மேற்படி அட்டவணை**

| | | |
|---|---|---|
| 01. | Seepower வகை உடற்பயிற்சி இயந்திரம் TGK 243E | 01 |
| 02. | சோப்பா துண்டுகள் 2 | 01 |
| | துண்டு 1 | 01 |
| | L மாதிரி | 02 |
| | சோப்பா டேபல் | 01 |
| 03. | மின்சார ஓகன் - Yamaha வகை (ஸ்டான்டுடன்) PSRE 373 | 01 |
| 04. | 65" சொப்ட்லொஜிக் வகை தொலைக்காட்சிப் பெட்டி | 01 |
| 05. | TV ஸ்டான்ட் | 01 |
| 06. | சம்சுன் வகை ஹோம் தியட்டர் | 01 |
| 07. | 05 கதிரைகளுடன் வட்ட வடிவான உணவு மேசை | 01 |
| 08. | Welling வகை அவன் | 01 |
| 09. | கென்வுட் வகை மிக்சர் | 01 |
| 10. | LG வகை 02 கதவு குளிர்சாதனப் பெட்டி | 01 |
| 11. | JBL வகை ஸ்பீக்கர் | 01 |
| 12. | MDF வகை 02 கதவுகள் (உயரம் 7') அலுமாரி | 01 |
| 13. | MDF வகை 02 கதவுகள் (உயரம் 6') அலுமாரி | 01 |
| 14. | MDF வகை அலுவலக மேசைகள் உயரம் 5 அடி மற்றும் 4 அடி | 02 |
| 15. | MDF வகை அலுமாரி - 02 கதவுகள் | 01 |
| 16. | AC இயந்திரங்கள் | 01 |
| 17. | MDF 07 அடி உயரமுள்ள 04 கதவுகளுடன் Dressing Table உடன் அலுமாரி | 01 |
| 18. | Time Work FX வகை உடற்பயிற்சி இயந்திரம் | 01 |
| 19. | 03 கதவுகளுடன் மரத்தினாலான அலுமாரி | 01 |
| 20. | Sisil வகை மின் விசிறி | 01 |
| 21. | Body Slim Jogging உடற்பயிற்சி இயந்திரம் | 01 |

**விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)**

**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை**

**முழு ஆடைப்பால்மாவை வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல்**

**கேள்வி இல. Q 52/22**

2022-02-10ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை முழு ஆடைப்பால்மாவை வழங்குவதற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் இப்போது கோருகின்றார்.

விலைமனுக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.

விலைமனுதாரர்கள் இலங்கையில் முழு ஆடைப்பால்மாவை வழங்குவதில் முன்னைய அனுபவமுள்ள உற்பத்தியாளர்கள்/முகவர்கள்/அங்கீகரிக்கப்பட்ட விநியோஸ்தர்களாகவிருக்கலாம்.

வழங்கல் அலுவலகத்திலிருந்து 2022.01.20ஆம் திகதியிலிருந்து 2022.02.09ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணிக்கும் பி.ப. 3.00 மணிக்குமிடையில் விலைமனு ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம். ஆவணத்தைப் கையேற்பதற்காக 3,000.00 ரூபாவை மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமாக செலுத்திய பின்னர் விலைமனுதாரர் எழுத்துருவிலான கோரிக்கையொன்றுடன் மீளளிக்கப்படாத கட்டணத்திற்காக ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் கணக்காளரினால் வழங்கப்பட்ட பணப்பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 8ஆம் பந்தியின் கீழ் கம்பனிகள் பதிவாளரினால் வழங்கப்பட்ட ஓர் பதிவுச் சான்றிதழின் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியுடன் விண்ணப்பித்தல் வேண்டும்.

உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட இரு பிரதிகளிலான விலைமனுக்கோரல் ஆவணங்கள் ''மூலப்பிரதி'' மற்றும் ''நகல்பிரதி'' என இரு தபாலுறைகளில் உள்ளிட்டு, முத்திரையிடப்பட்டு அவ்விரண்டும் ஒரு தபாலுறையில் அடக்கப்பட்டு, முத்திரையிடப்பட்டு அதனது இடது பக்க மேல் மூலையில் ''முழு ஆடைப்பால்மாவை வழங்குதல் – Q 52/22 - முடிவுறுத்தல் திகதி 2022-02-10'' எனக் குறிப்பிடப்படல் வேண்டும். விலைமனுக்கள் 2022.02.10ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது தலைவரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படலாம். தாமதமான விலைமனு சமர்ப்பிப்புகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

விலைமனுதாரர் 75,000.00 ரூபாவுக்கான விலைமனுப் பிணையொன்றை விலைமனுவுடன் இணைத்தல் வேண்டும்.

பெற்றுக்கொள்ளப்பட்ட விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே வைத்தியசாலையின் விரிவுரை மண்டபத்தில் திறக்கப்படுவதுடன் விலைமனுதாரர் அல்லது அவருடைய பிரதிநிதியொருவர் இந்நிகழ்வின் போது சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவர்.

மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து 0112-778624 நீடிப்பு 3140/3143 என்ற தொலைபேசி எண்ணினூடாக தொடர்பு கொள்ளவும். விலைமனுக்கோரல் ஆவணங்கள் இலவசமாக பரீட்சித்துப் பார்க்கலாம். விலைமனுவை முழுமையாக அல்லது பகுதியாக ஏற்றுக் கொள்வதற்கு அல்லது நிராகரிப்பதற்கான உரிமையை அமைச்சு பெறுகைக் குழுவானது தன்னகத்தே கொண்டுள்ளது.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை,**
**தளபத்பிட்டிய,**
**நுகேகொட.**



கடற்றொழில் அமைச்சு

அலங்கார மீன்கள், நன்னீர் மீன்கள், இறால்களை வளர்த்தல், கடற்றொழில் துறைமுகங்கள் அபிவிருத்தி, பலநாள் கடற்றொழில் அலுவல்கள் மற்றும் மீன் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சு

CEYFISH

**இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம்**

**காலி குளிரூட்டப்பட்ட 4 ஆம் மற்றும் 5 ஆம் இலக்க அறைகள்**
Tender No: (i) CFC/SD/GCR/2021 - 07

**காலி பனிக்கட்டி தொழிற்சாலை**
Tender No: (ii) CFC/SD/GI/2021 - 07

**மேற்குறிப்பிடப்பட்ட சொத்தை 10 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான விலைமனுக்கோரல்**

இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் பெறுகை குழுவின் தலைவரினால் இது தொடர்பாக ஆர்வமுள்ள உள்நாட்டு மனுதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

மேற்குறிப்பிட்ட இரண்டு விலைமனுக்களுக்குமான தனித்தனி ஆவணங்களை பெறுவதற்கு எழுத்துப்பூர்வ கோரிக்கையை இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் தலைவரிடம் செலுத்த வேண்டும் மற்றும் **மீளச்செலுத்தப்படாத பத்தாயிரம் (ரூ.10,000.00)** கட்டணத்தினை **2022.01.20 ஆம் திகதி தொடக்கம் 2022.02.10 ஆம்** திகதி வரை அலுவலக நாட்களில் **மு.ப.9.00 மணி முதல் பி.ப.2.00 மணி** வரை செலுத்தி மனு ஆவணத்தினை வழங்கல் முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

மனுக்களை சமர்ப்பிக்கும்போது (I) CFC/SD/GCR/2021-07 ஒப்பந்தத்திற்காக **ரூ.1 மில்லியன் (ரூ.10 இலட்சம்) மற்றும்** (II) CFC/SD/GI/2021-07 **ரூ.2 மில்லியன் (ரூ.20 இலட்சம்)** பெறுமதியான மனு பாதுகாப்பு பிணையினை தலைமை அலுவலகத்தின் சரப்பிடம் பணமாக செலுத்திய இரசீது நகலை மனுவுடன் சமர்ப்பிக்க வேண்டும்.

இது ஒரு திறந்த மனுக்கோரலாவதுடன், தள பரீட்சிப்பு **2022.01.28** ஆம் திகதி இடம்பெறுவதுடன் மற்றும் மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்வதற்காக **071-2045355** எனும் கைத்தொலைபேசி எண்ணிற்கு அழைப்பதன் மூலம் வழங்கல் முகாமையாளரிடமிருந்து மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ளலாம்.

பூரணப்படுத்தப்பட்ட மனு ஆவணங்களை **2022.02.11 ஆம் திகதி பி.ப.2.00** மணிக்கு முன்னர் கிடைக்குமாறு பதிவுத்தபாலில் **தலைவர், இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம், இல-15, றொக் ஹவுஸ் ஒழுங்கை, மோதரை, கொழும்பு 15** எனும் முகவரியில் வைக்கப்பட்டுள்ள மனுப் பெட்டியில் இடுதல் வேண்டும். தாமதமாக கிடைக்கப்படும் மனுக்கள் நிராகரிக்கப்படும்.

மனு கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் கீழ்க் குறிப்பிடப்பட்ட முகவரியில் மனுதாரர்கள் முன்னிலையில் **2022.02.11** ஆம் திகதி **பி.ப. 02.00** மணிக்கு திறக்கப்படுவதுடன், முன்மனுக் கூட்டம் **2022-02-01** ஆம் திகதி **மதியம் 12.00** மணிக்கு **இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தில்** இடம்பெறும்.

மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்வதற்காக **011-2540092 அல்லது 071-2045355** எனும் தொலைபேசி மூலமாக முகாமையாளர் (வழங்கல்) அவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**கொள்முதல் குழு**
**இலங்கை கடற்படை கூட்டுத்தாபனம்**
**இல- 15, றொக் ஹவுஸ் ஒழுங்கை, மோதர,**
**கொழும்பு 15.**

# கிழக்கின் குரல்

## கல்முனை சுகாதார பிரிவில் கொவிட் தொற்று அதிகரிப்பு

### கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி அஸ்மி

(கல்முனை மத்திய தினகரன் நிருபர்)



கல்முனை பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் நாளுக்கு நாள் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து காணப்படுகிறது. கடந்த டிசம்பர் மாதம் இறுதி வாரம் முதல் இதுவரை கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 27 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதால், சுகாதார நடைமுறைகளை இறுக்கமாக பேணி நடந்து கொள்ள வேண்டுமென கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி ஏ.ஆர்.எம். அஸ்மி பொது மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பொது மக்கள் சுகாதார நடைமுறைகளை பின்பற்ற வேண்டியது அவசியமாகும். நாளுக்கு நாள் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டு வருகின்றனர். குறிப்பாக சமூக இடைவெளி, முக கவசம் என்பவற்றை முறையாக அணிந்து கொள்ள வேண்டும். இதன் மூலம் நாம் தொற்று நிலையினை கட்டுப்படுத்த முடியும்என்றார்.

தற்போது தடுப்பூசி செலுத்தும் பணிகள் இடம்பெற்று வருகிறது. இதுவரை தடுப்பூசி பெறாதவர்கள் மற்றும் முதலாவது இரண்டாவது தடுப்பூசி பெற்றவர்களுக்கான மூன்றாவது பூஸ்டர் தடுப்பூசி செலுத்தும் பணிகள் கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தில் இடம்பெற்று வருகிறது.

பொது மக்கள் தங்களின் நலன் கருதி தடுப்பூசியை பெற்றுக் கொள்ள வேண்டும். தடுப்பூசியை பெற்றுக் கொண்டாலும் சுகாதர நடைமுறைகளை பின்பற்றி நடந்து கொள்ள வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார்.

## கல்முனை பிராந்திய சுகாதார பணிப்பாளராக றிபாஸ் கடமையேற்பு

(கல்முனை விசேட நிருபர்)



கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள வைத்திய கலாநிதி ஐ.எல்.எம். றிபாஸ் புதன்கிழமை (19) தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார். கடந்த சில வருடங்களாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக கடமையாற்றி வந்த வைத்திய கலாநிதி ஜி.சுகுணன் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக இடமாற்றம் பெற்றுச் சென்றதையடுத்து, ஏற்பட்ட வெற்றிடத்திற்கே இவர் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்.

பொத்துவில் ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகராக கடமையாற்றி வந்த நிலையிலேயே வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸ், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் இப்பதவிக்கு நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்.

கடமையேற்பு நிகழ்வில் இடமாறிச் செல்லும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஜி.சுகுணன், கல்முனைபிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் எம்.எம். வாஜித், பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் திட்டமிடல் வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சி.எம்.மாஹிர் உட்பட வைத்திய அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் பலரும் பங்கேற்றிருந்தனர்.இதன்போது பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் வைத்திய அதிகாரிங்கள் மற்றும் உத்தியோகத்தர்களினால் வரவேற்கப்பட்ட புதிய பணிப்பாளர், அனைவரது வாழ்த்துக்களையும் ஏற்றுக் கொண்டு நன்றி தெரிவித்தார்.

## வீதியை புனரமைக்குமாறு வேண்டுகோள்



(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)

மட்டக்களப்பு போரதீவுப்பற்று பிரதேச சபைக்குட்பட்ட சமிளையடி வட்டை வீதி நீண்டகாலமாக பழுதடைந்து உள்ளதால் அவ்வீதியை பயன்படுத்தும் மக்கள் மிகுந்த சிரமங்களையும். அசௌகரியங்களையும் எதிர்கொண்டு வருவதாக கவலை தெரிவிக்கின்றனர். அவ்வீதியை பயன்படுத்தும் பல நூற்றுக்கணக்கான விவசாயிகள், பொதுமக்கள், மாணவர்கள், அரச கடமைகளுக்குச் செல்லும் உத்தியோகத்தர்களென பலதரப்பட்டோரும், போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையில் உள்ளதால் ,அவ்வீதியை புனரமைப்புச் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

## தைப்பொங்கல் விழாவில் சாதனை மாணவிக்கு 'தங்கத்தாரகை' விருது

(காரைதீவு குறூப் நிருபர்)

காரைதீவு பிரதேச சபையின் வருடாந்த தித்திக்கும் தைப்பொங்கல் பெருவிழா செவ்வாய்க்கிழமை (18) தைப்பூசதினத்தன்று காரைதீவு பிரதேச சபைத் தவிசாளர் கிருஸ்ண பிள்ளை ஜெயசிறில் தலைமையில் பிரதேச சபையில் சிறப்பாக நடைபெற்றது.

பிரதம அதிதியாக கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பணிமனையின் தலைமை பொறியியலாளர் ஏ.எஸ்.கௌரிபாலன், கௌரவ அதிதியாக அம்பாறை மாவட்ட உதவி உள்ளூராட்சி ஆணையாளர் எஸ்.எல். எ.கமல் நெத்மினி ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

அம்பாறை மாவட்ட உதவி உள்ளூராட்சி ஆணையாளர் பணிமனையின் சனசமுக அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.ரவீந்திரமூர்த்தி சிறப்பு அதிதியாகக் கலந்துகொண்டார்.



சாதனை அதிதியாக கலந்துகொண்டகொழும்பு மருத்துவ பீடத்தில் அதிகூடிய 13 தங்கப் பதக்கங்களைப் பெற்று முதல் தர மாணவியாக தெரிவு செய்யப்பட்ட அக்கரைப்பற்றைச் சேர்ந்த சாதனை மாணவியும் மட்டக்களப்பு போதனா வைத்திய சாலை வைத்திய அதிகாரியுமான டாக்டர் தர்ஷிகா தணிகாசலம் பொன்னாடை போர்த்தி 'தங்கத்தாரகை' ,'சாதனைச்செல்வி' , 'தங்கமகள்' போன்ற பல விருதுகள் மற்றும் நினைவுச் சின்னங்கள் வழங்கப்பட்டு பாராட்டப்பட்டார். இக்கௌரவம் காரைதீவு மண்சார்பாக பிரதேச சபையால் மாத்திரமன்றி சர்வதேச தமிழ் அன்பர்களாலும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

விழாவில் காரைதீவு பிரதேச சபை உறுப்பினர்களான ச.சசிக்குமார் திருமதி எஸ்.ஜெயராணி எம்.எச்.எம்.இஸ்மாயில் எச்எம்.எம். றனீஸ் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

## மட்டக்களப்பு பிராந்திய சுகாதார பணிப்பாளராக சுகுணன் நியமனம்

(மட்டக்களப்பு விசேட, கல்லடி குறூப், புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்கள்)



மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளராக வைத்தியர் குணசிங்கம் சுகுணன் செவ்வாய்கிழமை (18) நியமிக்கப்பட்டுள்ளார். சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி அசேல குணவர்த்தன தனக்கு கடிதம் ஒன்றின் ஊடாக மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக கடமையாற்றுமாறு கேட்டுக் கொண்டதற்கிணங்க, கல்முனை பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் பதவியில் இருந்து உடனடியாக இடமாற்றம் பெற்று கடமையை பொறுப்பேற்றார். தனது பதிவிக்காலத்தில் கல்முனை பிராந்தியத்தில் ஊடகவியலாளர்களின் பங்களிப்பு உச்சக்கட்டத்தில் தனக்கு கிடைக்கப்பெற்றதாகவும், இதனால் மக்கள் உடனடியான தகவல்களை பெறுவதற்கு பங்களிப்பு வழங்கிய ஊடகவியலாளர்கள் ஊடகங்களுக்கு நன்றி தெரிவிப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

## வவுணதீவு வயல் பகுதியில் முதியவர் ஒருவரின் சடலம் மீட்பு

(பெரிய போரதீவு தினகரன் நிருபர் )

மட்டக்களப்பு வவுணதீவு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பொன்னாங்கேணிச்சேனை பிரதேசத்தில் உள்ள வயல்வெளியில் இருந்து முதியவர் ஒருவர் செவ்வாய்கிழமை மாலை (18) சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.நாவற்காடு, மாவடித்தீவு பிரதேசத்தைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான 76 வயதுடைய தம்பியப்பா சுப்பிரமணியம் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மேற்படி நபர் பொன்னாங்கேணிச் சேனை பிரதேசத்தில் வாடியமைத்து அங்கிருந்து தனது வயல் மற்றும் மாடுகளை நீண்டகாலமாக பராமரித்து வருவதாகவும், இடையிடையே தனது வதிவிடத்திற்கு சென்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவ தினத்தன்று உறவினர் ஒருவர் குறித்த பிரதேசத்திற்கு சென்றவேளை, வாடிக்கு அருகில் உள்ள வயல் பிரதேசத்தில் மரணமடைந்த நிலையில் சடலமாக காணப்பட்டதாக பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்ற நீதிவான் ஏ.சி.றிஸ்வானின் உத்தரவிற்கமைவாக சம்பவ இடத்திற்கு சென்ற மண்டூர் பிரதேச திடீர் மரணவிசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சடலத்தை பார்வையிட்டதுடன், சடலத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்துமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.மேலதிக விசாரணைகளை வவுணதீவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## அம்பாறையில் நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தை மீறியோருக்கு அபராதம்

### மாவட்ட புலனாய்வு உத்தியோகத்தர் கே.எம்.ஏ. றிஸ்லி

(ஒலுவில் விசேட நிருபர்)

அம்பாறை மாவட்டத்தில் கடந்த வருடம் 2021ஆண்டு நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தை மீறி அத்தியவசியப் பொருட்களை விற்பனை செய்த வர்த்தகர்களுக்கெதிராக தாக்கல் செய்யப்பட்ட 359 வழக்குகளுக்கு நீதிமன்றங்களினால் 15 இலட்சத்தி 43 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் அம்பாறை மாவட்ட புலனாய்வு உத்தியோகத்தர் கே.எம்.ஏ. றிஸ்லி தெரிவித்தார்.

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தை மீறி அத்தியவசிய பொருட்களை விற்பனை செய்த குற்றச்சாட்டின் பேரில் 522 வர்த்தகர்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகவும், இதில் 428 வர்த்தகர்களுக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதாகவும் தெரிவித்தார்.

பயணத்தடை மற்றும் கொவிட்19 காலப்பகுதியில் கூடுதலான விலைக்கு பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர்கள் செய்த முறைப்பாட்டையடுத்து அம்பாறை, தெஹியத்தக்கண்டி, பொத்துவில், அக்கரைப்பற்று, கல்முனை, சம்மாந்துறை ஆகிய பிரதேசங்களிலுள்ள வர்த்தக நிலையங்களில் திடீர் சுற்றிவளைப்புகள் மேற்கொண்டதாகவும் தெரிவித்தார்.

இச் சுற்றிவளைப்பின் போது நுகர்வோர் நலன் கருதி வர்த்தக நிலையங்களில் விலைப்பட்டியலை காட்சிப்படுத்தாமை கட்டுப்பாட்டு விலையை விட கூடுதல் விலைக்கு பொருட்களை விற்பனை செய்தல், நுகர்வுக்குப் பொருத்தமில்லாத பொருட்களை காட்சிப்படுத்தியமை உள்ளிட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்ட வர்த்தகர்களுக்கெதிராகவே நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ததாக கூறினார்.

## கந்தளாயில் வாயு அடுப்பு வெடிப்பு

கந்தளாய் தினகரன் நிருபர்

திருகோணமலை கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நான்காவது வாயு அடுப்பு வெடிப்பு சம்பவம் ஒன்று கந்தளாய் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் புதன்கிழமை (19)இடம்பெற்றுள்ளது. கந்தளாய், இரண்டாம் குலனி பகுதியில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக கந்தளாய் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவத்தில் எந்த விதமான உயிர் சேதங்களும் ஏற்படவில்லை என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கந்தளாய் பிரதேசத்தில் ஏற்கனவே மூன்று இடங்களில் கேஸ் வெடிப்புச் சம்பவங்கள் நிகழ்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கந்தளாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



கிழக்கு மாகாண சபையின் நிதி ஒதுக்கீட்டில் சம்மாந்துறை பிரதேச சபையினால் பாடசாலைகளில் கழிவுகளை சேகரிப்பதற்காக திண்மக்கழிவு முகாமைத்துவத்திற்கு ஏற்ற வகையில் கழிவுகளை தரம் பிரித்து பெற்றுக் கொள்வதற்காக மூடியுடனான வாளி புதன்கிழமை (19) சம்மாந்துறை பிரதேச சபை தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌஷாட் பாடசாலை அதிபர்களிடம் வழங்குவதை படத்தில் காணலாம். (படம்: சவளக்கடை குறூப் நிருபர்)

## கிண்ணியாவில் கடலரிப்பு; திருமலை பிரதான வீதி பாதிப்பு



தோப்பூர் குறூப் நிருபர்

திருகோணமலை கிண்ணியா உப்பாறு பாலத்திற்கு அருகில் கிண்ணியா நோக்கி அமைந்துள்ள கடற்கரையானது மிக வேகமாக அரிப்புக்குள்ளாவதால் திருகோணமலை_ மட்டக்களப்பு பிரதான வீதி மிக வேகமாக பாதிப்படையும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளதாக பொது மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடலரிப்பினால் கடலுக்கும் பிரதான பாதைக்கும் இடையே ஒரு சில மீட்டர் இடைவெளி காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இக்கடலரிப்பைத் தடுப்பதற்காக பாரிய கருங்கள் இடப்பட்டு தற்போது தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

கிண்ணியா பிரதேசத்தில் கடலரிப்பினால் பல மீட்டர்கள் கடலுக்குள் இழக்கப்பட்டுள்ளதுடன், பிரதான வீதி ஒன்றும் முழுமையாக அரிக்கப்பட்டு பாரிய நிலப்பகுதியை கிண்ணியா பிரதேச மக்கள் இழந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

## திருக்கோவிலை சேர்ந்த கவிஞர் கல்கிதாசன் கனடாவில் காலமானார்

(திருக்கோவில் தினகரன் நிருபர் )



திருக்கோவிலை பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட எஸ்.பி. கனகசபாபதி நேற்று கனடாவில் காலமானர்,

இவர் 90 ஆம் ஆண்டு காலப் பகுதியில் திருக்கோவில் முருகன் ஆலயத்தின் படம் பொறிக்கப்பட்ட கனேடிய முத்திரையை வெளியிட்டு திருக்கோவில் பிரதேசத்தை உலகறிய செயித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவர் எஸ். பி.செவ்வேள், கதா, கனெக்ஸ், கல்கிதாசன் ஆகிய புனைபெயர்ககளில் கவிதை மற்றும் திருக்கோவில் பிரதேச இந்து ஆலயங்களுக்கு பக்திப் பாடல்கள் எழுதியுள்ளதுடன் , திருஞானவாணி, அறப்போர் அரியநாயகம், மட்டக்களப்பு மாநிலத்தின் பண்டைய வரலாற்று அடிச்சுவடுகள், கல்கிதாசன் கவிதைகள், தேரோடும் திருக்கோவில் ஆகியன இவரது நூல்கள். கனடாவில் வெளிவந்த முதல் சஞ்சிகையான 'எழில்' சஞ்சிகையின் ஆசிரியராக பணியாற்றிய இவர், கூத்துக் கலையில் ஈடுபாடு கொண்டு வில்விஜயன் என்னும் வடமோடிக் கூத்தைக் கனடாவில் பழக்கி அரங்கேற்றியவர்.

இவர் தனது படைப்பாற்றலுக்காக சுவாமி விபுலானந்தர் நினைவுத் தங்கப் பதக்கத்தையும் புலமைப் பரிசில்களையும் பெற்றுக் கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## சம்பூரில் மோட்டார் குண்டுகள் மீட்பு

(ரொட்டவெவ குறூப் நிருபர் )

திருகோணமலை சம்பூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இரண்டு மோட்டார் குண்டுகள் மீட்கப்பட்டுள்ளதாக சம்பூர் பொலிஸார் தெரிவித்தனர்.சம்பூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கட்டைபறிச்சான் அம்மன் நகர் பகுதியில் பற்றைக் காட்டுக்குளிருந்து மோட்டார் குண்டுகள் புதன்கிழமை (19) காலை மீட்கப்பட்டதாக பொலிசார் தெரிவித்தனர்.

திருகோணமலை சர்தாபுர பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்கு கிடைக்கப் பெற்ற தகவலையடுத்து குறித்த இடத்துக்கு சென்று மோட்டார் குண்டுகளை மீட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

# அரச உத்தியோகத்தர்கள் பொதுமக்களின் குறைகளை கேட்டறியும் வேலைத்திட்டம்

**யாழ். விசேட நிருபர்**

வடக்கு மாகாணத்தில் அரச உத்தியோகத்தர்கள் பொது மக்களின் குறை நிறைகளைக் கேட்டறியும் வேலைத்திட்டம் விரைவில் உருவாக்கப்படும் என வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்துள்ளார்.

நேற்றையதினம் யாழ்ப்பாணத்தில் உள்ள வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடமாகாண ஆளுநராக நான் கடமைகளை பொறுப்பேற்று மூன்று மாதங்களுக்கு மேலாகின்றது. எனக்கு ஒவ்வொரு நாளும் 20ற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைக்கின்றன.

சிலர் நேரிலும் வந்து என்னை சந்திக்கின்றனர். என்னை சந்திக்க வருபவர்கள் சிறுசிறு பிரச்சினைகளோடு வருகின்றனர்.

அப் பிரச்சினைகள் அனைத்தும் சாதாரண மட்டப் பிரச்சினைகள். அதாவது கிராம சேவையாளர் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஊடாக தீர்க்கப்பட வேண்டிய விடயங்கள். ஆனால் அவர்களால் தீர்க்கப்படாதவிடத்து என்னிடம் வருகின்றனர்.

நான் என்னிடம் வருபவர்களை திருப்பி அனுப்ப முடியாது. அவர்களுக்கு உரிய தீர்வினைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கிறேன். இதற்கென்று ஒரு திட்டத்தை கொண்டுவரவுள்ளேன். அதாவது அரச உத்தியோகத்தர்கள் இனிமேல் அலுவலகங்களில் மட்டும் கடமை புரியாது மக்களிடம் சென்று மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை தொடர்பில் ஆராய்ந்து எனக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். இந்த வேலைத்திட்டத்தை விரைவில் ஆரம்பிக்கவுள்ளேன் என அவர் தெரிவித்தார்.



போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வை கட்டியெழுப்பும் நோக்குடன் சேவையாற்றிவரும் மக்கள் நலன் காப்பகத்தின் பொங்கல் விழா அண்மையில் மாங்குளத்தில் அமைந்துள்ள மக்கள் நலன் காப்பக நடுவப்பணியகத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீதரனும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# மாணவிகள் மீது பாலியல் தொந்தரவு ஆசிரியருக்கு நிபந்தனைகளுடன் பிணை

**முல்லைத்தீவு நிருபர்**

முல்லைத்தீவில் பாடசாலை ஒன்றில் கடமையாற்றும் ஆசிரியர் ஒருவர் பாடசாலை மாணவிகளுக்கு பாலியல் தொந்தரவு கொடுத்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட ஆசிரியருக்கு கடும் நிபந்தனைகளுடன் பிணை வழங்கப்பட்டுள்ளது.

பாடசாலை மாணவிகள் மீது ஆசிரியர் பாலியல் தொந்தரவு செய்தமை தொடர்பில் பொலிஸ் சிறுவர், பெண்கள் பாதுகாப்பு பிரிவுக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டினை தொடர்ந்து 24.12.21 அன்று முல்லைத்தீவு பொலிஸாரால் ஆசிரியர் கைது செய்யப்பட்டிருந்தார்.

கைதுசெய்யப்பட்ட ஆசிரியர் விசாரணைகளின் பின்னர் முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட போது அவரை 04.01.2022 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து 04.01.2022 ஆம் திகதி வழக்கை விசாரணைக்கு எடுத்த முல்லைத்தீவு நீதிபதி சந்தேகநபரை நேற்றுமுன்தினம் 18.01.2022 வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டதோடு வழக்கு விசாரணைகளை நேற்றைய தினத்துக்கு தவணையிட்டிருந்தார்.

அதற்கமைய நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா முன்னிலையில் வழக்கு விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட போது ஆசிரியர் கடும் நிபந்தனைகளுடன் பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

ஐந்து இலட்சம் பெறுமதியான இரண்டு ஆட்பிணை, 25000 காசு பிணை மற்றும் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமைகளிலும் 9 தொடக்கம் 12 மணிக்குள் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் ஒப்பமிடுமாறும் சாட்சிகளுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் செயற்படக்கூடாது உள்ளிட்ட கடும் நிபந்தனைகளுடன் விடுவிக்கப்பட்டுள்ளதோடு வழக்கு விசாரணைகள் 05.04.2022 ஆம் திகதிக்கு தவணையிடப்பட்டுள்ளது.

# இராணுவக் கட்டுப்பாட்டிலிருந்த கட்டுவன்-மயிலிட்டி வீதியை விடுவிக்க நடவடிக்கை

**சாவகச்சேரி விசேட நிருபர்**

இராணுவக் கட்டுப்பாட்டில் நீண்டகாலமாக இருந்த யாழ். சர்வதேச விமான நிலையத்திற்கு செல்லும் பாதையான கட்டுவன்மயிலிட்டி வீதியின் 400மீற்றர் தூரத்தை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த வருட இறுதிப்பகுதியில் பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்ற பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனை சபைக் கூட்டத்தில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் இவ்வீதி விடுவிப்பின் அவசியத்தை எடுத்து கூறியிருந்தார். அதன்பயனாக இவ் வீதியை விடுவிக்க தற்சமயம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குறித்த வீதியில் விடுவிக்கப்படாது உள்ள 400 மீற்றர் வீதியை இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்து விடுவிக்க வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவிடம் முன் வைத்திருந்தார். அதற்கு ஜனாதிபதி உடனடியாக இதுதொடர்பாக ஆராயுமாறு இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவிற்கு பணிப்பு விடுத்திருந்தார். அதற்கமைய உயர்பாதுகாப்பு வலயமாக உள்ள 400 மீற்றர் பகுதியின் முட்கம்பி வேலிகள் இராணுவத்தினரால் பின்நகர்த்தப்பட்டு 400மீற்றர் பகுதியை கட்டுவன் மயிலிட்டி வீதியுடன் இணைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இது தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் கருத்து தெரிவிக்கையில்;

நல்லாட்சி காலத்தில் கட்டுவன்மயிலிட்டி வீதியில் உள்ள 400மீற்றர் பகுதியை விடுவிக்க பலரும் முயற்சி எடுத்த போதிலும் அது பயனளிக்கவில்லை. இந்நிலையில் ஆட்சி மாற்றத்தின் பின்னர் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவராக நானும்,முன்னாள் யாழ் மாவட்ட அரசாங்க அதிபரும் குறித்த வீதி விடுவிப்பு தொடர்பாக பாதுகாப்பு அமைச்சிற்கு கடிதம் அனுப்பி இருந்தோம்.

அதனைத் தொடர்ந்து கடந்த டிசம்பர் மாதம் ஜனாதிபதியிடமும் 400 மீற்றர் தூரத்தை விடுவிக்க வேண்டியதன் அவசியம் தொடர்பாக வலியுறுத்தி இருந்தேன். அதன் பலனாக தற்போது வீதியின் கிழக்குப் பக்கமாக உள்ள இராணுவ உயர் பாதுகாப்பு வலய முட்கம்பி வேலிகள் பின்நகர்த்தப்படுகின்றன.

தேசிய பாதுகாப்பு நிலைமைகளை ஆராய்ந்து ஆறு மீற்றர் தூரம் பாதுகாப்பு வேலிகளை நகர்த்தி 400மீற்றர் நீளமான பகுதி வீதி அபிவிருத்தி அதிகார சபையினரிடம் கையளிக்கப்படும்.

எனவே இவ்விடயத்தில் கரிசனை காட்டிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, இராணுவத் தளபதி சவேந்திர சில்வா மற்றும் அரச அதிகாரிகள் ஆகியோருக்கும் மக்கள் சார்பாக எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன் என அவர் தெரிவித்தார்.

# சாவகச்சேரியில் மின் மயானம் அமைப்பது தொடர்பில் கலந்துரையாடல்

**சாவகச்சேரி விசேட நிருபர்**

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதியில் மின் மயானம் அமைப்பது தொடர்பான ஆரம்பகட்டக் கலந்துரையாடல் ஒன்று நேற்றுமுன்தினம் நகரசபை பொன்விழா மண்டபத்தில் இடம்பெற்றது. நகரசபைத் தவிசாளர் சிவமங்கை இராமநாதன் தலைமையில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் சமூக சேவகர் கலாநிதி அகிலன் முத்துக்குமாரசுவாமி கலந்துகொண்டிருந்தார்.

சகல தரப்பினரையும் உள்வாங்கி மயான அபிவிருத்திக் குழு ஒன்றினை முதலில் நிறுவி அதன்மூலம் மின் மயான நடவடிக்கைகளை முன்னெடுப்பது தொடர்பில் தீர்மானிக்கப்பட்டது.

அந்தவகையில் எதிர்வரும் 22/01 சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நகரசபையில் மயான அபிவிருத்திக் குழுத் தெரிவு இடம்பெற இருப்பதால் ஆர்வமுள்ளோரை கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரியில் மின் மயானம் அமைப்பதற்கு தேவையான உத்தியோகபூர்வ நடவடிக்கைகள் எடுக்க முன்னராகவே 17 இலட்சம் ரூபாய் நிதி சேகரிக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆரம்ப கட்ட கலந்துரையாடலில் நகரசபை உறுப்பினர்கள் பங்கேற்று தமது ஆலோசனைகளையும் கருத்துக்களையும் முன்வைத்திருந்தனர்.

கொரோனா அபாய காலகட்டத்தில் கொரோனா சடலங்களை சொந்த ஊரில் தகனம் செய்ய முடியாமல் வெளி மாவட்டங்களுக்கு கொண்டுச் செல்ல வேண்டிய இக்கட்டான நிலை ஏற்பட்டிருந்தது.

எனவே இதனை கருத்திற்கொண்டு வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் அனுமதிக்கு அமைவாக சாவகச்சேரி நகரசபையினர் புலம்பெயர் உறவுகளின் நிதி உதவியுடன் மின் மயானம் அமைக்க எதிர்பார்த்து அதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



வவுனியா மகளிர் அபிவிருத்தி நிலைய மாணவர்களின் கண்காட்சி நிகழ்வு நேற்று (19) உள்வட்ட வீதியில் அமைந்துள்ள பலநோக்கு பயிற்சி நிலையத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் எடுக்கப்பட்ட படத்தைக் இங்கு காணலாம். படங்கள்: ஓமந்தை விஷேட நிருபர்

# வவுனியா ஓமந்தையில் கைக்குண்டு மீட்பு

**ஓமந்தை விசேட நிருபர்**

வவுனியா ஓமந்தை நாவற்குளம் பகுதியில் கைக்குண்டு ஒன்று நேற்று மீட்கப்பட்டுள்ளது. ஓமந்தை நாவற்குளம் பகுதியிலுள்ள தனியார் காணியினை துப்புரவு செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டபோதே குறித்த கைக்குண்டு அவதானிக்கப்பட்டுள்ளது. இவ்விடயம் தொடர்பில் ஓமந்தை பொலிஸ் நிலையத்தில் காணி உரிமையாளரால் தகவல் தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து பொலிஸாரினால் கைக்குண்டு அகற்றப்பட்டு அதனை செயலிழக்கச்செய்யும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஓமந்தை பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

# கரவெட்டியில் மினி சூறாவளி



**கரவெட்டி தினகரன், யாழ்.விசேட நிருபர்கள்**

கரவெட்டி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கரணவாய் பகுதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஏற்பட்ட மினி சூறாவளி காரணமாக 19 குடும்பங்களைச் சேர்ந்த 60 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் ரி.என். சூரியராஜ் தெரிவித்துள்ளார்.

கரணவாய் பகுதியின் ஜே 348 மற்றும் ஜே 350 பிரிவுகளிலேயே இந்த சேதவிவரங்கள் பதிவாகியுள்ளன. அதேவேளை 15 வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாக ரி.என்.சூரியராஜ் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை யாழ்ப்பாணத்தில் கடந்த 24 மணி நேரத்தில் திடீரென பெய்த மழை காரணமாக 119.2மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# சட்டவிரோத மணல் அகழ்வு; சந்தேக நபர்கள் 6 பேர் கைது

**முல்லைத்தீவு நிருபர்**




முல்லைத்தீவு ஐயன்கன்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் அனுமதிப்பத்திரம் இன்றி விதிமுறைகளை மீறி மணல் அகழ்வில் ஈடுபட்ட ஆறு டிப்பர் வாகனங்களை பொலிஸார் சுற்றிவளைத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஐயன்கன்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அம்பலபெருமாள்குளம், புத்துவெட்டுவான், கோட்டைகட்டியகுளம் ஆகிய பிரதேசங்களில் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் ஐயன்கன்குளம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பொ.ப.சுபுன் அபேசூரியவின் தலைமையிலான பொலிஸ் உத்தியோகத்தர்கள் நடாத்திய சோதனையில் சந்தேகநபர்கள் 6 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அனுமதிப்பத்திர நிபந்தனைகளை மீறி மணல் ஏற்றிச்சென்ற மற்றும் அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிச் சென்ற குற்றத்தின் அடிப்படையில் 6 சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சியாக ஐயன்கன்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் சட்டவிரோத மணல் அகழ்வு இடம் பெறுவதாகவும் இதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுப்பதில்லையெனவும் பொதுமக்கள் தொடர்ச்சியாக குற்றம் சுமத்தி வந்தனர்.

இந்நிலையில் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட இரகசிய தகவலின் அடிப்படையில் கடந்த 3 தினங்களில் 6 வாகனங்கள் சுற்றிவளைக்கப்பட்டு அதன் சாரதிகள் ஆறு பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட ஐயன்கன்குளம் பொலிஸார் வாகனங்கள் மற்றும் சந்தேக நபர்களை மாங்குளம் நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளனர்.

# முகமாலையில் மனித எச்சம் மீட்பு



**கிளிநொச்சி குறூப் நிருபர்**

பளை முகமாலை பகுதியில் மனித நேய கன்னிவெடி அகற்றும் பிரிவினரால் மனித எச்சமொன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முகமாலை பகுதியில் மனிதநேய கன்னிவெடி அகற்றும் பிரிவினரால் மனித எச்சமொன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து பளை பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதவானுக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து அப்பகுதிக்கு நேற்று (19) வருகை தந்த கிளிநொச்சி மாவட்ட நீதவான் குறித்த பகுதியை பார்வையிட்டிருந்தார்.

### நாட்டினதும் மக்களினதும் நலனே முக்கியம்

# உயர் சபைக்குள் குறுகிய அரசியல் நாடகங்கள் வேண்டாம்

### கண்ணியமாக நடக்குமாறு சபாநாயகர் வேண்டுகோள்

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

நாட்டு நலனையும், அனைவரது நலனையும் மனதில் கொண்டு சபைக்குள் குறுகிய அரசியல் நாடகங்களை அரங்கேற்றுவதை புறந்தள்ளி வைக்குமாறு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன நேற்று சபையில் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களிடமும் கோரிக்கை விடுத்தார்.

சபையின் கண்ணியத்தை நிலைநாட்டுவது அனைவரதும் முக்கியமான பொறுப்பு என்பதை அனைத்து உறுப்பினர்களும் புரிந்து கொள்ள வேண்டும். இந்த சபையின் மீது மக்கள் நம்பிக்கை இழக்கிறார்கள் என்றால், அது ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை இழக்கிறார்களென்றே அர்த்தப்படும்.

இதனால் நாட்டு நலனையும், அனைவரது நலனையும் மனதில் கொண்டு சபைக்குள் குறுகிய அரசியல் நாடகங்களை அரங்கேற்றுவதை ஒருபுறம் வைக்குமாறு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன நேற்று சபையில் கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று விசேட உரை நிகழ்த்தியஅவர் மேலும் குறிப்பிட்டதாவது.



கடந்த வருடம் மிகவும் சவால் மிக்கதாகவும், அழுத்தம் நிறைந்ததாகவும் காணப்பட்தென்பது நாம் அனைவரும் அறிந்த விடயம். உலகம் முழுவதும் சூழ்ந்துள்ள கொவிட்19 இடையூறிலிருந்து இன்னும் இந்தச் சபை விடுபடவில்லை, இருந்தபோதும் நாட்டுக்கு முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களுக்காக அமர்வுகளை நடத்துவதற்கும், எமது பொறுப்புக்களுக்கமைய 2022ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை நிறைவேற்ற முடிந்தது. இந்தக் காலகட்டத்தில் பாராளுமன்றத்தை சுமுகமான முறையில் முன்னெடுத்துச் செல்வதற்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் எனது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். 2022ஆம் ஆண்டு புதியதொரு ஆரம்பத்தைக் குறிப்பதுடன், இது தொடர்பில் சபையும் கவனம் செலுத்தி சில விடயங்களில் மாற்றங்களை ஏற்படுத்துவது சிறந்தது என நான் கருதுகிறேன்.

சபையின் தடை எல்லையைத் தாண்டியதும் நீங்கள் அனைவரும் பாராளுமன்றத்தின் கௌரவ உறுப்பினர்களாகக் கருதப்படுகின்றீர்கள். கௌரவ உறுப்பினர் என்ற தலைப்புக்கு மதிப்பளிக்கும் வகையில் நீங்கள் பேசுவதிலும், நடந்துகொள்வதிலேயே இது தங்கியுள்ளதுடன், சபையிலும் இதுவே பிரதிபலிக்கிறது. நான் பாராளுமன்றத்துக்கு நுழையும்போது இப்படித்தான் கற்றுக் கொண்டேன். நூலகத்தில் பல புத்தகங்களை வாசித்தும், மறைந்த காமினி திசாநாயக்க, ரணசிங்க பிரேமதாச, லலித் அத்துலத்முதலி போன்ற பேச்சாளர்களின் ஊரைகளைப் பார்த்தும் கேட்டும் ஒரு வாரகால தயார்ப்படுத்தலின் பின்னரே நான் முதன் முதலில் பாராளுமன்றத்தில் உரையாற்றினேன்.

# பாடுவோர் பாடலாம்' : புதிய பாடகர்களுக்கான இசை மேடை

**(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

கலைஸ்ரீ கலை மன்றத்தின் ஏற்பாட்டில் கவியும் கலையும் இணைந்து வழங்கும் 'பாடுவோர் பாடலாம்' புதிய பாடக, பாடகிகளுக்கான இசை நிகழ்ச்சி எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 05:30 மணிக்கு கொழும்பு விகாரமகாதேவி பூங்கா அருகில் உள்ள குளிரூட்டப்பட்ட புதிய நகர மண்டபத்தில் இடம்பெறும்.





முன்னிலை அருட்கலாநிதி சந்ரு பெர்னாண்டோ:
தலைமை இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர்

இந்நிகழ்வில், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் மத விவகாரங்களுக்கான இணைப்புச் செயலாளரும் சர்வதேச இசைக் கல்விக்கான பயிற்சி நிலையத்தின் இலங்கைத் தூதுவருமான அதிவண.பிதா அருட்கலாநிதி எஸ். சந்ரு பெர்னாண்டோ முன்னிலை கௌரவ அதிதியாகக் கலந்து கொள்கிறார்.

இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில், தயான் லங்காவின் தலைவர் கேசவன் பத்மநாதன் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வதோடு, தினகரன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் தே.செந்தில்வேலவர், வீரகேசரி பிரதம ஆசிரியர் எஸ். ஸ்ரீகஜன், தமிழன் பிரதம ஆசிரியர் சிவராஜா, ஸ்டார் தமிழ் வானொலி தொலைக்காட்சி ஊடகவியலாளரும் ஒலிபரப்பாளருமான எஸ். நவநீதன் ஆகியோர் ஊடக அதிதிகளாகவும் கலந்து சிறப்பிக்கின்றனர். இலங்கையின் பிரபல திரையிசை, மெல்லிசைப்பாடகி எஸ்.கலாவதி கௌரவ அதிதியாகக் கலந்து கொள்ளும் இந்நிகழ்வில், இசையமைப்பாளர் கருப்பையாப்பிள்ளை பிரபாகரன், இசையமைப்பாளர் பசால் ஜின்னா, பிரபல தபேலா கலைஞர் ஹரிதாஸ் கண்ணா, பிரபல பாடகர் நவகம்புர கணேஷ், பிரபல பாடகி மொறின் ஜெனற், இசையமைப்பாளர் தவராஜா எஸ்.ரி. தேவா ஆகியோர் 'பாடுவோர் பாடலாம்' போட்டியின் நடுவர்களாகவும் கலந்து கொள்கின்றனர். நிகழ்வை பிரபல சிரேஷ்ட அறிவிப்பாளர் கலைநிலா உவைஸ் செரீப் மற்றும் அமுதா ஆகியோர் தொகுத்து வழங்குகின்றனர்.

### ஜனாதிபதி கொள்கை விளக்க உரை விவாதம்

# சாத்தியமானதை ஏற்றுக்கொண்டு சாதித்துக் காட்டும் வல்லமையோடு பயணிக்க முன்வர வேண்டும்

தமிழ் மக்களுக்கான சுபிட்சமான எதிர் காலத்தை உருவாக்குவதற்கு வடக்கு, கிழக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்வர வேண்டும் என்று அழைப்பு விடுத்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரையின் அர்த்தத்தைப் புரிந்து கொள்ள வேண்டுமெனவும் தெரிவித்துள்ளார்.



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கொள்கை விளக்க உரை தொடர்பாக நேற்று பாராளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே கடற்றொழில் அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு
அமைச்சர் டக்ளஸ் பகிரங்க அழைப்பு

இதன்போது தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,

'ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் இந்த ஆண்டிற்கான ஆரம்ப உரை நாட்டு மக்களுக்கு ஒளி வீசும் நம்பிக்கைகளை விதைத்திருக்கிறது.

வளர்ந்து வரும் நாடாகிய இலங்கைத்தீவு கொவிட் 19 காரணமாக எதிர்கொள்ளும் சவால்களை யதார்த்தமாக தனது உரையில் தெளிவு படுத்தியுள்ளார்.

சக கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களின் சுயங்களை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டதும், தனக்கு வாக்களிக்காத மக்களுக்கும் சேவைகள் தொடரும் என்ற அவரது பெருந்தன்மை மிக்க கூற்றுகளும் அவரது அரசியல் நிலைப்பாட்டை பறைசாற்றி நிற்கிறது.

ஜனாதிபதி தனது உரையில், இனவாதத்தை நிராகரிக்கின்றோம் என்றும் நாட்டில் வாழும் சகல பிரஜைகளும் கௌரவத்துடன் வாழ்வதற்கும், அவர்களது அனைத்து உரிமைகளை பாதுகாப்பதற்கும் நடவடிக்கை எடுத்து வருகின்றோம் என்றும் திறந்த மனத்துடன் தனது நல்லெண்ணத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

இந்த விடயங்கள் குறித்து சக தமிழ் கட்சி தலைமைகள் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். அதன் அர்த்தத்தை புரிந்து கொண்டு அரசியல் தீர்வு குறித்து நம்பிக்கையோடு செயலாற்ற முன்வர வேண்டும்.

அது மட்டுமன்றி கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது கௌரவ கோட்டாபய ராஜபக்ஷ அவர்களிடம் நாம் உரிமையோடும் தேசிய நல்லிணக்க ஒழுங்கு முறையிலும் முன்வைத்த விடயங்கள் குறித்தும் தனது உரையில் தெரிவித்துள்ளமை எமக்கு நம்பிக்கையை தருகின்றது. காணாமல் போனோருக்கு நீதியும் பரிகாரமும் வழங்குவோம் என தெரிவித்துள்ளார். சிறையில் வாடும் கைதிகளை விடுவித்து வருவது குறித்து பேசியுள்ளார். அது மட்டுமன்றி யுத்த காலத்தில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்தபோது, படையினரின் பயன்பாட்டில் இருந்த 90 வீதமான நிலங்களை விடுவிப்பதற்கு தான் முயற்சி எடுத்தமை குறித்து பேசியுள்ளார்.

இதில் எனது பங்கோடு பல்லாயிரம் ஏக்கர் தமிழர் நிலங்களை அவர் விடுவித்து தந்திருக்கிறார் என்பதை நான் கூறி வைக்க விரும்புகிறேன். இன்னமும் விடுவிக்கப்படாத நிலங்களை விடுவிப்பதாகவும் அவர் தனது உரையில் உறுதியளித்துள்ளார். அனைத்து மக்களின் எதிர்பார்ப்புக்களையும் நிறைவேற்றும் வகையில் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத தடைச்சட்டத்தில் திருத்தங்களை உருவாக்கி வருவதாகவும் தெரிவித்துள்ளார். அதுமட்டுமன்றி சர்வதேச சமூகத்தினரால் முன்வைக்கப்பட்ட அவதானிப்புகள் குறித்தும்; நியாமான முடிவுகளை எடுப்போம் எனவும் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

தமிழ் பேசும் மக்களின் எதிர்பார்ப்புகளை தனது உரையில் யதார்த்தபூர்வமாக தெரிவித்திருக்கும் ஜனாதிபதி, வடக்கு கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசியல் வேறுபாடுகளை தற்காலிகமாக தவிர்த்து விட்டு, தான் எடுக்கும் வடக்கு கிழக்கு மக்களுக்கான நடவடிக்கைகளுக்கு ஆதரவு வழங்குமாறும் கேட்டுள்ளார். உரையை முழுமையாக படித்து முடித்தார்களோ, அல்லது செவி மடுத்தார்களோ தெரியாது. அதில் ஒன்றும் இல்லை என்றும், குப்பை என்றும் வழமை போல் கூச்சலிடத்தொடங்கி விட்டார்கள்.

13 வது திருத்த சட்டத்தை தும்புத்தடியால் கூட தொட்டும் பார்க்க மாட்டோம் என்று நிராகரித்து விட்டு,.. இன்று சுடலை ஞானத்தில் அதையே தூசி தட்டி இந்திய பிரதமருக்கு அனுப்பி வைத்தவர்கள் இன்னும் பல ஆண்டுகள் கழித்து ஜனாதிபதியின் இன்றைய கொள்கை பிரகடனங்களையும் தூசு தட்டி பார்க்கக்கூடும். அரசியல் வேறுபாடுகளை ஒரு புறம் வைத்து விட்டு வாருங்கள் முன்னோக்கி செல்வோம் என்றுதான் ஜனாதிபதி அவர்கள் அழைப்பு விடுத்துள்ளார்.

## மலைச்சாரல்

### மாத்தளை மாவட்ட

# பெரிய வெங்காய உற்பத்தியை 4,000 ஹெக்டயராக அதிகரிக்க நடவடிக்கை

**தம்புள்ள தினகரன் நிருபர்**

மாத்தளை மாவட்டத்தில் பெரிய வெங்காய உற்பத்தியை 4,000 ஹெக்டயர்களால் அதிகரிப்பதற்குத் தேவையான நடவடிக்கைளை மேற்கொள்ள விருப்பதாக மாத்தளை மாவட்ட செயலாளர் திருமதி தேஜானி திலக்கரத்ன தெரிவித்தார்.

மாத்தளை மாவட்ட செயலக கேட்போர்கூடத்தில் அண்மையில் இடம்பெற்ற விவசாயக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தற்போது பெரிய வெங்காய செய்கை பண்ணும் விவசாயிகள் அதிலிருந்து விலகி இருப்பதற்கான காரணங்களை ஆராய்ந்து அதற்கான தீர்வினைப் பெற்றுக் கொடுத்து விவசாயிகளை மீண்டும் பெரிய வெங்காய உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபடச் செய்வதற்கான நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ள விருப்பதாகவும் அவர் இதன்போது சுட்டிக் காட்டினார்.

விவசாயிகளுக்குத் தேவையான விதைகள் பசளை மற்றும் உற்பத்திக்கான நியாயமான விலை என்பவற்றை பெற்றுக் கொடுப்பதற்கும் பெரிய வெங்காய உற்பத்தியை இலக்காகக் கொள்ளும் விதத்தில் விவசாயத் துறை சார்ந்த அனைத்து அதிகாரிகளினதும் ஒத்துழைப்பை தாம் நாடுவதாகவும் அவர் தெரிவித்தார்.

பெரிய வெங்காய இறக்குமதியின் பொருட்டு வருடாந்தம் பாரிய அந்நிய செலாவணியை இழக்க நேரிடுவதால் பெரிய வெங்காய உற்பத்தியை அதிகரிக்கச் செய்வதன் மூலம் பெருமளவிலான அந்நிய செலாவணியை மிச்சப்படுத்தலாம் எனவும் அதன் பொருட்டு மாவட்டத்திலுள்ள அனைத்து அரச அதிகாரிகளும் அர்ப்பணிப்புடன் செயற்படல் வேண்டும் எனவும் அவர் இதன்போது வேண்டுகோள் விடுத்தார்.



தைப்பொங்கலை முன்னிட்டு கண்டி இந்து சிரேஷ்ட பாடசாலை மாணவர்கள் மத்தியில் நடைபெற்ற பொங்கல் 'பானை அலங்காரப்போட்டியும் வாழ்த்துமடல் தயாரிக்கும் போட்டியும் நேற்று நடைபெற்றது. பொங்கல் பானை வாழ்த்துமடல்கள் கண்காட்சியை பிரதமஅதிதியாக கலந்து கொண்ட கண்டி கல்வி வலய கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ். தமிழ்செல்வன் ஆரம்பித்து வைப்பதையும் பாடசாலைஅதிபர் பி.சிவக்குமார் அருகில் இருப்பதையும் காணலாம். படம்:நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்

### ஆயிரம் தேசிய பாடசாலைகள் திட்டத்தின் கீழ்

# மத்திய மாகாணத்திற்கு 125 தேசிய பாடசாலைகள்

**தம்புள்ள தினகரன் நிருபர்.**

ஆயிரம் தேசிய பாடசாலகள் உருவாக்கும் வேலைத் திட்டத்தின் கீழ் மத்திய மாகாணத்தில் 125 பாடசாலைகளை தேசிய பாடசாலைகளாக தரமுயர்த்தப் படவிருப்பதாக மத்திய மாகாண ஆளுநர் சட்டத்தரணி லலித் யூ கமகே தெரிவித்தார்.

'சௌபாக்கியத்தின் நோக்கு' கொள்கைக்கு அமைவாக நாட்டில் ஆயிரம் பாடசாலைகளைத் தேசிய பாடசாலைகளாக தரமுயர்த்தும் வேலைத் திட்டத்தின் கீழ் இச் செயற்பாடுகள் முன்னெடுக்கப் படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பரந்த நோக்கு மற்றும் அவரது தலைமைத்துவத்தின் கீழ் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, மற்றும் நிதியமைச்சர் பஷில் ராஜபக்ஷ ஆகியோரின் வழிகாட்டலின் கீழ் சவால்களை நாடு எதிர் நோக்கியுள் நிலையிலும் நாட்டை அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்வதற்கு அனைவரும் ஒத்துழைப்பு நல்க வேண்டுமெனவும் ஆளுநர் இதன் போது பொது மக்களிடம் வேண்டுகோள் விடுத்தார்.

இலவசக் கல்வி மற்றும் இலவச சௌபாக்கியத்தை முழுமையாக அனுபவிப்பவர்கள் என்ற வகையில் நாம் நாட்டிற்குச் செய்ய வேண்டிய பிரதியுபகாரம் எதுவென அனைவரும் சிந்திக்க வேண்டிய காலம் கனிந்துள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

நாட்டுப் பற்றுடன் ஒழுக்க நெறி மிக்க சந்ததியொன்றை உருவாக்குவதுடன் இன்றைய இளைய சந்ததிகளின் நடத்தைகளை நெறிப்படுத்துவதன் மூலமே அவை சாத்தியமாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பாடசாலை மாணவர்களுக்கு கொரோனா தொற்று உறுதி

**(அக்குறணை குறூப் நிருபர்)**

கினிகத்தேனை தேசிய பாடசாலையில் 11 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனால் இரண்டு வகுப்புக்கள் நேற்று முதல் (18) தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன.

தரம் 10 மற்றும் 11 வகுப்புக்களைச் சேர்ந்த 08 மாணவர்களுக்கும் 2 ஆசிரியர்களுக்கும் கொரோனா தொற்று உறுதியானதையடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் 'ஸூம்' தொழில் நுட்பத்தில் பாடங்களை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அதிபர் தெரிவித்துள்ளார்.

இப்பாடசாலையில் கொரோனா தொற்று உறுதியான மாணவர்களுடன் தொடர்புடைய 500க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கும் 63 ஆசிரியர்களுக்கும் சுயதனிமைப்படுத்தல் ஆலோசனைகள் வழங்கப் பட்டுள்ளன.

# சிறையில் இருந்து தப்பியவர் வேறு சிறைக்கு மாற்றிய பின் மரணம்

**(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)**

எம்பிலிப்பிட்டிய திறந்த சிறைச் சாலையில் இருந்து தப்பிச் சென்ற சிறைக்கைதி ஒருவர் மீண்டும் கைது செய்யப்பட்டு அங்குணுகொலபெலஸ்ஸ சிறைச்சாலையில் அனுமதிக் கப்பட்ட பின் மீண்டும் மரணித்த சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு மரணித்தவர் சமிந்தஹெட்டிகே எனும் 47 வயதான மாத்தரை கந்தவத்த பிரதேசத்தைச் சேர்ந்தவராவார்.சம்பவதினம் மேற்படி சிறைச்சாலையில் இருந்து தப்பி சென்ற இவர் மீண்டும் கண்டுபிடிக்கப்பட்டு அங்குணுகொலபெலஸ்ஸ சிறைச் சாலையில் ஒப்படைக்கப்பட்ட பின் மரணித்துள்ளார். தான் தப்பி சென்ற பின் பிரதேசவாசிகள் சிலர் தான் தாக்கப்பட்டதாக கைதி கூறியதாக சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இறந்தவரின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

# ஹம்பேகமுவயில் கஞ்சாவுடன் 4 சந்தேக நபர்கள் கைது

**(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)**

துப்பாக்கி மற்றும் கஞ்சாவுடன் நான்கு சந்தேக நபர்கள் உடவளவ அதிரடிப் படை முகாம் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர். அதிரடிப்படை முகாம் அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். பலாங்கொடை ஹம்பேகமுவ வீதியில் பொகுணுதென்ன காட்டுப் பகுதியில் நடத்தப்பட்ட தேடுதல் நடவடிக்கையையடுத்து இவர்களிடம் 732 கிலோ கிராம் உலர்த்தப்பட்ட கஞ்சா மீட்கப்பட்டதுடன் காட்டுப் பிரதேசத்தில் பயிரிடப்பட்டிருந்த 12940 கஞ்சா செடிகளும் அழிக் கப்பட்டுள்ளன. சந்தேக நபர்கள் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படவுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

# சிறுத்தையின் சடலம் மீட்பு

**பதுளை தினகரன் விசேட நிருபர்**

ஹப்புத்தளை – பண்டாரவளை பிரதான பாதையில் சிறுத்தையொன்று நேற்று இறந்து கிடந்துள்ளது. இதுகுறித்து, அப்பகுதி மக்கள் வனஜீவராசிகள் திணைக்களத்திற்கு அறிவித்துள்ளனர்.

இறந்துள்ள சிறுத்தையை வனஜீவராசிகள் திணைக்களத்திற்கு எடுத்துச் சென்று, பரிசோதனை நடாத்த,



திணைக்கள உத்தியோகத்தர்கள் நடவடிக்கைகளை எடுத்துள்ளனர்.

# நகர்வலம்









கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரியின் 41ஆவது ஸ்தாபக தினம் நேற்று (19) புதன்கிழமை கல்லூரியில் அதிபர் திருமதி லலிதா ரவீந்ரராஜா தலைமையில் நடைப்பெற்றது. இந்நிகழ்விற்கு பிரதமரின் இந்து மத விவகார இணைப்பாளர் கலாநிதி இராமசந்திர குருக்கள் பாபுசர்மா பிரதம அதிதியாகவும் சிறப்பு விருந்தினராக டாக்டர் நிஷாந்தி பற்குணநாதன் மற்றும் விசேட விருந்தினராக டாக்டர் சரண்யா லிங்கேஷ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர். இவர்களை அதிபர் மற்றும் ஆசிரியர்கள் அழைத்து வருவதையும் 41ஆவது ஆண்டு பூர்த்தியை குறிக்கும் கேக் அதிபர், ஆசிரியர்களால் வெட்டப்படுவதையும், பழைய மாணவர் சங்கத்தினரால் வெளியிடப்பட்ட விசேட ஸ்தாபக தின மலரின் முதற்பிரதியை அதிபர் லலிதா ரவீந்திரராஜா பிரதம அதிதிக்கு வழங்குவதையும் படங்களில் காணலாம்.

## அரச பணியாளர்களுக்கு இடமாற்றங்கள் வழங்காமையினால் மோசடிகள் அதிகரிப்பு

### மத்திய மாகாண ஆளுநர் தெரிவிப்பு

**தம்புள்ள தினகரன் நிருபர்**

அரச ஊழியர்களுக்கு காலத்திற்குக் காலம் இடமாற்றங்கள் பெற்றுக் கொடுக்கப்பட வேண்டுமென அரச தாபன விதிக்கோவையில் மிகவும் தெளிவாகக் குறப்பிடப்பட்டுள்ள நிலையில் மத்திய மாகாண அரச சேவையாளர்களுக்கு இதுவரையில் இடமாற்றங்களைப் பெற்றுக் கொடுப்பதில் மாகாண அரச சேவை ஆணையகம் தயக்கம் காட்டி வருவதாக மத்திய மாகாண ஆளுநர் சட்டத்தரணி லலித் யூ கமகே தெரிவித்தார்.

ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின் போது அவர் இக் கருத்துக்களை வெளியிட்டார். அவர் தொடர்ந்து கூறுகையில் மேலும் தெரிவித்ததாவது;

அரச தாபனக் கோவையில் விதந்துரைக்கப்பட்டுள்ளவாறு காலத்திற்குக் காலம் அரச பணியாளர்களின் இடமாற்றங்கள் இடம் பெற வேண்டுமென தாம் மாகாண அரச சேவை ஆணையகத்திடம் தெரிவித்திருந்தபோதிலும் ஏதேனும் சில அழுத்தங்கள் மற்றும் தலையீடுகள் காரணமாக உரிய முறையில் அவை இடம் பெறவில்லை எனத் தெரிகின்றது.



ஐந்து (05) வருடங்களுக்கு அதிக காலமாக ஒரு நிறுவனத்தில் கடமையாற்றும் அரச ஊழியர் ஒருவர் இடமாற்றம் செய்யப்பட வேண்டும் என அரச தாபன விதிக் கோவையில் மிகவும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் அரசியல் காரணங்கள் அல்லது நெருங்கிய நட்புரிமை போன்ற சில காரணங்களால் அவ் விடமாற்றங்கள் முறையாக இடம் பெறுவதில்லை.

மாகாண சபை அரச அதிகாரிகள் மற்றும் ஊழியர்களுக்கு இடமாற்றம் பெற்றுக் கொடுப்பதற்கான முழுமையான அதிகாரத்தை நான் பதவிக்கு வந்தவுடன் அரச சேவை ஆணையகத்திற்குப் பெற்றுக் கொடுத்திருந்தேன். 05 வருடங்களுக்கு மேல் ஒருவர் ஒரே நிலையத்தில் பணி புரிந்து கொண்டிருந்தால் அத்தகையோருக்கு இடமாற்றம் பெற்றுக் கொடுக்கப்பட வேண்டுமென அரச தாபன விதிக் கோவையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மக்களின் மேம்பாட்டிற்காக மாத்திரமன்றி அரச பணியாளர்களின் மேம்பாட்டிற்காகவுமே அவ்வாறு தெரிவிக்கப் பட்டுள்ளது.

அரச அதிகாரிகளுக்கும் அரச பணியாளர்களுக்கும் இவ்வாறான இடமாற்றங்கள் பெற்றுக் கொடுக்கப்படும் போது அவர்கள் வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு பிரதேசங்களில் தத்தமது அறிவையும் ஆற்றலையும் மற்றும் அனுபவங்களையும் விருத்தி செய்து கொள்வதற்கு வாய்ப்புக்களை உண்டுபண்ணும்.

எனினும் இவ்விடமாற்றத் திட்டங்கள் முறையாக அமுல் படுத்தாமை குறித்து வருந்துகிறேன் எனவும் தெரிவித்த ஆளுநர், மத்திய மாகாணத்தில் பல வருட காலமாகவே இடமாற்றத் திட்டம் முறையாக இதுவரையில் அமுல்படுத்தப் படவில்லை.

05 வருடங்களுக்கு ஒரு தடவை வழங்கப்படும் இவ் இடமாற்றங்களை மறுக்காது, அழுத்தங்களை ஏற்படுத்தாது ஏற்றுக் கொள்ள வேண்டியது அரச சேவையாளர்களின் கடமையும் பெறுப்புமாகும்.

தமக்கான இடமாற்றத்தை ஏற்றுக் கொள்ளாத அரச சேவையாளர்களின் மாதாந்த வேதனத்தை இடை நிறுத்துவதற்கு சட்டத்தில் இடமுள்ளது. சிலருக்கு பல்வேறு பிரச்சினைகள் இருப்பதை அறிவேன்.

இடமாற்றத்தை இரத்துச் செய்து கொள்வதற்கு அரச பணியாளர்கள் பாரிய முயற்சிகளை மேற் கொள்கின்றனர்.

தமக்கு ஏதேனும் ஓர் உடற்கோளாறு சம்பந்தமான காரணங்களை முன் வைக்கின்றனர். இடமாற்றத்தை அமுல்படுத்துகையில் பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது என்றார்.

## மெதிரிகிரிய பிரதேசத்தில்... தென்னங்கன்றுகள் நடுவதற்கு விசேட வேலைத்திட்டம்

**திறப்பனை தினகரன் நிருபர்**

மகாவலி "டி " வலயத்திற்கு உட்பட்ட பொலன்னறுவை மாவட்ட மெதிரிகிரிய பிரதேசத்தில் வசிக்கும் சுமார் 12 ஆயிரத்து 500 விவசாயக் குடும்பங்களை இலக்காகக் கொண்டு தென்னங் கன்றுகளை நடுவதற்கான வேலை திட்டமொன்று தற்சமயம் மேற் கொள்ளப்பட்டு வருகின்றது. மகாவலி அதிகார சபை, தென்னை உற்பத்தி நிலையம் ஆகியன இணைந்து இவ் வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளது.

இதன் முதற் கட்ட வேலையாக 25 ஆயிரம் தென்னங் கன்றுகள் இங்குள்ள பொது மக்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன. மகாவலி அதிகார சபை இதற்காக 40 இலட்சம் ரூபா பணத்தை ஒதுக்கீடு செய்துள்ளது.

இது தவிர மெதிரிகிரிய பிரதேச மீகஸ்வெவ, விசூபுர, சூரியபுர ஆகிய விவசாய கிராமங்களில் வசிக்கும் விவசாய குடும்பங்களுக்கும் இதன் கீழ் தென்னங்கன்றுகள் ஏற்கனவே வழங்கிவைக்கப்பட்டுள்ளன. இராஜாங்க அமைச்சர் சிறிபால கம்லத் தலைமையில் இவ் வேலைத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நாட்டின் தென்னை உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் இவ் வேலைத் திட்டம் தற்சமயம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை விசேட அம்சமாகும்.

## மலைப்பாம்பு தீண்டியதில் அதிகாரி பலத்த காயம்

**புத்தளம் தினகரன் நிருபர்**



புத்தளம் பகுதியில் பிடிக்கப்பட்ட மலைப்பாம்பை தப்போவ சரணாலயத்தில் விடுவிப்பதற்காக முற்பட்ட வனஜீவராசிகள் திணைக்கள வலய பொறுப்பதிகாரியை மலைப்பாம்பு தீண்டியதால் அதிகாரி காயத்துக் குள்ளாகியுள்ளார்.

புத்தளம் பகுதியில் ஞாயிறு (16) இரவு தோட்டமொன்றுக்குள் உட்புகுந்த மலைப்பாம்பை அவதானித்த அப்பகுதி மக்கள் அதனை உயிருடன் பிடித்து வனஜீவராசிகள் கட்டுப்பாட்டுப் பிரிவு அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளனர்.

இவ்வாறு ஒப்படைக்கப்பட்ட மலைப்பாம்பை சரணாலயத்தில் விடுவிப்பதற்காக கடும் பிரயத்தனத்திற்கு மத்தியில் பிடிப்பதற்கு முற்பட்டவேளை புத்தளம் வனஜீவராசிகள் திணைக்கள வலய பொறுப்பதிகாரியை மலைப்பாம்பு தீண்டியுள்ளது.

இதனால் கையில் காயம் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்த வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள்,

குறித்த மலைப்பாம்பை தப்போவ சரணாலயத்தில் விடுவித்ததாகவும் தெரிவித்தனர். குறித்த மலைப்பாம்பு சுமார் 9 அடி நீளமுடையதாக காணப்படுவதாகவும் வனஜீவராசிகள் அதிகாரிகள் தெரிவித்தனர்.

பாம்புகளைப் பாதுகாப்பாக பிடிப்பதற்கான உரிய உபகரணங்கள் தம்மிடம் இல்லாமையினாலேயே மலைப்பாம்பு தீண்டுதலுக்கு உள்ளாகியதாகவும் புத்தளம் வனஜீவராசிகள் கட்டுப்பாட்டுப் பிரிவினர் தெரிவித்தனர்.

## கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய மூவர் கைது

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

அநுராதபுரம் பகுதியில் இடம் பெற்றதாக கூறப்படும் பல கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடய சந்தேக நபர்கள் மூவரை அநுராதபுரம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சில தினங்களுக்கு முன்னர் அநுராதபுரம் பகுதியிலுள்ள விடுதியொன்றுக்குள் உட்புகுந்து பணம் மற்றும் தங்க நகைகளை கொள்ளையடித்த சம்பவம் தொடர்பில் பொலிஸ் நிலையத்திற்கு கிடைத்த முறைப்பாட்டினை தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வந்த குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸார், நேற்று முன்தினம் (18) மாலை சந்தே நபர்கள் மூவரை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 35,42,24 வயதுடைய அநுராதபுரம் ஜயசிரிபுர, விஜயபுர மற்றும் அநுராதபுரம் களஞ்சிய பகுதிகளை வசிப்பிடமாக கொண்டவர்கள் என்பது ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

சந்தேக நபர்களிடம் பொலிஸார் மேற்கொண்ட மேலதிக விசாரணைகளின் போது அநுராதபுரம் பகுதியில் இடம்பெற்ற கொள்ளைகள் மற்றும் வீதியில் செல்லும் பெண்களுடைய தங்க சங்கிலிகளை அறுத்த சம்பவங்கள் என்பவற்றுடன் கைது செய்யப்பட்ட மூவரும் தொடர்புபட்டுள்ளார்கள் என்பது மேலதிக விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

## கடதாசி உற்பத்தி தொழிலாளர்களை ஊக்குவிக்க அரசு 07 மில். ஒதுக்கீடு

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

அநுராதபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ள தோட்டங்களில் அச்சுறுத்தலுக்கு உள்ளான மானா புதர்களை வெட்டி அதன் மூலம் கடதாசி உற்பத்தி தொழிலாளர்களை ஊக்குவிப்பதற்கு 7 மில்லியன் ரூபா வழங்கப்படவுள்ளதாக அநுராதபுரம் மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர் சுகத் நயனாநந்த தெரிவித்தார்.

குறித்த திட்டத்திற்கு சமுர்த்தி மனை பொருளாதார மேலாண்மை நிதி, சுயதொழில் மற்றும் வணிக அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு மூலம் நிதி வழங்கப்பட்டுள்ளது.

இராஜாங்கனை பிரதேச செயலக அலுவலகத்தில் நிறுவப்பட்டுள்ள சௌபாக்யா உற்பத்தி சங்கத்தின் ஊடாக தொழிலாளர்களுக்கு நிதி வழங்கப்படவுள்ளன. கடதாசியின் சாத்தியமான தன்மையினை மேம்படுத்த தேவையான தொழில்நுட்ப இயந்திரம் எதிர்காலத்தில் வழங்குவதற்கு எதிர் பார்க்கப்பட்டுள்ளது.

மேலும் ரஜரட்ட பகுதியில் உள்ள குளங்களை ஆக்கிரமித்துள்ள நீர்வாழ் தாவரங்களான ஜபன்ஜபர, சல்பீனியா, தூங்கும் கிளை என்பன இதற்காக உபயோகிக்கப்படவுள்ளன.அந்த புதிய உற்பத்திக்கு தேவையான நிதி மற்றும் ஏனைய அடிப்படை வசதிகளையும் சமுர்த்தி அமைச்சு வழங்கவுள்ளது.

வட மத்திய மாகாணத்தின் அடிப்படை வசதிகள் தொடர்பில் கண்டறிவதற்கு வருகை தந்த சீன தூதுக் குழுவினர் குறித்த தயாரிப்பு திட்டத்தை பாராட்டியுள்ளனர்.

### இலங்கைக்கான விமான சேவையில்

## ஐந்து விமானங்களை இணைத்துள்ள எமிரேட்ஸ் வாராந்தம் 26 விமான சேவைகள் ஆரம்பிப்பு



இலங்கைக்கான விமான சேவைக்கு மேலும் ஐந்து விமானங்களை இணைத்துக் கொள்ளவுள்ளதாக எமிரேட்ஸ் நிறுவனம் அறிவித்துள்ளது. இதன் மூலம் கொழும்புக்கு வாராந்தம் 26 விமான சேவைகளை அது நடத்தவுள்ளது. இதில் மாலைதீவில் இருந்து கொழும்புக்கு தினசரி சேவையும் உள்ளடங்கும். 2022 பெப்ரவரி 10 முதல் இந்த மேலதிக சேவைகள் தொடங்கவுள்ளன. இலங்கையின் வர்த்தகத் தலைநகருக்கு பயணிகள் மேலும் நெகிழ்வுத்தன்மை கொண்ட பயணத் தெரிவுகளை மேற்கொள்ள இது வழியமைக்கும் என அந்த நிறுவனம் அறிவித்துள்ளது.

மேலதிக சேவைகள் செவ்வாய், வியாழன், வெள்ளி, சனி மற்றும் ஞாயிறு தினங்களில் இடம்பெறும். எமிரேட்ஸின் நுமு654 விமானம் துபாயில் இருந்து 10:35 மணிக்குப் புறப்பட்டு கொழும்பை உள்ளூர் நேரப்படி 16:25க்கு வந்தடையும். மீண்டும் கொழும்பில் இருந்து விமானம் 22:05க்குப் புறப்பட்டு துபாய் நேரப்படி அடுத்தநாள் அதிகாலை 1:55க்கு துபாயை சென்றடையும்.

“இலங்கை எமக்கு மிகவும் முக்கியமானதோர் சந்தை. நாட்டின் வர்த்தகம் மற்றும் சுற்றுலாத்துறையை மீளக் கட்டி எழுப்புவதில் ஒரு முக்கிய பங்கினை வகிப்பதில் நாம் பெருமை அடைகின்றோம். 2021இல் சுமார் இரண்டு லட்சம் பயணிகளை இலங்கை கவர்ந்துள்ளது. டிசம்பரிலும் ஜனவரியிலும் பயணிகளின் வருகை உற்சாகம் அளிப்பதாகவும் உள்ளது” என்று இலங்கைக்கும் மாலைதீவுக்குமான எமிரேட்ஸின் பிராந்திய முகாமையாளர் சந்தன டி சில்வா கூறினார். “கொழும்புக்கான விமானங்களில் ஆசன வசதிகளை அதிகரிக்க முடிந்தது குறித்து எமிரேட்ஸ் மகிழ்ச்சி அடைகிறது. மேலதிக விமானங்களின் மூலம் சரக்குகள் மற்றும் மருந்துப் பொருள்கள் போன்ற அத்தியாவசிய இறக்குமதிகளுக்கான வசதிகள் கூட்டப்படும்” என்று அவர் மேலும் கூறினார். (பா)

## கொழும்பில் நடைபெற்ற 100வது ஸலவாத் மஜ்லிஸ்





சீனன்கோட்டை பாஸிய்யதுஷ் ஷாதுலிய்யா மற்றும் கொழும்பு அத்தியாயத்துஷ் ஷாதுலிய்யா இக்வான்கள் இணைந்து நடாத்தும் ஸலவாத் மஜ்லிஸின் 100ஆவது மஜ்லிஸ் திங்கட் கிழமை (17) கொழும்பு, அத்தியாயத்துஷ் ஷாதுலிய்யா தலைமையகத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

பேருவளை, சீனன் கோட்டையை மையமாகக் கொண்டு இயங்கி வரும் பாஸிய்யதுஷ் ஷாதுலிய்யா அமைப்பு, ஷாதுலிய்யாத் தரீக்காவின் அடிப்படையான அமல்களை முன்னெடுத்து தூய நோக்கோடு திக்ர், அவ்ராத் மஜ்லிஸை சீனன்கோட்டை பகுதிகளில் முன்னெடுத்து வருகின்றது.

மேற்படி நிகழ்வில் பேருவளை பிரதேசத்தைச் சேர்ந்த பெருந்திரளான ஷாதுலிய்யா இக்வான்கள் கலந்து கொண்டதோடு ஷாதுலிய்யா தரீக்காவின் ஆரம்ப காலம் முதல் இன்றுவரையுள்ள ஸில்ஸிலா பெயர்ப் பட்டியலின் முதல் பிரதியை இந்நிகழ்வில் அத்தியாயத்துஷ் ஷாதுலிய்யா தலைவர் எஸ். ஜே.எம். ஆப்தீன் பாஸியத்துஷ் ஷாதுலிய்யாவைச் சேர்ந்த இபாதுல்லா ஷாபியிடம் கையளித்து வைத்தமை விசேட அம்சமாகும்.

# சர்வதேச செய்திகள்

## ஆஸியில் கொரோனா அவசர நிலை உச்சம்



அவுஸ்திரேலியாவில் அடுத்த சில வாரங்களில் இன்னும் கூடுதலானோர் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழக்கக் கூடும் என்று அஞ்சப்படுகிறது.

அங்கு ஒமிக்ரோன் நோய்ப்பரவல் மோசமாகியுள்ளது. மருத்துவமனைகள் மீதான சுமை அதிகரித்துள்ளதால் விக்டோரியா மாநிலத்தில் அவசரநிலை கோட் பிரவுன் என்ற அளவுக்கு உயர்த்தப்பட்டுள்ளது.

வழக்கமாக, இயற்கைப் பேரிடர், பெரிய அளவில் மக்கள் உயிரிழக்கும் சம்பவங்கள் ஆகியவற்றின் போதே அவசரநிலை இந்த அளவுக்கு உயர்த்தப்படும்.

அண்டை மாநிலமான நியூ சௌத் வேல்ஸில், சுகாதாரத்துறை ஊழியர் பற்றாக்குறையை எதிர்த்து தாதியர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வைரஸ் தொற்றால் மருத்துவமனையில் சிகிச்சை பெறுவோர் எண்ணிக்கை உயர்ந்திருந்தாலும், நோய்ப்பரவலோடு வாழும் முடிவை அவுஸ்திரேலியா நியாயப்படுத்த முயல்கிறது. மிதமான அறிகுறிகளைக் கொண்ட ஒமிக்ரோன் வகையையும் தடுப்பூசி போட்டுக் கொண்டோர் எண்ணிக்கையையும் அது சுட்டிக்காட்டியுள்ளது.

# 'கொரோனா இன்னும் முடியவில்லை' உலகச் சுகாதார அமைப்பு எச்சரிக்கை

கொரோனா பெருந்தொற்று முடிவை நெருங்கி உள்ளதான கூற்றுத் தொடர்பில் உலகத் தலைவர்களை உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதனொம் கெப்ரியேசஸ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

புதிதாக ஆதிக்கம் செலுத்திவரும் ஒமிக்ரோன் திரிபு மிதமானது மற்றும் வைரஸ் மீதான அச்சுறுத்தலை அகற்றும் என முடிவுக்கு வருவதற்கு எதிராக கெப்ரியேசஸ் கருத்து வெளியிட்டுள்ளார்.

சில ஐரோப்பிய நாடுகளில் கொரோனா தொற்று சாதனை அளவுக்கு அதிகரித்திருக்கும் நிலையிலேயே அவர் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

பிரான்ஸில் கடந்த செவ்வாய்க்கிழமை சுமார் அரை மில்லியன் புதிய தொற்று சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

ஜெனிவாவில் உள்ள உலக சுகாதார அமைப்பின் தலைமையகத்தில் செய்தியாளர் மாநாட்டில் பேசிய கெப்ரியேசஸ், கடந்த வாரத்தில் ஒமிக்ரோன் திரிபு உலகெங்கும் 18 மில்லியன் புதிய தொற்று சம்பவங்களுக்கு காரணமாகியுள்ளது என்றார்.

சராசரியாக இந்தத் திரிபு குறைந்த தீவிரத்தை வெளிப்படுத்துவதாக ஆதாரங்கள் வெளியிடப்பட்டபோதும், இது மிதமான நோய்ப் பாதிப்பை கொண்டது என்று கூறுவது தவறாக வழிநடத்துவதாக இருக்கும் என்று அவர் குறிப்பிட்டார்.

"ஒமிக்ரோன் மருத்துவனையில் அனுமதிக்கப்படுவது மற்றும் உயிரிழப்புகளுக்கு காரணமாவதோடு தீவிரமற்ற தொற்றை கொண்டபோதும் சுகாதார வசதிகளை நெடுக்கடிக்கு உள்ளாக்குகிறது என்பது தவறில்லை" என்றும் அவர் குறிப்பிட்டார்.



ஒமிக்ரோன் திரிபின் அசாதாரணமான அதிகரிப்பினால் புதிய திரிபுகள் தோன்ற வாய்ப்பு இருப்பதாலேயே பின்தொடர்தல் மற்றும் மதிப்பீடு மேற்கொள்ளல் தொடர்ந்து தீர்க்கமானதாக உள்ளது என்று உலகத் தலைவர்களை அவர் எச்சரித்தார்.

மேலும், "தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ள விகிதம் குறைவாக உள்ள பல நாடுகளைப் பற்றி நான் குறிப்பாகக் கவலைப்படுகிறேன். ஏனெனில், மக்கள் தடுப்பூசி போடாததால், கடுமையான நோய் மற்றும் உயிரிழப்பு அபாயம், பல மடங்கு அதிகமாக உள்ளது," என்று அவர் கூறினார். உலக சுகாதார அமைப்பின் அவசரநிலை நடவடிக்கைகளுக்கான பிரிவின் பணிப்பாளர் டொக்டர் மைக் ரயான், "ஒமிக்ரோனின் பரவல் அதிகரிப்பது, மருத்துவமனையில் சேர்க்கப்படுவோர் மற்றும் உயிரிழப்போரின் எண்ணிக்கையை அதிகரிக்க வழி வகுக்கும். குறிப்பாக குறைவான மக்களுக்கே தடுப்பூசி போட்டுள்ள நாடுகளில் இது அதிகமாக இருக்கும்," என்று எச்சரித்தார்.

புதிய ஒமிக்ரோன் திரிபு பரவுவதால் ஐரோப்பா முழுவதும் புதிய கொரோனா வைரஸ் தொற்றுகள் அதிகரித்து வருகின்றன.

டென்மார்க்கில், செவ்வாய்க்கிழமை அன்று 33,493 பேர் கொவிட் தொற்றுக்குப் பாதிக்கப்பட்டனர். அதேநேரத்தில் இத்தாலியில் சுகாதார அதிகாரிகள் 228,179 பேருக்கு தொற்று பாதிப்பு உள்ளதாகப் பதிவு செய்துள்ளனர். இதற்கு முந்தைய நாளின் எண்ணிக்கை, 83,403 ஆக இருந்தது. இதற்கிடையில், பிரான்ஸ் செவ்வாய்க்கிழமை 464,769 பேருக்கு நோய்த்தொற்று இருப்பதைப் பதிவு செய்தது. திங்கட்கிழமையன்று, 102,144 பேருக்கு கொரோனா தொற்று இருந்தது. ஒரே நாளில் நான்கு மடங்கு அதிகமாகத் தொற்றுப் பரவல் நிகழ்ந்துள்ளது. நோய்த் தொற்றுகள் இப்போது வாராந்திர சராசரியாக ஒரு நாளைக்கு 3,00,000 என்ற எண்ணிக்கையைக் கடந்துள்ளன.

## தலிபான்கள் முஸ்லிம் நாடுகளிடம் கோரிக்கை



ஆப்கானில் ஆட்சியை கைப்பற்றிய தலிபான்கள் தமது அரசை அங்கீகரிக்கும்படி முஸ்லிம் நாடுகளுக்கு கோரிக்கை விடுத்துள்ளது.

"எமக்கு உத்தியோகபூர்வ அங்கீகரம் அளிப்பதில் முன்னின்று செயற்படும்படி முஸ்லிம் நாடுகளிடம் நான் அழைப்பு விடுகின்றேன். பின்னர் எம்மால் விரைவாக முன்னேற்றம் அடைய முடியும் என்று நான் நம்புகிறேன்" என்று தலிபான் அரசின் பிரதமர் முஹமது ஹசன் அகுண்ட் நேற்று காபுலில் நடந்த செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

தலிபான் அரசை இதுவரை எந்த நாடும் அங்கீகரிக்கவில்லை. இதற்கு முன்னர் 1996 மற்றும் 2001 வரை ஆட்சியில் இருந்த தலிபான்கள் மோசமான மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாக குற்றம்சாட்டப்பட்டது.

மிதவாத போக்குடன் ஆட்சி புரிவது பற்றி அந்த அமைப்பு வாக்குறுதி அளித்தபோதும் அரச வேலைவாய்ப்புகளில் இருந்து பெண்கள் பெரும்பாலும் விலக்கப்பட்டிருப்பதோடு பெண்களுக்கான இரண்டாம் நிலை பாடசாலைகள் தொடர்ந்து மூடப்பட்ட நிலையில் உள்ளன. 57 நாடுகளைக் கொண்ட இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பு தலிபான் அரசை அங்கீகரிப்பதை கடந்த மாதம் நிராகரித்தமை குறிப்பிடத்தமை குறிப்பிடத்தக்கது.

# டொங்காவில் எரிமலை சாம்பலை நீக்க முயற்சி



பசிபிக் பெருங்கடலுக்கு அடியில் நடந்த எரிமலை வெடிப்பை தொடர்ந்து ஏற்பட்ட சுனாமியால் பாதிக்கப்பட்ட டொங்கா தீவின் விமானநிலையத்தில் படிந்துள்ள எரிமலைச் சாம்பலை நீக்க மீட்புதவிக் குழுக்கள் தீவிரமாக முயற்சி செய்து வருகின்றன.

உணவு, குடிநீர் மற்றும் பிற அடிப்படை பொருட்களை விமானம் மூலம் கொண்டு செல்லும் பணிகள் இதனால் தாமதம் அடைந்துள்ளன.

கடந்த சனிக்கிழமை எரிமலை வெடிப்புக்கு பின் நடந்த சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ நியூசிலாந்து மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகள் கப்பல்களை அனுப்பியுள்ளன.

சுனாமி காரணமாக டொங்காவில் மூவர் உயிரிழந்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. அதில் பிரிட்டன் நாட்டு பெண் ஒருவரும் அடங்குகிறார்.

எரிமலை வெடிப்பால் உண்டானபுகை 20கிலோ மீற்றர் உயரத்துக்கு எழும்பியது என்று டொங்கா அரசு தெரிவிக்கிறது.

பாதிக்கப்பட்ட தீவுகளுக்கு நீர் மற்றும் உணவு ஆகிய அவசர உதவிகளை ஏற்றிய டொங்கா கடற்படை கப்பல்கள் அனுப்பப்பட்டுள்ளன. மோசமாக பாதிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து மக்களை வெளியேற்றும் நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

# வாக்குறுதியை நிறைவேற்ற தலிபான்களுக்கு அழுத்தம்



தங்கள் நிதி ஆதாரங்கள் முடக்கப்படாமல் இருக்க வேண்டுமானால் தம் வாக்குறுதிகளில் சிலவற்றையாவது தலிபான்கள் நிறைவேற்ற வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயத்தின் ஆணையாளர் பிலிப்போ கிரண்டி தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தான் பெண்களும் சிறுமிகளும் பாடசாலைக்கு செல்ல அனுமதிக்க வேண்டும், சிறுபான்மையினர் பிரதிநிதித்துவப்படுத்தப்படல் வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளதாக "டோலோ நியூஸ்" தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் ஓகஸ்ட் நடுப்பகுதியில் ஆப்கானிஸ்தானை தலிபான்கள் கைப்பற்றியதைத் தொடர்ந்து, ஆப்கானிஸ்தானின் சொத்துக்களில் சுமார் 10 பில்லியன் டொலர்களை அமெரிக்கா முடக்கியதோடு இஸ்லாமிய எமிரேட் மீது பொருளாதாரத் தடைகளையும் விதித்துள்ளது.

# ரஷ்ய பதற்றம்: பிளின்கன் ஐரோப்பாவுக்கு விரைந்தார்




உக்ரைன் மீதான ரஷ்யாவின் ஆக்கிரமிப்பு அச்சம் அதிகரித்திருக்கும் நிலையில் அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் அன்டனி பிளின்டன் நேற்று ஐரோப்பாவுக்கு விரைந்துள்ளார்.

உக்ரைன் ஜனாதிபதி விளோடிமிர் செலன்ஸ்கியை சந்தித்து பேசவிருக்கு பிளின்கன் அதனைத் தொடர்ந்து பிரிட்டன், பிரான்ஸ் மற்றும் ஜெனர்மனி வெளியுறவு அமைச்சர்களையும் பெர்லினில் சந்திக்கவுள்ளார்.

நாளை வெள்ளிக்கிழமை ஜெனீவாவில் ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்கெய் லவ்ரொவையும் அவர் சந்திக்கவுள்ளார். அண்டை நாடான உக்ரைன் மீது தாக்குதல் நடத்தும் எண்ணம் இல்லை என்று ரஷ்யா தொடர்ச்சியாகக் கூறி வருகிறது. எனினும் உக்ரைன் எல்லையில் அந்த நாடு தொடர்ந்து படைகளை அதிகரித்து வருகிறது. இந்நிலையில் எந்த நேரத்திலும் உக்ரைன் மீது ரஷ்யா ஆக்கிரமிப்பை தொடுக்கும் என்று அமெரிக்கா எச்சரித்துள்ளது. ரஷ்யா மீது உடன் தடைகளை விதிக்கும்படி உக்ரைன் பாதுகாப்பு அமைச்சர் ஒலெக்சி ரெஸ்னிகோவ் மேற்கத்தேய நாடுகளைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

# சிறுமியை சுட்டுக்கொன்ற பொலிஸார் மீது வழக்கு



எட்டு வயது சிறுமி ஒருவரை சுட்டுக் கொன்றதாக அமெரிக்காவில் மூன்று பொலிஸார் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் முதலில் கைதான இரு பதின்ம வயதினர் மீதமான வழக்கு கைவிடப்பட்டுள்ளது.

பிலடெல்பியாவில் 2021 ஓகஸ்ட் 27ஆம் திகதி, பாடசாலை ஒன்றின் கால் பந்து போட்டி நடந்த மைதானத்துக்கு வெளியே இருந்த வாகனத்தில் அமர்ந்திருந்த பாண்டா பிலிட்டி எனும் சிறுமி சுட்டுக்கொல்லப்பட்டார். அதற்கு அருகே இரு பதின்ம வயதினர் ஒருவரை நோக்கி ஒருவர் சுட்டதால், வாகனத்தின் உள்ளே ஆயுதம் தாங்கிய சந்தேக நபர்கள் இருந்ததாக எண்ணி பொலிஸ் அதிகாரிகள் சுட்டதாக அவர்கள் தரப்பில் வாதிடப்பட்டது.

# பலஸ்தீனர் வீட்டை இடித்தது இஸ்ரேல்

கிழக்கு ஜெரூசலத்தின் உணர்வுபூர்வமான ஷெய்க் ஜெர்ராஹ் பகுதியில் பலஸ்தீன குடும்பம் ஒன்றின் வீட்டை இஸ்ரேலிய பொலிஸார் நேற்று இடித்து தகர்த்துள்ளனர்.

ஷெய்க் ஜெர்ராஹ்வில் இருக்கும் ஏனைய பலஸ்தீன குடும்பங்களை வெளியேற்றுவது தொடர்பில் கடந்த மே மாதம் ஏற்பட்ட பதற்றத்தை தொடர்ந்தே அப்போது இஸ்ரேல் மற்றும் காசாவின் பலஸ்தீன போராளிகளுக்கு இடையே 11 நாள் போர் வெடித்தமை குறிப்பிடத்தக்கது.

2017 ஆம் ஆண்டு தொடக்கம் வெளியேற்றப்படுது பற்றி எச்சரிக்கையை எதிர்கொண்டு வந்த சல்ஹியா குடும்பத்தினரின் வீட்டுக்கு நேற்று சூரியோதயத்திற்கு முன்னர் வந்த இஸ்ரேலிய அதிகாரிகள், அந்த வீட்டை தரைமட்டமாக இடித்தனர்.

இந்த நடவடிக்கையின்போது நீதிமன்ற உத்தரவை மீறியதற்காக குடும்ப உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் என 18 பேரை கைது செய்ததாக இஸ்ரேலிய பொலிஸ் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

1967 ஆறு நாள் போரில் கிழக்கு ஜெரூசலத்தை கைப்பற்றிய இஸ்ரேல், பின்னர் தனது ஆட்புலத்திற்குள் சேர்த்தபோதும் சர்வதேச சமூகம் அதனை ஏற்கவில்லை.



# பூஸ்டர் டோஸ் செலுத்திக் கொள்வதுடன் தரமான முக கவசங்கள் அணிவது கட்டாயம்

## அமெரிக்க தொற்று நோய் நிபுணர் அறிவுறுத்தல்

உலக அளவில் கொரோனா வைரஸ் பாதிப்புகள் தீவிர அச்சுறுத்தலாக இருந்து வருகின்றன. இந்த பாதிப்பில் இருந்து உலக நாடுகள் இன்னும் மீளாத நிலை காணப்படுகின்றன.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த தடுப்பூசி செலுத்தும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வரும் நிலையிலும் வைரஸ் உருமாற்றமடைந்து பாதிப்பு அதிகரித்து வருகிறது.

தற்போது ஒமிக்ரான் தொற்று உலகம் முழுவதும் வெகுவாகப் பரவி வருவதால் பல நாடுகளில் ஊரடங்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், அமெரிக்காவின் மேரிலேண்ட் பல்கலைக்கழகத்தின் தொற்று நோய் பிரிவு தலைவர் பஹீம் யூனுஸ் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது: கொரோனாவுடன் வாழ நாம் கற்றுக்கொள்ள வேண்டும். இதற்கு கொரோனாவுக்கு எதிரான பாதுகாவலை கைவிட வேண்டும் என அர்த்தம் இல்லை.

நல்ல தரமுள்ள முக கவசங்களை நாம் கட்டாயம் அணிய வேண்டும். நாம் தடுப்பூசி போட்டு கொள்ள வேண்டும். ஆபத்து சூழலைத் தவிர்க்க பூஸ்டர் டோஸ் செலுத்திக் கொள்ள வேண்டும். நோய் எதிர்ப்பு சக்தியால் 90 சதவீத இறப்பைத் தடுக்க முடியும்.

இசை கச்சேரிக்கோ அல்லது மதுபான விடுதிக்கோ செல்வது இன்றியமையாத ஒன்றல்ல. ஆனால் நம்முடைய பெற்றோரை கவனிப்பது என்பது முக்கியத்துவம் வாய்ந்தது.

முழு அளவிலான தடுப்பூசி செலுத்திக் கொள்வதால் கொரோனாவுடன் நாம் வாழ முடியும். அவை மரணம் ஏற்படாமல் தடுக்கும். மருத்துவமனையில் சிகிச்சை பெறாமலும் தடுக்கும் என தெரிவித்துள்ளார்.

## சிறு விளம்பரம்

### மோட்டார் வாகனங்கள்



106

**கார்கள்** விற்பனைக்கு

NW CBC-1287 Tata nano, 2017 Car கூடிய விலைக் கோரிக்கைக்கு வெலிபல் பினான்ஸ் பிஎல்சி இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0711210810 004306



117

**வேன்கள்** விற்பனைக்கு

53-9386 Toyota Liteace, 1983 கூடிய விலைக் கோரிக்கைக்கு வெலிபல் பினான்ஸ் பிஎல்சி இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0714542958 004305



119

**பஸ்கள், லொறிகள்** விற்பனைக்கு

63-1598 Toyota Coaster, 1990, bus கூடிய விலைக் கோரிக்கைக்கு வெலிபல் பினான்ஸ் பிஎல்சி. இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0714-542958 004303


### பொது அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(2) (8)ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனியின் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் முன்னைய பெயர்: **சீ சீ சீ - ஐ சீ எல் பி ஏ டீ ஆர் சென்டர் (கரண்டி) லிமிட்டட்**

பதிவிலக்கம்: GL 00201293

பெயர் மாற்றம் செய்யப்பட்ட திகதி: 2021 டிசம்பர் 15

பதிவு முகவரி: **இல. 50, நவம் மாவத்தை, கொழும்பு-7**

கம்பனியின் புதிய பெயர்: **சீ சீ சீ - ஐ சீ எல் பி இன்டர்நேஷனல் ஏ டீ ஆர் சென்டர் (கரண்டி) லிமிட்டட்**

**பணிப்பாளர் சபையின் கட்டளைப் பிரகாரம்**

**Corporate Services (Private) Limited**

**செயலாளர்கள்**

**C C C - I C L P International A D R Center (Guarantee) Limited**

---

# பொருட் கொள்வனவு அறிவித்தல்
## அரசாங்க அச்சுத் திணைக்களம்

**N –12**

அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் பெறுகைக்குழு தலைவர் பின்வரும் பண்டங்கள் தொடர்பில் உற்பத்தியாளர்கள். அவர்களின் பிரதி நிதிகள் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்களிடமிருந்து விலைமனுக்களைக் கோருகின்றார்.

1. **Bid Reference No -**

   **SCP02/NCB05/KOMO/INK/2022-5**
   **Process Inks for Komori Machine**

   1. **Process Black 1500 kg**
   2. **Process Cayn 1500 kg**
   3. **Process Magenta 1500 kg**
   4. **Process Yellow 1800 kg**

**விலைமனு ஏற்றுக்கொள்ளும் இறுதி தினம் 2022.02.10ஆந் திகதி பி.ப. 2.00 மணி வரையாகும்.**

மேற்குறிப்பிட்ட விலைமனு தொடர்பில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 2,000/- கொண்டதும் அத்துடன் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி தினத்துக்கு முந்திய தினம் 2.00 மணிக்கு முன்னதாக கிடைக்கப் பெறும் எழுத்து மூலமான விண்ணப்பத்தின் பேரில் அரசாங்க அச்சுத் திணைக்கள, வழங்கல் பிரிவில் கடமை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை விலைமனு தொடர்பான ஆவணங்களை பெற்றுக்கொள்ளலாம். மேலதிக விபரங்கள், கடமை நாட்களில் மு.ப. 8.30 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை எமது அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**கங்கானி லியனகே**
**பெறுகைக்குழு தலைவர்,**

**அரசாங்க அச்சுத் திணைக்களம்,**
**இலக்கம் 118, டாக்டர் டெனிஸ்டர் டீ சில்வா மாவத்தை, கொழும்பு-08.**
**2022.01.20**
**தொலைபேசி : 011-2694898**
**இணையத்தளம் : www.documents.gov.lk**

---

கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணம் மற்றும் கட்டிடப் பொருட்கள் கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு

# கட்டிடங்கள் திணைக்களம்
## 2022ஆம் வருடத்திற்கான ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்

1. 2022ஆம் ஆண்டில் நிர்மாண வேலைகள்/விஷேடத்துவமான வேலைகளை கையேற்பதற்காக கட்டிடங்கள் திணைக்களத்துடன் பதிவு செய்ய விரும்பும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
2. விண்ணப்பங்கள் இரண்டு வகுதிகளின் கீழ் கோரப்படுகின்றன.

| வகுதி | விளக்கம் | தெரிவு செய்வதற்கான ஆகக்குறைந்த தகைமை |
|---|---|---|
| வகுதி A | 10 மில்லியன் ரூபாவுக்கு மேற்படாத மொத்த மதிப்பீட்டுக் கிரயத்தைக் கொண்ட நிர்மாண வேலைகள் | கட்டிட நிர்மாணத் துறைக்கான செல்லுபடியாகும் CIDA பதிவு (C8, C7, C6 அல்லது C5 தரங்கள் மட்டும்) |
| வகுதி B | 10 மில்லியன் ரூபாவுக்கு மேற்படாத மொத்த மதிப்பீட்டுக் கிரயத்தைக் கொண்ட நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு வேலைகள் | நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு துறைக்கான செல்லுபடியாகும் CIDA பதிவு (C8, C7, C6 அல்லது C5 தரங்கள் மட்டும்) |
| வகுதி C | 10 மில்லியன் ரூபாவுக்கு மேற்படாத மொத்த மதிப்பீட்டுக் கிரயத்தைக் கொண்ட விசேடத்துவமான வேலைகள் | விசேடத்துவமான நிர்மாண ஒப்பந்தக்காரர்கள் / மின்னியல் மற்றும் பொறிமுறை சேவைகளுக்கான (EM) செல்லுபடியாகும் CIDA பதிவு (EM5, EM4 மற்றும் EM03 தரங்கள் மட்டும்) / விசேடத்துவ நிர்மாண ஒப்பந்தக்காரர்கள் (SP 05, SP 04 மற்றும் SP 03 தரங்கள் மட்டும்) |

3. மேற்படி விடயங்களுக்காக பதிவு செய்து கொள்ள விரும்புபவர்கள் திணைக்களத்தின் இணைய தளத்திலிருந்து (www.buildings.gov.lk) விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
4. ஒப்பந்தக்காரரொருவர் ஒரு வகுதிக்கு மேலதிகமாக விண்ணப்பிப்பதற்கு விரும்பினால், ஒவ்வொரு வகுதிக்கும் தனித்தனியான விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
5. நாடளாவிய ரீதியில் ஒப்பந்தக்காரர் தனித்தனியாக ஒவ்வொரு மாகாணத்திற்கும் வகுதி "A மற்றும் B", மற்றும் வகுதி "C" ஆகியவற்றிற்காக பதிவு செய்யப்படுவார்கள். ["A மற்றும் B"வகுதி விலைமனுக்களுக்கான கோரிக்கையானது 04/2016(ii) மற்றும் 03/2020 எனும் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் நடைமுறைப்படுத்தப்படும்].
6. திணைக்களத்தினால் கோரப்பட்ட விலைமனுக்களுக்கு இரு தொடர்ச்சியான தடவைகளில் சமர்ப்பிக்கத் தவறிய எந்தவொரு ஒப்பந்தக்காரரும் பதிவேட்டிலிருந்து நீக்கப்படுவர்.
7. விண்ணப்பப் படிவத்தில் கேட்கப்பட்டுள்ள துணை ஆவணங்களை விண்ணப்பப் படிவத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். ஏதேனும் ஆவணங்களை சமர்ப்பிக்காத அல்லது பகுதியாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதற்கு காரணமாகலாம். காரணம் காட்டாமல் எந்தவொரு விண்ணப்பத்தையும் ஏற்றுக் கொள்வதற்கும் அல்லது நிராகரிப்பதற்குமான உரிமையை பணிப்பாளர் நாயகம் தன்னகத்தே கொண்டுள்ளார்.
8. விண்ணப்பங்களை 2022-02-08ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் ஒப்படைக்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் ''கட்டிடங்கள் பணிப்பாளர் நாயகம், கட்டிடங்கள் திணைக்களம், 2ஆம் மாடி, ''செத்சிறிபாய'', பத்தரமுல்ல' என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் ''2022ஆம் வருடத்திற்கான ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்'' எனத் தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.
9. ஒவ்வொரு வகுதிக்குமான மீளளிக்கப்படாத பதிவுக் கட்டணமான 1000.00 ரூபாவானது ரொக்கப் பணத்தில் செலுத்தப்படல் வேண்டுமென்பதுடன் பற்றுச்சீட்டின் மூலப் பிரதி விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். ரொக்கப் பணத்திலான பணக்கொடுப்பனவானது கட்டிட திணைக்கள தலைமையகத்தில் அல்லது கட்டிடங்கள் திணைக்கள எந்தவொரு வலய பிரதான பொறியியலாளரின் அலுவலகத்திலும் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.00 மணிக்கும் பி.ப. 3.00 மணிக்குமிடையில் மேற்கொள்ளப்படலாம். மாற்றுவழியாக இலங்கை வங்கியின் (பத்தரமுல்ல கிளை) 7042710 எனும் கணக்கிலக்கத்திற்கு கட்டிடங்கள் பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் வைப்புச் செய்யலாம்.
10. மேலதிக தகவலுக்கு 011-2864788 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக மற்றும் 011-2868285, 011-2864771 என்ற தொலைநகலூடாக (ஒப்பந்தங்கள்) பிரதான பொறியியலாளருடன் தொடர்பு கொள்ளலாம்.

**பொறியியலாளர் எம்.ஏச்.எம். இஸ்மயில்,**
**கட்டிடங்கள் பணிப்பாளர் நாயகம்,**
**கட்டிடங்கள் திணைக்களம்,**
**2 ஆம் மாடி, ''செத்சிறிபாய'',**
**பத்தரமுல்ல.**
**www.buildings.gov.lk**

---

## களனிப் பல்கலைக்கழகம்
## கேள்வி நீடிப்பு அறிவித்தல்

**பல்கலைக்கழக பரந்தளவு கம்பியற்ற வலையமைப்பை (Wide Wireless Network) வழங்குதல், நிறுவுதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல் - களனிப் பல்கலைக்கழகம், தலுகம, களனி.**

**UK/GA/GA3/2021/55**

2022 ஜனவரி 02ஆம் திகதிய வாரமஞ்சரி, சிலுமின மற்றும் சண்டே ஒப்சேர்வர் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட விலைக்கோரலுக்கான அழைப்பை மேற்குறிப்பிடப்பட்ட குறிப்பீட்டிலக்கம் குறிக்கின்றது.

1. மேற்குறிப்பிடப்பட்ட விலைக்கோரலுக்கான அழைப்பின் திறத்தல் / முடிவுறுத்தல் திகதிகள் பின்வருமாறு மாற்றப்பட்டுள்ளன.

   அ. விலைக்கோரல் காலம் - 2022 ஜனவரி 03ஆம் திகதி முதல் 2022 பெப்ரவரி 02ஆம் திகதி வரை

   ஆ. விலைமனுக்கள் முடிவுறுத்தல் / திறத்தல் - 2022 பெப்ரவரி 03ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு

   இ. விலைமனுக்களின் செல்லுபடிக் காலம் - 2022 மே 02ஆம் திகதி வரை

   ஈ. விலைக்கோரல் பிணை முறியின் செல்லுபடிக் காலம் - 2022 ஜூன் 01ஆம் திகதி வரை

2. விலைமனு ஆவணங்களுடன் பின்னிணைப்பு வெளியிடப்பட்டு இணைக்கப்பட்டுள்ளது. இது ஏற்கனவே விலைமனு ஆவணங்களைக் கொள்வனவு செய்த சகல விலைமனுதாரர்களுக்கும் அவர்களின் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்படும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**களனி பல்கலைக்கழகம், தலுகம, களனி.**
**தொலைபேசி: 0112903116/117**
**மின்னஞ்சல்: generaladmin@kln.ac.lk**

---

# பெறுகை அறிவித்தல்
## தேசிய வைத்தியசாலை – கண்டி
## சுகாதார அமைச்சு

01. கண்டி தேசிய வைத்தியசாலையின் பெறுகைக்குழுத் தலைவரினால் பின்வரும் சேவைகளைக் கொள்வனவு செய்து கொள்வதற்காக 2022.02.11 அன்று மு.ப.10.00 வரை விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும். அன்றைய தினம் மு.ப.10.30 இற்கு விலைமனுத் திறக்கப்படும்.

    Procurement of Network Maintenance Service for National Hospital Kandy For 02 Years

02. 2022 ஜனவரி 20 முதல் 2022 பெப்ரவரி 10 வரை மு.ப.09.00 முதல் பி.ப.3.00 வரையான காலப்பகுதியில் கண்டி தேசிய வைத்தியசாலையில் ரூபா.3,500.00 இற்கான மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி, விண்ணப்பித்துப் பெற்றுக்கொள்ளும் மாதிரிப்படிவங்களில் விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். கண்டி தேசிய வைத்தியசாலையில் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவுற்றதும் உடனடியாக அவை திறக்கப்படும். அவ்வேளையில், விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற அலுவலர்கள் சமுகமளித்திருப்பதற்கு அனுமதிக்கப்படுவர்.

03. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் பதிவுத்தபால் மூலம் பின்வரும் முகவரிக்கு அனுப்புதல் அல்லது கண்டி தேசிய வைத்தியசாலையின் பிரதான கணக்காளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியிற் சேர்ப்பதன் மூலம் ஒப்படைக்கலாம். விலைமனுக்களை அடக்கும் உறைகளின் இடதுபக்க மேல் மூலையில், தாம் விண்ணப்பிக்கும் சேவையின் பெயர் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

04. எவ்வாறாயினும், விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் தினம் மற்றும் நேரம் கடந்து கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்பட்டு திறக்கப்படாமல் திருப்பி அனுப்பப்படும் விலைமனுப்படிவங்களை கண்டி தேசிய வைத்தியசாலையில் இலவசமாகப் பரிசீலனை செய்து கொள்ளலாம். தொலைபேசி இலக்கம் (081-2233337 முதல் 42 வரை) நீடிப்பு 2216 மூலம் வார வேலை நாட்களில் மு.ப.09.30 முதல் பி.ப.02.00 வரை மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

05. 05 மில்லியன்களிற்கு மேற்படும் விலைமனுக்களுக்காக, இலங்கை கம்பனிகள் பதிவாளர் திணைக்களப் பதிவுச்சான்றிதழ் (PCA3) பெற்றிருத்தல் வேண்டும்.

06. விலைமனு முன்னோடி சந்திப்பு (Pre bid meeting) 2022 பெப்ரவரி 01 அன்று மு.ப.10.00 இற்கு கண்டி தேசிய வைத்தியசாலையின் பணிப்பாளரின் அலுவலகத்திற்கண்மையிலுள்ள கலந்துரையாடல் அறையில் நடைபெறும்.

07. திறந்த போட்டி ரீதியிலான விலைமனுக் கோரும் முறைமையினடிப்படையில் இவ்விலைமனுக் கோரப்படும்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக்குழு,**
**தேசிய வைத்தியசாலை, கண்டி**

---

இலங்கை சனநாயக சோசலிச குடியரசு
நெடுஞ்சாலைகள் அமைச்சு
வீதி அபிவிருத்தி அதிகாரசபை

# விலைமனுக்கோரல்
## கிராமிய பாலக் கட்டுமானப் பிரிவுக்கு இரும்பு கட்டமைப்பு கேடர்கள் வழங்கல்

01. வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வழங்கல் குழுவின் தலைவரினால் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு கிராமிய பாலக் கட்டுமானப் பிரிவுக்கு இரும்பு கட்டமைப்பு கேடர்கள் வழங்களுக்கான முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றது.

02. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் **2022.01.20** ஆம் திகதியிலிருந்து **2022.02.09** ஆம் திகதி வரை காலை **09.00 மணியிலிருந்து** மாலை **15.00** மணி வரையான காலப்பகுதியினுள் மீளச் செலுத்தப்படாத **ரூ.13,500/- (வட்வரி உள்ளடங்களாக)** மனுக் கட்டணத்தினை **இலங்கை வங்கி - கூட்டுறவு கிளை 0000001943 எனும் கணக்கிலத்தில் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர்** எனும் பெயரில் வைப்பிலிட்ட மூலப் பற்றுச்சீட்டை வீதி அபிவிருத்தி அதிகார சபை கொள்முதல் பணிப்பாளர், நான்காம் மாடி, "மகநெகும மஹமெதுர" இல-216, டென்சில் கொபேகடுவ மாவத்தை, கொஸ்வத்தை, பத்தரமுல்லையில் சமர்ப்பிப்பதன் மூலம் அச்சிடப்பட்ட ஆங்கில மொழியிலான விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

03. 1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்தின்படி, மனுவினைப் பெற்றுக்கொள்வதற்கு நிறுவனப் பதிவு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட வேண்டும்.

| ஒப்பந்த இலக்கம் | விபரம் | மனுக்காப்புறுதிப் பிணைத் தொகை (ரூ) | மீள்செலுத்தப்படாத மனு ஆவணக் கட்டணம் (வட் வரியுடன்) (ரூ) |
|---|---|---|---|
| RDA/DPR/RBCD/SG/2022/02 | கிராமிய பாலக் கட்டுமானப் பிரிவுக்கு இரும்பு கட்டமைப்பு கேடர்கள் வழங்கல் | 1,000,000.00 | 13,500.00 |

04. மனு ஆவணங்களை **வீதி அபிவிருத்தி அதிகார சபையின் இணையத்தளத்தில் (http://www.rda.gov.lk/source/publications.htm)** இலவசமாக பரிசீலனை செய்யலாம்.

05. மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதியிலிருந்து **91 கலண்டர் நாட்கள்** வரை மனுக்கள் செல்லுபடியாவதுடன், மேல் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிக்கு நிகரான **(2022.06.09 ஆம் திகதி வரை செல்லுபடியாகும்)** பெறுமதியுடைய மனுக்காப்புறுதிப்பிணைத்தொகையுடன் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மனுக்காப்புறுதி பிணைத்தொகை இணைக்கப்படாத அனைத்து மனுக்களும் நிராகரிக்கப்படும்.

06. **2022.02.10 ஆம் திகதி 14.00** மணிக்கு முன்னர் மூடிய மனுப் பிரதிகளுடன் தயாரிப்பு மாதிரிகளை (அசல் மற்றும் நகல்) **தலைவர், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கொள்முதல் குழு, வீதி அபிவிருத்தி அதிகார சபை, முதலாம் மாடி, "மகநெகும மஹமெதுர" இல.216, டென்சில் கொபேகடுவ மாவத்தை, கொஸ்வத்தை, பத்தரமுல்லை** எனும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். காலம் தாழ்த்தி கிடைக்கும் மனுக்கள் நிராகரிக்கப்படும். மனுக்கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுதாரர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

07. மனுக்கள் அடங்கியுள்ள கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"கிராமிய பாலக் கட்டுமானப் பிரிவுக்கு இரும்பு கட்டமைப்பு கேடர்கள் வழங்கல்"** எனக் குறிப்பிட வேண்டும்.

08. மேலதிக விபரங்களுக்கு தொலைபேசி இலக்கம் **011-2884790 /** மின்னஞ்சல் **procurement@rda.gov.lk** ஊடாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளரை (கொள்முதல் பிரிவு) தொடர்பு கொள்ள முடியும்.

தலைவர்,
**வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கொள்முதல் குழு,**
**வீதி அபிவிருத்தி அதிகார சபை**
முதலாம் மாடி, 'மகநெகும மஹமெதுர',
இல - 216, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.

---


**Repeat Your ad For Better Offers**


---

## கடற்றொழில் அமைச்சு

அலங்கார மீன்கள், நன்னீர் மீன்கள், இறால்களை வளர்த்தல், கடற்றொழில் துறைமுகங்கள் அபிவிருத்தி, பலநாள் கடற்றொழில் அலுவல்கள் மற்றும் மீன் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சு

NAQDA

**இலங்கை தேசிய நீர் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை (NAQDA)**

# விலைமனுக்கோரல்
# பெறுகை அறிவித்தல்

இலங்கை தேசிய நீர் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் பெறுகைக் குழுத் தலைவரினால் (மேஜர்) தேசிய போட்டி ஏல நடைமுறையை பின்பற்றி ஒரு வருட காலத்திற்கு பின்வரும் சேவையை வழங்குவதற்கு தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றது.

| ஒப்பந்த இல மற்றும் பெறுகையின் பெயர் | மனுப் பிணை மற்றும் பெறுமதி (SLR) | மீளச் செலுத்தப்படாத கட்டணம் (SLR) | மனு ஆவணங்கள் வழங்கப்படும் மற்றும் இறுதி திகதி / நேரம் | மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதி / நேரம் |
|---|---|---|---|---|
| **NQ/DPC/2021/NCB/S/05** NAQDA ஊழியர்களுக்கான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை வழங்குதல் - 2022 / 2023 | மனுப் பாதுகாப்பு **200,000.00** **2022.06.04** வரை (121 நாட்களுக்கு) | **6,000.00** | **2022.02.02 ஆம் திகதி பி.ப.3.00** | **2022.02.03 ஆம் திகதி பி.ப.2.00** |

01. தகுதியான அனைத்து மனுதாரர்களும் **071-7724430, 011-2786544, 011-2786495,** தொலைநகல் **/ 6493,** மின்னஞ்சல் : **po@naqda.gov.lk** மற்றும் **www.naqda.gov.lk** மூலமாக மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்வதுடன், **2022.01.20** ஆம் திகதி முதல் **2022.02.02** ஆம் திகதி வரை கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் மனு ஆவணங்களை சரிபார்க்கலாம்.
02. ஆர்வமுள்ள மனுதாரர்கள் ஆர்வமுள்ள தகுதியுடைய ஏலதாரரால் பின்வரும் முகவரிக்கு எழுத்துப்பூர்வ விண்ணப்பத்தை சமர்ப்பித்து, மற்றும் மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு பணமாகவோ அல்லது வங்கி வரைவோலையாகவோ மீளச்செலுத்தப்படாத மனுக் கட்டணத்தை செலுத்துவதன் மூலம் பூரணப்படுத்தப்பட்ட மனு தொகுப்பினை பெற்றுக்கொள்ள முடியும்.
03. மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளிலிருந்து **91 நாட்களுக்கு** மனுக்கள் செல்லுபடியாகும் **(2022.05.05)**
04. மனு ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளபடி இலங்கை மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட வணிக வங்கி ஒன்றினால் வழங்கப்பட்ட **மனுப் பிணையுடன் அனைத்து மனுக்களும் சமர்ப்பிக்கப்பட வேண்டும்** மற்றும் பொது விதிமுறைகளுக்கு ஏற்ப மேற்கூறப்பட்டுள்ள திகதிகளில் அல்லது அதற்கு முன்னர் கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.
05. இம்மனுவினை தயாரிப்பது அல்லது ஒப்படைப்பது தொடர்பாக விண்ணப்பதாரருக்கு ஏற்படும் செலவுகளுக்கு இலங்கை தேசிய நீர் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை (NAQDA) பொறுப்பேற்க மாட்டாது.

தலைவர்,
**திணைக்களத்தின் கொள்முதல் குழு (மேஜர்)**
**இலங்கை தேசிய நீர் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை,**
இல 41/1, புதிய பாராளுமன்ற வீதி, பெலவத்த, பத்தரமுல்ல.
**2022.01.20**

# ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை

## சத்திரசிகிச்சைக்கு பயன்படுத்தக்கூடிய உருப்படிகளை வழங்குவதற்கான கேள்வி

1. தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் முறைமையின் கீழ் 2022.02.03 ஆம் திகதியன்று மு.ப. 10 மணி வரையும் பின்வரும் சத்திரசிகிச்சைக்கு பயன்படுத்தக்கூடியவைகளுக்காக நுகேகொட, தளபத்பிட்டிய, ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவரினால் முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| Tender No. | Item | Qty | Non-refundable Deposit (Rs) |
|---|---|---|---|
| Q 46/22 | Gloves (Disposable & Surgical) | lot | Rs.2,500.00 |
| Q 47/22 | Oxygenators Adult | lot | Rs.2,500.00 |
| Q 48/22 | Disposable Syringes | lot | Rs.2,500.00 |

பின்வருவனவற்றைச் சமர்ப்பித்து எந்தவொரு ஆர்வமும் தகுதியுமுள்ள முகவர்கள் அல்லது உற்பத்தியாளரொருவரின் சார்பாக பெயர் குறிப்பிடப்படுபவர்கள் அல்லது கேள்விதாரர் விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை இரு பிரதிகளில் கொள்வனவு செய்யலாம்.

(i) ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் பணிப்பாளருக்கு எழுத்து மூலமான கோரிக்கையொன்று.

(ii) ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் கணக்காளருக்கு மேலே கூறப்பட்டுள்ளவாறான மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்துதல்.

(iii) வியாபார பதிவின் சான்றிதழின் நிழற்படப்பிரதியொன்று.

2. பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 8 ஆம் பந்தியின் கீழ் கம்பனிகள் பதிவாளரினால் (சமாகம் மெதுர) வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழும் முன்வைப்புடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

3. விலைமனுக்கள் வைத்தியசாலையினால் வழங்கப்படும் படிவங்களில் மாத்திரமே சமர்ப்பிக்கப்படல் வேண்டும். வைத்தியசாலையினால் படிவங்களைத் தவிர வேறேதாவது படிவங்களில் சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.

4. வைத்தியசாலையின் வழங்கல் அலுவலகத்தில் கேள்வி ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.

5. 2022.01.20 ஆம் திகதியிலிருந்து 2022.02.02 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் வழங்கல்கள் அலுவலகத்திலிருந்து கேள்வி ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம்.

6. 2022.02.03 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் விரிவுரை மண்டபத்தில் கேள்விகள் மூடப்பட்டு திறக்கப்படும். விலைமனுக்களை திறக்கும் வேளையில் கேள்விதாரரின் பிரதிநிதியொருவர் சமுகமளிக்கலாம்.

7. எந்தவொரு அல்லது அனைத்து கேள்விகளையும்/ கேள்வியின் எந்தவொரு பாகத்தையும் ஏற்றுக் கொள்வதற்கான சுயஉரிமையை திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் கொண்டுள்ளார்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை,**
**தளபத்பிட்டிய,**
**நுகேகொட.**



# மேல் மாகாண சுகாதாரத் திணைக்களம்
# ஆதார வைத்தியசாலை - ஹோமாகம

## 2022ஆம் ஆண்டிற்கான வழங்குநர்கள் /ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்

2022ஆம் ஆண்டில் எமது வைத்தியசாலைக்குப் பின்வரும் வழங்கல்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக அத்துறைகளில் தகைமைபெற்றுள்ள வழங்குநர்கள்/ ஒப்பந்தக்காரர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக வழங்குநர்கள்/ ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்து கொள்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. (ஹோமாகம பிரதேசத்தின் சுற்றுச் சூழலில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.)

**வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்**

**தகைமைகள்/ நிபந்தனைகள்**

1. வியாபாரமானது, இலங்கையில் பதிவு செய்யப் பெற்றிருத்தல் வேண்டுமென்பதுடன், பதார்த்தங்களை விற்பனை செய்தல் மற்றும் சேவைகளை வழங்கல்களிற்கான நிறுவுனத்திற்கான செல்லுபடியாகும் தன்மையிலுள்ள உரிமம் பெற்றிருத்தல் வேண்டும். அவ் உரிமைப்பத்திரத்தின் மற்றும் பதிவுச் சான்றிதழின் பிரதிகள் விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
2. கடன் அடிப்படையில் பண்டங்களை வழங்கல் வேண்டும்.

**விண்ணப்பித்தல் மற்றும் பதிவு செய்தல்**

01. பதிவுக்காக விண்ணப்பிக்கும் ஒவ்வொரு உருப்படிக்கும் ரூபா 500.00 இற்கான மீளளிக்கப்படாத கட்டணம் செலுத்தி விண்ணப்பித்தல் வேண்டும். இதற்கான விண்ணப்பப்படிவங்களை இந்நிறுவுனத்தில் பெற்றுக்கொள்ளலாமென்பதுடன், அனைத்து விண்ணப்பங்களுடனும் குறித்த கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
02. ஒப்பந்தங்கள் மற்றும் நிர்மாணங்களிற்கான பதிவுக் கட்டணம் ரூபா 1000.00 ஆகும். தகைமைகளைப் பரிசீலனை செய்த பின்னர் பதிவுகள் மேற்கொள்ளப்படும்.
03. கட்டிட நிர்மாணங்கள் மற்றும் பழுதுபார்த்தல்களிற்காகப் பதிவு செய்து கொள்ள எதிர்பார்க்கும் விண்ணப்பதாரர்கள், பதிவு செய்து கொள்ளல் அத்தியாவசியமாகுமென்பதுடன் இதற்காகப் பதிவுச் சான்றிதழ்களின் பிரதிகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

**வழங்கல்கள்**

01. கட்டிடப் பொருட்கள் மற்றும் நீர்க்குழாய் துணை உறுப்புக்கள்.
02. மின்சார துணை உறுப்புக்கள்/ கருவிகள்
03. மெத்தைகள் மற்றும் ரெக்சின் உறைகளை வழங்கல்.
04. நுகர்வோர் பதார்த்தங்கள் மற்றும் சுகாதாரப் பாதுகாப்புப் பதார்த்தங்கள்.
05. எழுது கருவிகள் மற்றும் அலுவலக உபகரணங்கள்
06. டோனர் மற்றும் அச்சு உருப்படிகள்
07. கணனி துணை உறுப்புக்கள் மற்றும் கணனி உதிரிப்பாகங்கள்
08. அலவலகத் தளபாடங்கள் மற்றும் அலுவலகப் பாவனைப் பொருட்கள்
09. சமையலறை உபகரணங்கள் மற்றும் தையல் உபகரணங்கள், வீட்டுத் தோட்ட உபகரணங்கள் மற்றும் இயந்திராதிகள் (TCL விசிரும் உபகரணம் உட்பட)
10. கணனிகள், குளிரூட்டிகள், வளிசீராக்கி இயந்திரங்கள்.
11. நிழற்படப் பிரதி இயந்திரங்கள் மற்றும் அச்சு இய்நதிரங்கள்
12. டயர், டியூப் மற்றும் வாகன பெற்றறிகளை வழங்கல்.

**பராமரித்தல்கள்**

01. கட்டிடங்களைப் புதுப்பித்தல்
02. கணனிகள் மற்றும் துணை உறுப்புக்களைப் புதுப்பித்தல்
03. கதவு யன்னல்களைத் தயாரித்தல் மற்றும் புதுப்பித்தல் (பலகை/ அலுமினியம்) தச்சு வேலைகள்.

**சேவைகள்**

01. வாகனங்களைப் புதுப்பித்தல் மற்றும் சேவைகளை வழங்கல்
02. வளிசீராக்கிகளைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்

வழங்குநர்களின் பற்றாக்குறை ஏற்படும் வேலைகளில் பதிவு செய்யப் பெற்றிறாத வழங்குநர்களிடமிருந்து விலைமனுக் கோரும் உரிமை மருத்துவ அத்தியட்சகருக்கு உரித்தாகும்.

பதிவு செய்தல் 2022.02.28 வரை மாத்திரம்.

**தலைவர்,**
**பிராந்தியப் பெறுகைக் குழு,**
**ஆதார வைத்தியசாலை, ஹோமாகம.**
**தொலைபேசி: 0112098824/ 0112098825**

### அறிவித்தல் - அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

கரன்தெனிய, மடகும்புர, 5ஆம் கட்டை, இலக்கம் 58/3 இல் வசிக்கும், பொளந்தஹேவகே இந்திரா ஜயலத் (தே.அ.அ.இல.695701454V) ஆகிய நான், கரந்தெனிய, மடகும்புர, 5ஆம் கட்டையில் வசிக்கும் ஹப்புதன்திரீகே விஜேசேன லயனல் (தே.அ.அ.இல.720223724V) என்பவருக்கு என் சார்பில் மற்றும் என் பெயரில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக, 2014 ஆம் ஆண்டு டிசம்பர் 15ஆம் திகதி சைபிரசிலுள்ள இலங்கை கொன்சலேட் அலுவலகத்தில் என்னால் கையொப்பமிட்டு கொன்சலேட் அலுவலக முகாமையாளர் திருமதி டெஸ்பினா கொன்ஸ்டன்டிநோவ் அவர்களினால் அத்தாட்சிப் படுத்தப்பட்டதும் பதிவாளர் நாயகத்தின் திணைக்களத்தின் தெற்கு வலய அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதும் அற்றோணி அதிகாரப்புத்தகத்தின் அத்தியாயம் 56, பக்கம் 12, தினப்புத்தக இலக்கம் 5364 இன் கீழ் பதிவு செய்யப்பெற்றுள்ளதுமான அற்றோணி தத்துவமானது இன்று முதல் செயல்வலுப்பெறும் வகையில் இரத்துச் செய்து இல்லாதொழிக்கப்படுகின்றதென அனைவருக்கும் இததால் அறிவித்துக் கொள்கின்றேன்.

**பொளந்த ஹேவகே இந்திரா ஜயலத்,**
**இல.58/3, 5ஆம் கட்டை, மடகும்புர, கரந்தெனிய.**

### கேள்வி அறிவித்தல்
### இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்

**இபெகூ உரிமையுள்ள துணைக்கம்பனியொன்றை தாபிப்பதற்காக சந்தை அளவையிடுதலை நடாத்துவதற்காக திறமுறை திட்டம், அமுல்நடாத்தல் மற்றும் திரவ வாய்வு வர்த்தக அபிவிருத்தியை கண்காணிப்பதற்காகவும் உசாத்துணையாளரொருவரை தெரிவு செய்தல்**

**B/06/2022**

மேலேயுள்ள உசாத்துணை சேவைகளை வழங்குவதற்காக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின சார்பாக திணைக்கள உசாத்துணையாளர் பெறுகைக் குழுவானது முன்மொழிவுகளை கோருகின்றது. தேவைப்படுத்தப்படும் சேவைகளின் மேலதிக விபரங்கள் நியதிக் குறிப்புக்களில் வழங்கப்பட்டுள்ளன.

2022.02.02 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு முன்மொழிவுகள் அவைகளில் மூடும் நேரத்தின் பின்னர் உடனடியாகவே பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளுக்கான முகாமையாளரின் அலுவலகத்தில் திறக்கப்படும். உசாத்துணையாளர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் முன்மொழிவுகளை திறக்கும் வேளையில் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

முன்மொழிவுகள் பதிவுத் தபாலில் அனுப்பப்படலாம் அல்லது கொழும்பு-09, டொக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, 609 ஆம் இலக்கத்தின் 1 ஆம் மாடியிலுள்ள இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளுக்கான முகாமையாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படலாம்.

ஆர்வமுள்ள உசாத்துணையாளர்களுக்காக **www.ceypetco.gov.lk** என்ற இபெகூ இன் இணையதளத்திலும் முன்மொழிவுகளுக்கான கோரிக்கை காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. கொவிட்-19 தொற்று காரணமாக, விலைமனுதாரர்கள் **http://ceypetco.gov.lk/public-tenders/**. என்ற இபெகூ இன் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யலாமென்பதுடன் விலைமனுதாரர் 1,000 ரூபாவை (925.83 ரூபா + 8% பெசேவ) மீளளிக்கப்படாத கட்டணமாக மக்கள் வங்கி தலைமை அலுவலகத்தின் 004100110208633 என்ற இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் கணக்கிலக்கத்திற்கு வரவு வைக்கப்பட்டு பணக்கொடுப்பனவு பற்றுச்சீட்டானது விலைமனுவுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை 0115455103 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக கூட்டுரு திட்டமிடல் மற்றும் வர்த்தக அபிவிருத்திக்கான முகாமையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள்),**
**இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்,**
**1 ஆம் மாடி,**
**இல. 609, டொக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை,**
**கொழும்பு-09.**
**தொலைபேசி: 011 5455332, தொலைநகல்: 011 5455424**

# கேள்வி அறிவித்தல்

## புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கங்கள் பணியகம்

### குறைபாடுள்ள பொருட்களை விற்பனை செய்தல் (யக்கல களஞ்சிய கட்டிடத்தொகுதி)

புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கங்கள் பணியகத்தின் யக்கல வெரெல்லவத்த களஞ்சியசாலை கட்டிடத்தொகுதியில் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டுள்ள கீழே காட்டப்பட்டுள்ள பாவனையிலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட பொருட்களை விற்பனை செய்வதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| பொருள் வகை மற்றும் வகுதி இலக்கம் | விபரங்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 01 (பழைய டயர்கள்) | Toyota Hilux கெப் வாகனம் மற்றும் Mitsubishi L200 கெப் வாகனங்களுக்கான பாவிக்கப்பட்ட டயர்கள் | 574 |
| | கார் மற்றும் வேன்களுக்கான பாவிக்கப்பட்ட டயர்கள் | 35 |
| | லொறிகளுக்கான பாவிக்கப்பட்ட டயர்கள் | 16 |
| 02 (அலுவலக உபகரணங்கள்) | Computer (CPU) | 31 |
| | Laptop Computer | 12 |
| | UPS | 70 |
| | Scanner Machine | 08 |
| | Fax Machine | 05 |
| | Finger Machine | 05 |
| | Cash Counter Machine | 07 |
| | Fridge | 01 |
| | LCD Monitor | 24 |
| | CRT Monitor | 52 |
| | Photocopy Machine | 12 |
| | Water Dispenser | 06 |
| | Printers | 70 |
| | Projectors | 01 |
| | Calculators | 41 |
| | GPS | 09 |
| | Digital Camera | 08 |
| | Laminating Machine | 01 |
| | Telephone (Cable) | 52 |
| | Pedestal Fan | 65 |
| 03 (மரத் தளபாடங்கள்) | உருக்கு கபர்ட்கள் / உருக்கு கண்ணாடி கபர்ட்கள் | 110 |
| | உருக்குக் கதிரைகள் / விருந்தினர் கதிரைகள் / நிறைவேற்றுநர் கதிரைகள் / கணனி கதிரைகள் / மரக் கதிரைகள் | 450 |
| | உருக்கு மேசைகள் / மரத்தாலான மேசைகள் | 50 |

இந்தப் பொருட்கள் தனித்தனியாக விற்பனை செய்யப்பட மாட்டாது என்பதுடன் ஒரு வகுதியாக இயைபுடைய பொருட்கள் ஒரு கொள்வனவாளருக்கு விற்பனை செய்யப்படும். மேற்படி பொருட்களைக் கொள்வனவு செய்ய ஆர்வமுள்ள விண்ணப்பதாரர்கள் 10,000.00 (மீளளிக்கப்படும்) மற்றும் 1,000.00 மீளளிக்கப்படாத கட்டணத்தை புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கங்கள் பணியக தலைமை அலுவலகத்திற்குச் செலுத்தியதன் பின் பெறுகைப் பிரிவிலிருந்து இயைபுடைய விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

2022-01-20ஆம் திகதி முதல் வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 04.00 மணி வரை இயைபுடைய பொருட்களை யக்கல வெரெல்லவத்த களஞ்சியசாலை கட்டிடத்தொகுதி வளவில் பரீட்சித்துப் பார்க்கலாம். இதன் பிரகாரம் இதில் ஆர்வம் காட்டும் தரப்பினர் இயைபுடைய விண்ணப்பப் படிவங்களை பூர்த்தி செய்து 2022-02-07ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன்னர் இந்த விலைமனுக்களை ‘‘தலைவர், பெறுகைக் குழு, புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கங்கள் பணியகம், இல. 569, எப்பிட்டமுல்ல வீதி, பிட்டகோட்டே’’ எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது நிர்வாகப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

விலைமனுக்களை அனுப்பும்போது கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ‘‘களஞ்சியசாலையிலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட பொருட்களுக்கான விலைகள்’’ எனக் குறிப்பிடவும். விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் விலைமனுக்களைச் சமர்ப்பித்துள்ளவர்கள் கலந்துகொள்ளலாம் என்பதுடன் தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கங்கள் பணியகம்,**
**இல. 569, எப்பிட்டமுல்ல வீதி,**
**பிட்டகோட்டே.**

**தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள் மற்றும் கிராமிய சிற்பக்கலைகள் மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சு**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## 2022/2023ஆம் வருடத்திற்கு தேசிய அருங்கலைகள் நிலையத்திற்கு (நெலும் பொக்குண) சுத்திகரிப்பு சேவையை பெற்றுக்கொள்ளல்


**பெறுகை இலக்கம்: NH/PRO/BID/2022-01**

1. தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள் மற்றும் கிராமிய சிற்பக்கலைகள் மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் பெறுகைக் குழுத் தலைவரினால் தேசிய அருங்கலைகள் நிலையத்திற்கு (நெலும் பொக்குண) சுத்திகரிப்பு சேவையைப் பெற்றுக்கொள்வதற்காக தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
2. ஒரு வருட நாட்காட்டி வருடத்திற்கான விலைக்கோரல்கள், தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் முறையின் (NCB) பிரகாரம் மேற்கொள்ளப்படும். அதேபோல் பெறுகை வழிகாட்டி கோவையின் 3.11 விதிமுறைகளின் பிரகாரம் இரட்டை உறை முறையின் பிரகாரம் விலைமனுதாரர்கள் மதிப்பிடப்படுவர்.
3. இந்த விலைக்கோரலுக்காக முன்வரும் நிறுவனம் கம்பனிகள் சட்டத்தின் கீழ் சுத்திகரிப்புச் சேவைகளுக்கு இயைபான பதிவைக் கொண்ட நிறுவனமாகவிருத்தல் வேண்டும் என்பதுடன் விலைமனுதாரர்கள் தமது விலைமனுக்களை 1987ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்து அச்சான்றிதழை விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் சமர்ப்பித்தல் வேண்டும்.
4. இதில் ஆர்வம் காட்டும் விலைமனுதாரர்கள் 2022-01-27ஆம் திகதி முதல் 2022-02-21ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தினுள் விலைக்கோரல் ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம் என்பதுடன் தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள் மற்றும் கிராமிய சிற்பக்கலைகள் மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சுக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றை செய்து மற்றும் அமைச்சுக்கு மீளளிக்கப்படாத 5,000.00 கட்டணத்தை ரொக்கப் பணமாகச் செலுத்தி இயைபுடைய பற்றுச்சீட்டை பெறுகை பிரிவிற்குச் சமர்ப்பிப்பதன் பேரில் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள விலைக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
5. விலைமனுக்களின் செல்லுபடிக் காலம் 77 நாட்களாகவிருத்தல் வேண்டும் என்பதோடு, விலைக்கோரல் ஆவணங்களுடன் விலைமனுப் பிணை முறியொன்றையும் சமர்ப்பித்தல் வேண்டும். விலைக்கோரல் ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தின் பிரகாரம் தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள் மற்றும் கிராமிய சிற்பக்கலைகள் மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் செயலாளரின் பெயருக்கு 190,000.00 பெறுமதியான 2022-02-21ஆம் திகதி முதல் 105 நாட்கள் வரையில் செல்லுபடியாகும் வகையில் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து சமர்ப்பித்தல் வேண்டும்.
6. முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை மூலப் பிரதி (Original) மற்றும் நகல் பிரதி (Duplicate) எனக் குறிப்பிட்டு வெவ்வேறான இரு உறைகளில் இட்டு அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு அனுப்புதல் வேண்டும் என்பதுடன் சகல உறைகளின் இடதுபக்க மேல் மூலையிலும் ‘‘2022/2023ஆம் வருடங்களில் நெலும் பொக்குண அரங்கத்திற்கான சுத்திகரிப்பு சேவைகளை வழங்குவதற்கான விலைகளை பெற்றுக்கொள்ளல் - பெறுகை இலக்கம் NH/PRO/BID/2022-01’’ எனக் குறிப்பிட்டு 2022-02-21ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் பிரதான கணக்காளர், தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள் மற்றும் கிராமிய சிற்பக்கலைகள் மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சு, 4ஆம் மாடி, செத்சிறிபாய 2ஆம் படிநிலை, பத்தரமுல்ல எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நேரில் கொண்டு வந்து ஒப்படைக்கலாம்.
7. விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளல் 2022-02-21ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு நிறைவுறும். விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவடைந்த உடனடுத்து அமைச்சின் கேட்போர் கூடத்தில் திறக்கப்படும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் திறக்கப்படாமலேயே திருப்பியனுப்பப்படும். விலைமனுதாரர் அல்லது அவரது பிரதிநிதியொருவர் விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் கலந்துகொள்ளலாம்.
8. இதில் ஆர்வம் காட்டும் விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை 011-2186122 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக கணக்காளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**அமைச்சுப் பெறுகைக் குழு,**
**தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள் மற்றும்**
**கிராமிய சிற்பக்கலைகள் மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சு.**

# அறிவித்தல்





## தென் மாகாண மகளிர் விவகார அமைச்சு
## 2022 ஆம் ஆண்டிற்காக சுயதொழில் பயிற்சி பெண் ஆலோசகர்களை பதிவுசெய்து கொள்ளல்

01. அழகியற்கலை மற்றும் மணமகள் அலங்காரம்
02. திரைச்சீலை பாடநெறி
03. பாதணிகள் பாடநெறி
04. கையுறை மற்றும் பாடசாலை பேக் பாடநெறி
05. பேங்கொக் பொம்பை பாடநெறி
07. பத்திக் பாடநெறி
08. ஜாவா மற்றும் சில்க் பத்திக் பாடநெறி
09. கேக் மற்றும் கேக் மாதிரிகள் பாடநெறி
10. பேக்கரி மற்றும் பேஸ்ட்ரி பாடநெறி
11. அலங்கார பர்ஸ் பாடநெறி
12. பெச் பொயின்ட் பாடநெறி
13. சொப்ட் வொயிஸ் பாடநெறி
14. அலங்கார கைப்பணி பாடநெறி
15. அலங்கார மெழுகுதிரி பாடநெறி
16. அலங்கார தையல் சார்ந்த ஆக்கங்கள் பாடநெறி
17. பன் சார்ந்த உற்பத்தி பாடநெறி
18. உணவு தொழில்நுட்ப பாடநெறி
19. மரவேலைகள் உற்பத்தி பாடநெறி
20. மீன் செதில் சார்ந்த உற்பத்தி பாடநெறி
21. பபளு ஆக்கம் பாடநெறி
22. அகற்றப்பட்ட பொருட்கள் சார்ந்த உற்பத்தி பாடநெறி
23. சணல் சார்ந்த உற்பத்தி பாடநெறி
24. உள்ளக மனை அலங்கார பாடநெறி
25. சாரி வேலைகள் பாடநெறி
26. சிகை அலங்கார பாடநெறி

மேற்படி பாடநெறிகளை நடத்துவதற்காக தகைமையுள்ள பெண் ஆலோசகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- க.பொ.த (சா.தரம்) சித்தியடைந்திருத்தல்
- விண்ணப்பிக்கும் பாடநெறிகள் சம்பந்தமாக NVQ மட்டத்தில் சான்றிதழ் அல்லது அங்கீகரிக்கப்பட்ட டிப்ளோமா சான்றிதழ் இருத்தல் வேண்டும்.
- விண்ணப்பிக்கும் பாடத்துறை பற்றிய தொழில் முயற்சியாளராக இருத்தல் மற்றும் பெண் ஆலோசகராக கடமையாற்றியுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- அழகியற்கலை மற்றும் மணமகள் அலங்கார பாடநெறிக்கு மட்டும் குறைந்தபட்சம் NVQ4 மட்டத்தில் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

தற்போது அழகியற்கலை கூடமொன்றை நடத்திச் செல்வோருக்கு முன்னுரிமையளிக்கப்படும்.

விண்ணப்பிக்கும் பாடத்துறையுடன் சம்பந்தப்பட்ட உங்களது ஆக்கங்கள் அல்லது அவற்றின் போட்டோக்கள் அல்லது வீடியோ காட்சிகள் நேர்முகத் தேர்வில் சமர்ப்பித்தல் வேண்டும்.

தென் மாகாணத்தில் நிரந்தர பதிவு செய்துள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

மேற்படி தகைமைகளை பூர்த்தி செய்துள்ளவர்கள் 2022.02.03 அல்லது அத்தினத்திற்கு முன் செயலாளர், தென் மாகாண விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், மகளிர் விவகார..... அமைச்சு, 3ஆம் மாடி, தக்ஷினபாய, லபுதுவ, காலி என்ற முகவரிக்கு உங்களது முழுமையான தகவல்கள் அடங்கிய சுயதரவுப் பத்திரங்களை பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில், “பெண் ஆலோசகர்களை பதிவுசெய்து கொள்ளல் - 2022” என்று குறிப்பிடல் வேண்டும்.

(இத்தினத்திற்கு பின்பு கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்)

பெண் ஆலோசகர்களை பதிவு செய்து கொள்ளல் பற்றிய இறுதித் தீர்மானம் அமைச்சு செயலாளரைச் சார்ந்தது.

**பிமல் இந்ரஜித் டி சில்வா**
**செயலாளர்**
**தென் மாகாண விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சு**
**3ஆம் மாடி, தக்ஷினபாய, லபுதுவ, காலி**

மேலதிக விபரங்களுக்கு தொ.பே இல - 091-4936708, 091-4936706.




## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## திருத்த வேலைகள் - 2022

## ருஹுணு பல்கலைக்கழகம், வெள்ளமடம, மாத்தறை

## திருத்தம்

1. 2022.01.11ம் திகதி பிரசுரமான பத்திரிகை அறிவித்தல் சம்பந்தமானது (ருஹுணு பல்கலைக்கழகம், திருத்த வேலைகள்) அத்துடன் கீழே குறிப்பிடப்படுமாறு தேவைப்படும் ICTAD தரத்தில் பின்வரும் திருத்தங்கள் உள்ளடக்கப்படல் வேண்டும். ஒப்பந்தத்தின் எல்லா நிபந்தனைகளும் முன்னைய விளம்பரத்தில் இருப்பது போன்று அமையும்.

| இல | ஒப்பந்தப் பெயர் | ICTA தரம் (கட்டிடம் அல்லது மின்னியல் மற்றும் இயந்திரவியல் சேவைகள் (EM) | மீளளிக் கப்படாத கட்டணம் (ரூபா) | மீளளிக் கப்படும் கேள்விக் கட்டணம்/ விலைமனுப் பிணை (ரூ) | பொறியிய லாளர் மதிப்பீடு (ரூபா மில்லி யனில்) | ஒப்பந்த காலம் (நாட் கள்) |
|---|---|---|---|---|---|---|
| 1. | மாத்தறை வெள்ளமடம, ருஹுணு பல்கலைக்கழகம், மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞான வளாகம், தகவல் தொழில்நுட்ப பிரிவிற்கு கனணி ஆய்வுகூடத்தின் உத்தேச பழுதுபார்த்தல். (AHEAD/ RA2/IT/ RUH/ HASS/ WORKS/ 01) | கட்டிடங்கள் C8 அல்லது C7 EM தரங்கள் EM4 அல்லது அதற்கு மேல் | 2,000.00 | 49,000.00 | 4.83 | 45 |

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**ருஹுணு பல்கலைக்கழகம்,**
**வெள்ளமடம, மாத்தறை.**
**20 ஜனவரி 2022**

---

இலங்கை முதலீட்டு சபை (BOI)

## பெறுகை அறிவித்தல்

2022 ஜனவரி 20 ஆம் திகதி "டெயிலிநியூஸ்" இல் பிரசுரமான கீழே குறிப்பிடப்படும் பெறுகைக்கான அழைப்பு மற்றும் BOI இன் அலுவலக இணையத்தளம் - (www.investSrilanka.com)

Request forproposals (RFP) for the selection of a service provider for the provision of Health Insurance Cover for the Employees in the permanent Cadre of BOI for the Year 2022/2023

Contract No - BOI/S&S/Q/137/2021

இப் பெறுகையுடன் தொடர்புடைய விலைமனு ஆவணங்கள் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ளன அத்துடன் ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் "டெயிலிநியூஸ்" பிரசுரமான விளம்பரத்துடன் இணைந்து செயற்படலாம் மற்றும் BOI இன் அலுவலக இணையத்தளம் (www.investsrilanka.com)

விலைமனுதாரர்கள் மேலதிக விபரங்களை சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர் (மனிதவளங்கள்) இடம் 0112332204 /0112427191/0778555125இல் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்**
**இலங்கை முதலீட்டுச் சபை**

---

afc

## தங்கக் கடன் சேவை
## தங்க நகை ஏல விற்பனை

எலயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சி உடன் கீழேயுள்ள நிலையங்களில் அடகு வைக்கப்பட்டு 31.10.2021 வரை மீட்கப்படாத ஆபரணங்கள் 27.01.2022 முற்பகல் 9.30 மணிக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் பிரசித்த ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

### தங்கக் கடன் சேவை நிலையங்கள்

அழுத்கம, அனுராதபுரம், அத்துருகிரிய, அவிசாவளை, மட்டக்களப்பு, சங்கானை, சாவகச்சேரி, சிலாபம், சுன்னாகம், கலேவெல, ஹொரண, ஜா-எல, யாழ்ப்பாணம், கதுருவெல, கடுவெல, கல்பிட்டி, தம்புள்ளை, கிளிநொச்சி, கடவத்தை, களனி, நீர்கொழும்பு, மொனராகலை, மாத்தறை, ஹோமாகம, மாலபே, ஹட்டன், பலாங்கொடை, பதுளை, பாணந்துறை, பிலியந்தலை, பருத்தித்துறை, இரத்தினபுரி, ரிகில்லகஸ்கட, திருகோணமலை, திருநெல்வேலி வவுனியா, அம்பாறை, பூகொட, அம்பலங்கொட, நிட்டம்புவ, கிரிபத்கொட, கிரிந்திவெள, வெலிமடை, நாவலபிட்டி, ராகல, தெஹியத்தகண்டி, கல்கமுவ, களுத்துறை, கேகாலை, குருணாகல், வெல்லவாய, ராஜகிரிய, கோஹவலை, நுவரெலியா, நிக்கவரெட்டியா, மாத்தளை, மதவாச்சிய, ஹிங்குரககோட, எம்பிலிபிட்டியா, அம்பாந்தோட்டை, புதுக்குடியிருப்பு, அக்குரஸ்ஸா, சங்கானை, சாவகச்சேரி, கடவத்தை, கிளிநொச்சி, கிரிபத்கொடை, கொஹவல, மாலபே, மன்னார, நீர்கொழும்பு, புதுக்குடியிருப்பு, காலி, புத்தளம், வோட் இடம், மஹியங்கனை, வென்னப்புவ, மஹரகம, குளியாபிட்டி, உடப்புவ

### ஏல விற்பனை இடம் பெறும் நிலையம் மற்றும் திகதி:

722, கோட்டை வீதிஇராஜகிரிய
27.01.2022

ஏலவிற்பனைக்காக வருகை தரும் அனைவரும் தேசிய அடையாள அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும். எவ்வித அறிவித்தலுமின்றி ஏல விற்பனையை இரத்துச் செய்தல், பிற்போடல் மற்றும், இணைப்பதற்கான உரிமையை எலயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சி கொண்டுள்ளது.

65 1956 இல் இருந்து
எலாயன்ஸ் பினான்ஸ் கம்பனி பி.எல்.சி
செலாக்கியத்திற்கோர் நம்பிக்கையான அத்தனம்

அடகுச் சேவைத் தலைவர்
எலயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சீ
722, கோட்டை வீதிஇராஜகிரிய
தொலை : 0115 573600

---

**Repeat Your ad For Better Offers**

---

## தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபை

## பெறுகை அறிவித்தல்

தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான ரிதியகம பண்ணைக்காக தயாரிக்கப்பட்ட கால்நடை உணவு வழங்குவதற்காக 1986 இல 15 விலங்குணவு சட்டத்தின் கீழ் பதிவு செய்துள்ள விலங்குணவு உற்பத்தியாளர்களிடமிருந்து கீழ்க்காணும் கால எல்லையுடன் சம்பந்தப்பட்ட பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

ரிதியகம பண்ணைகளுக்காக - 2022 பெப்ரவரி 26ஆம் திகதி முதல் 2022 ஜுன் 30ஆம் திகதி வரை

| விலங்குணவு வகை | தேவைப்படும் அளவு (மெ.தொ) | கேள்விப் பிணை (ரூ) |
|---|---|---|
| கறவைப் பசுக்களின் உணவு 1 (Milking Cowfeed - Type1) | 12.30 | 1,143,900.00 |

விலங்குணவு தேவைப்படும் அளவு மாதிரிகள் (Specifications) மற்றும் நிபந்தனைகள் அடங்கிய ஆவணங்களை அலுவலக (தேவை) நேரங்களில் கீழ்க்காணும் முகவரியில் உள்ள தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபையின் வழங்கல் முகாமையாளரிடம் வேண்டுதல் கடிதத்தின் மூலம் பெற்றுக்கொள்ளலாம். ஒரு கேள்விக்காக ரூ- 1000.00 வீதமான மீளளிக்கப்படாத வைப்பு அறவிடப்படும்.

2022 பெப்ரவரி 09ம் திகதி பி.ப. 3.30 வரை ஆவணங்கள் விநியோகிக்கப்படுவதுடன், 2022 பெப்ரவரி 10ம் திகதி பி.ப. 10.30 இற்கு கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவுறுத்தப்படும் மேற்படி நேரம் தாண்டியவுடன் கொழும்பு - 05, நாராஹேன்பிட்டிய, நாவல வீதி, இல. 40 இல் தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபையில் கேள்விகள் திறக்கப்படும்.

**தலைவர், பெறுகைக் குழு,**
**தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபை,**
**இல. 40, நாவல வீதி,**
**நாராஹேன்பிட்ட,**
**கொழும்பு - 05.**
**தொ.பே. 0112501701/2, 011-5746308**

---

## கேள்விகளுக்கான அழைப்பு

### விவசாயத் திணைக்களம்

### பிரதி விவசாய பணிப்பாளர் (விதைகள்) அலுவலகம், நுவரெலியா

விவசாயத் திணைக்களத்தின் நுவரெலியா பிரதி விவசாய பணிப்பாளர் (விதைகள்) அலுவலகத்தின் பின்வரும் வேலைகளுக்காக உள்நாட்டு விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| A | B | C | D | | |
|---|---|---|---|---|---|
| தொ. இல. | வேலை விபரங்கள் | ஒப்பந்த இலக்கம் | வைப்புச் செய்ய வேண்டிய கேள்விப் பிணை மற்றும் கேள்வி செல்லுபடியாக வேண்டிய காலம் | | |
| | | | ரொக்கப் பணமாக | வங்கிப் பிணை முறியாக | பிணை செல்லுபடியாக வேண்டிய காலம் |
| 01 | சீத்தாஎலிய விதை உருளைக்கிழங்கு களஞ்சியம், சபாரி வாகனத் தரிப்பிடம் மற்றும் பண்ணையின் பிரதான நுழைவாயில் என்பவற்றை உள்ளடக்கும் வகையில் மூன்று CCTV கெமரா முறைமைகளைப் பொருத்துதல் | நுஎ /பிவிப/கே /2021/175 | 21,750.00 | 43,500.00 | 2022-05-21 |

இதில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மேற்படி விடயத்தின் பொருட்டும் பெற்றுக்கொண்ட கேள்விப் படிவங்களைப் பயன்படுத்தி விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் நுவரெலியா பிரதி விவசாயப் பணிப்பாளர் (விதைகள்) அலுவலகத்தின் பிரதான முகாமைத்துவ சேவை அதிகாரிக்கு மீளளிக்கப்படாத 1000.00 ரூபா கட்டணத்தை செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை சமர்ப்பித்து 2022-01-20ஆம் திகதி முதல் 2022-02-09ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.00 வரை கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்வி அறிவுறுத்தல்களுக்கு அமைவாக முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகளை ''தலைவர், பிரதேச பெறுகைக் குழு, பிரதி விவசாயப் பணிப்பாளர் (விதைகள்) அலுவலகம், சந்ததென்ன வீதி, நுவரெலியா'' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். அல்லாவிடில் மேற்குறிப்பிடப்பட்ட முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

சகல வழங்குநர்களும் மேற்படி அட்டவணையின் D நிரலின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் பிணைப் பணத்தை வைப்புச் செய்தல் வேண்டும் என்பதுடன் வங்கிப் பிணை முறியின் ஊடாக பிணையை வைப்புச் செய்வதானால் அது இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் பெற்றுக்கொண்டதாகவிருத்தல் வேண்டும்.

கேள்விகளை ஏற்றுக்கொள்ளல் 2022-02-10ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு நிறைவுறும் என்பதுடன் உடன் திறக்கப்படும். இந்நிகழ்வில் கேள்விதாரர்கள் அல்லது அவரது எழுத்து மூல அதிகாரம் பெற்ற பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**பிரதி விவசாயப் பணிப்பாளர் (விதைகள்) அலுவலகம்,**
**சந்ததென்ன வீதி,**
**நுவரெலியா.**
**052-2222611**

---

## அரச அச்சிடல் கூட்டுத்தாபனம்

## விலைமனுக்களுக்கான அழைப்பு - இறக்குமதி மற்றும் வழங்கல்

STATE PRINTING CORPORATION

கீழே வழங்கப்பட்டவாறு **Imported Double Side Coated Art Paper** இன் வழங்கலுக்காக அவர்களின் தரஅங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் ஊடாக பணியாற்றும் வழங்குநர்கள், இறக்குமதியாளர்கள் அல்லது உற்பத்தியாளர்களான தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து அரச அச்சிடல் கூட்டுத்தாபன பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார்.

| கோவைக் குறியீடு | அளவு | உருப்படி | விலைமனுப் பிணையம் |
|---|---|---|---|
| SPC/SUP/FI/001/2022/08 | 200 MT | Imported Double Side Coated Art Paper 317mm or 634 mm of 951 mm/120 gsm-Matt | Rs.400,000/= |

1. விலைமனுக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் மூலம் நடாத்தப்படும்.
2. ஒப்பந்தத்தை வழங்குவதற்காக விலைமனுதாரர்கள் பின்வரும் தகுதித்தன்மை தகவுத்திறனுக்கு அமைந்தொழுகல் வேண்டும்.
   அ. முகவராண்மையாளரின் நிலபரத்தை உறுதிப்படுத்துவதற்காக உற்பத்தியாளரின் அதிகாரம்/ அற்றோணித்தத்துவம்.
   ஆ. செல்லுபடியாகும் தன்மையிலுள்ள பதிவாக்கம்.
3. 2022.01.28 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு அரச அச்சிடல் கூட்டுத்தாபனத்தில் விலைமனு முன்னோடிக் கூட்டம் நடைபெறும்
4. 2022.01.20 ஆம் திகதியிலிருந்து 2022.02.07 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப.9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் ஒவ்வொரு தொகுதிக்கும் மீளளிக்கப்படாத கட்டணமாக 5,000 ரூபாவை செலுத்திய பின்னர் பாதுக்க, பணாலுவ, அரச அச்சிடல் கூட்டுத்தாபனம், வழங்கல்கள் முகாமையாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
5. 2022.02.08 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அடக்கியுள்ள தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வி குறிப்பீடு குறிப்பிடப்பட்டு பாதுக்க, பணாலுவ, அரச அச்சிடல் கூட்டுத்தாபனம், வழங்கல்கள் முகாமையாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் மேலேயுள்ள முகவரியான தலைவர், அரச அச்சிடல் கூட்டுத்தாபனம், பணாலுவ, பாதுக்க என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனு திறத்தல் நிகழ்வில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்
6. விலைமனுக்கள் அவைகளை மூடிய திகதியிலிருந்து 45 நாட்காட்டி நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
7. இலகுவில் மாற்றக்கூடியதான வங்கி வரைவுகள் ரொக்கப் பணத்தில் அல்லது இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் இலங்கையில் செயற்படும் புகழ் வாய்ந்த வங்கியொன்றினால் நிபந்தனையற்ற வங்கி வரைவாகவும் தலைவர்/ பொது முகாமையாளர், அரச அச்சிடல் கூட்டுத்தாபனம், என்ற பெயரில் வழங்கப்பட்டதாகவுமுள்ள வங்கி பிணையமானது விலைமனுவுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்கள் வழங்கல் முகாமையாளரிடமிருந்து 2757500 என்ற தொலைபேசி/ தொலைநகல் வழியாக பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**அரச அச்சிடல் கூட்டுத்தாபனம்,**
**பணாலுவ,**
**பாதுக்க.**

SPC

---

## இலங்கை துறைமுக அதிகாரசபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

1. கீழே தரப்படும் உருப்படிகளுக்காக தகைமையுள்ள கேள்விதாரர்களிடமிருந்து இலங்கை துறைமுக அதிகார சபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரால் பொறியிடப்பட்ட விலைமனுக்கள் இப்போது அழைக்கப்படுகின்றன.

| கேள்வி இல. | கேள்வியின் பெயர் | விலைமனுப்பிணைத் தொகை (ரூபா) | ஆவணக் கட்டணம் (VAT உள்ளடங்கலாக) | மூடப்படும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CMS/LP/21/ PT/01/053 | பார்சோப் (உள்ளூர்) 650G - 30,000 | 60,000.00 | 1000.00 | 15.02.2022 13.30 மணி |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேலதிகமான மொத்த ஆகுசெலவிலுள்ள கேள்விகளுக்கு 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகப்படுத்தப்படும். இதற்கமைவாக மேலே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு கேள்வியிலும் ஈடுபட்டுள்ள அனைத்து சாரார்களும் ஒப்பந்தக் காலம் முழுவதும் மேற்கூறப்பட்டுள்ள சட்டத்திற்கு தீவிரமாக அமைந்தொழுகல் வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலும், எந்தவொரு விலைமனுதாரரும் முகவரொருவராக, உபமுகவராக, பிரதிநிதியொருவராக அல்லது எந்தவொரு வெளிநாட்டு உற்பத்தியாளரின் அல்லது ஒரு வழங்குநராக பெயர் குறிப்பிடப்படுபவராக செயற்பட விரும்பின், பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் தம்மை பதிவு செய்து உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை விலைமனு ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் நிகரான பண்டங்களை வழங்குவதில் ஆகக் குறைந்தது கடந்த ஐந்து (5) வருடங்களுக்கு ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை வழங்கல் மற்றும் பண்டங்கள் முகாமைத்துவ பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்று அலுவலக நேரங்களில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
5. 2022 ஜனவரி 21 ஆம் திகதியிலிருந்து 4 ஆம் நிரலில் சுட்டிக்காட்டியுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும், மூடும் திகதிக்கு முன்னரான திகதி வரையும் செலுத்திய பின்னர், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
6. விலைமனுக்கள் அவைகளை மூடும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரியில் மூடும் நேரத்தில் நேரடியாகவே சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் மேலே குறிப்பிட்டுள்ள விலைமனுப்பிணைத் தொகையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பண்டங்கள் முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**இல. 45, லெய்டன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**

**தொலைபேசி இலக்கங்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் இலக்கங்கள்: 2381652, 2470443**

# அஸ்வத், சாதிக் அக்கரைப்பற்று உதைபந்து லீக்கின் நிர்வாகிகளாகத் தெரிவு

**அட்டாளைச்சேனை மத்திய நிருபர்**

அட்டாளைச்சேனை சுப்பர்சொனிக் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த அஸ்வத், சாதீக் ஆகியோர் அக்கரைப்பற்று உதைபந்து லீக்கின் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அக்கரைப்பற்று உதைபந்து லீக்கீன் பதிய நிர்வாக சபைத் தெரிவு, அக்கரைப்பற்று மாகநகர ஹல்லாஜ் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. அக்கரைப்பற்று உதைபந்து லீக்கின் செயலாளராக அட்டாளைச்சேனை சுப்பர்சொனிக் விளையாட்டுக் கழகத்தின் பயிற்றுவிப்பாளரும், விளையாட்டு உத்தியோகத்தருமான எம்.எச்.எம்.அஸ்வத், உப தலைவராக சுப்பர்சொனிக் விளையாட்டுக் கழகத்தின செயலாளரும்; அட்டாளைச்சேனை தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளருமான ஏ.ஆர்.எம்.சாதீக் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு, திருக்கோவில், பொத்துவில், இறக்காமம் ஆகிய 05 பிரதேச செயலாளர் பிரிவுகளிலுள்ள மொத்தம் 19 கழகங்கள்

அங்கம் வகிக்கும் அக்கரைப்பற்று உதைபந்து லீக்கீன் பதிய தலைவராக அக்கரைப்பற்ற மாநகர சபை உறுப்பினரும், ஹிஜ்றா விளையாட்டுக் கழகத் தலைவருமான அஸ்மி அப்துல் கபூர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அட்டாளைச்சேனை அஷ்ரஃப் விளையாட்டுக் கழகத் தலைவர் எஸ்.எம்.எம்.நிஸாம் லீக்கின் பொருளாளராகத் தெரிவு தெரிவானார். அக்கரைப்பற்று உதைபந்து லீக்கின் செயலாளராகவும், உபதலைவராகவும் தெரிவுசெய்யப்பட்டுள்ள அட்டாளைச்சேனை சுப்பர்சொனிக் விளையாட்டுக் கழகநிர்வாகிகள் அஸ்வத், சாதீக் ஆகியோரக்கு சுப்பர்சொனிக் விளையாட்டுக்கழகத் தலைவர் எம்.ஐ.எம்.அஷ்ரஃப் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், விளையாட்டுவீரர்கள் ஆகியோர் வாழ்த்தும் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

**பாகிஸ்தானில் இடம்பெற்ற குத்துச்சண்டை இறுதி போட்டி:**

# முல்லைத்தீவு யுவதி கணேஸ் இந்துகாதேவிக்கு தங்கப்பதக்கம்





பாகிஸ்தான் நாட்டில் இடம் பெற்ற குத்துச்சண்டை இறுதி போட்டியில் முல்லைத்தீவு யுவதி கணேஸ் இந்துகாதேவி தங்கப் பதக்கம் பெற்று இலங்கைக்கு பெருமை சேர்த்துள்ளார்.

தந்தையை இழந்த நிலையில் தாயின் அரவணைப்பில் வாழ்ந்து வந்து குத்துச்சண்டையில் சாதித்து பாகிஸ்தானில் இடம்பெறும் சர்வ தேச குத்துச்சண்டை போட்டியில் பங்குகொண்ட முல்லைத்தீவு யுவதியான கணேஷ் இந்துகாதேவி தங்கப்பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கரிப்பட்ட முறிப்பு புதியநகர் கிராமத்தில் தந்தையை இழந்த நிலையில் தாயின் அரவணைப்பில் வாழ்ந்து குத்துச் சண்டையில் சாதித்து வரும் கணேஷ் இந்துகாதேவி பாகிஸ்தானில் இடம்பெற்றும் சர்வதேச போட்டியில் பங்குகொள்ள தெரிவாகி பாகிஸ்தான் சென்றிருந்தார்.

இந்நிலையில் கடந்த (18) பாகிஸ்தான் லாகூரில் இடம்பெற்ற 25 வயதுக்குட்பட்ட 50-55கிலோ கிராம் எடைப் பிரிவின் இடம்பெற்ற குத்துச்சண்டை போட்டியில் தங்கப் பதக்கம் வென்று முல்லைத்தீவு மாவட்டத்துக்கும் நாட்டுக்கும் பெருமை தேடித் தந்துள்ளார் இவரை பல்வேறு தரப்பினரும் பாராட்டி வருகின்றனர்.

# தசுன் ஷானகவின் கன்னி சதம் வீண்: வெற்றியீட்டியது சிம்பாப்வே அணி

கண்டி – பல்லேகலை சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்ற இலங்கை மற்றும் சிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான இரண்டாவது ஒருநாள் போட்டியில், சிம்பாப்வே அணி 22 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று, தொடரை 1-1 என சமப்படுத்தியுள்ளது.

ஐசிசி ஒருநாள் சுப்பர் லீக்கிற்கான இந்த போட்டித்தொடரின் இரண்டாவது போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சிம்பாப்வே அணி முதலில் துடுப்பெடுத்தாடி 50 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகளை இழந்து 302 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

டகுட்ஸ்வானாஷே கைடானோ மற்றும் ரெஜிஸ் சகப்வா ஆகியோர் முதல் விக்கெட்டுக்காக 59 ஓட்டங்களை பகிர்ந்து, நேர்த்தியான ஆரம்பத்தை பெற்றுக்கொடுத்தனர்.

சகப்வா 47 ஓட்டங்களை பெற்று அரைச்சதத்தை தவறவிட்டு ஆட்டமிழக்க, கைடானோ 26 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். குறித்த இருவரின் விக்கெட்டுகளையும் கைப்பற்றி ஜெப்ரி வெண்டர்சே இலங்கை அணிக்கு சாதகத்தை கொடுத்தார்.

இருப்பினும் முதல் ஒருநாள் போட்டியில் சதமடித்த ஷோன் வில்லியம்ஸ் மற்றும் அணித்தலைவர் கிரைக் எர்வின் ஆகியோர் மூன்றாவது விக்கெட்டுக்காக 106 ஓட்டங்களை பகிர்ந்து இலங்கை அணிக்கு சவால் கொடுத்தனர். இதில், ஷோன் வில்லியம்ஸ் அரைச்சதத்தை தவறவிட்டு 48 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க, கிரைக் எர்வின் அரைச்சதம் கடந்து வேகமாக ஓட்டங்களை குவித்தார்.

சிம்பாப்வே அணி 256 ஓட்டங்களை பெற்றிருந்த போது, கிரைக் எர்வின் 91 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து தன்னுடைய சதத்தை தவறவிட்டார். இறுதியாக, சிக்கண்டர் ரஷா வேகமாக ஓட்டங்களை குவித்ததுடன், தன்னுடைய அரைச்சதத்தையும் பதிவுசெய்தார். சிக்கண்டர் ரஷா இறுதி ஓவரின் இறுதிப்பந்தில் 56 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க, சிம்பாப்வே அணி 8 விக்கெட்டுகளை இழந்து 302 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.



இலங்கை அணியின் பந்துவீச்சில் ஜெப்ரி வெண்டர்சே 3 விக்கெட்டுகளையும், நுவான் பிரதீப் 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். நுவான் பிரதீப் 2 விக்கெட்டுகளை வீழ்த்தியிருந்த போதும் தன்னுடைய 10 ஓவர்களில் 74 ஓட்டங்களை விட்டுக் கொடுத்திருந்தார்.



பதிலுக்கு துடுப்பெடுத்தாட களமிறங்கிய இலங்கை அணி, இந்த போட்டியின் ஆரம்பத்தில் தடுமாறத்தொடங்கியது. குசல் மெண்டிஸ் 7 ஓட்டங்கள், பெதும் நிஸ்ஸங்க 16 ஓட்டங்கள் மற்றும் தினேஷ் சந்திமால் 2 ஓட்டங்கள் என ஆட்டமிழக்க, இலங்கை அணி 31 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளை இழந்தது.

சவாலான வெற்றியிலக்கை நோக்கி களமிறங்கிய இலங்கை அணிக்கு, இந்த மூன்று விக்கெட்டுகள் நெருக்கடியை கொடுத்தன. எனினும், கமிந்து மெண்டிஸுடன் இணைந்து சரித் அசலங்க சிறிய இணைப்பாட்டமொன்றை பெற ஆரம்பித்தார். இவர் 23 ஓட்டங்களை பெற்றிருந்தவேளை வெஸ்லி மெதவேரின் பந்துவீச்சில் ஆட்டமிழக்க இலங்கை அணியின் 4வது விக்கெட் 63 ஓட்டங்களுக்கு வீழ்த்தப்பட்டது.

5வது விக்கெட்டுக்காக ஜோடி சேர்ந்த கமிந்து மெண்டிஸ் மற்றும் தசுன் ஷானக ஆகியோர் அணிக்கு நம்பிக்கை தரக்கூடிய ஓட்டக்குவிப்பில் ஈடுபட்டனர். நிதானமாக ஓட்டங்களை குவிக்கத்தொடங்கிய இவர்கள் மத்தியவரிசையில் இலக்குக்கு ஏற்ற வகையில் ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தனர்.

கமிந்து மெண்டிஸ் தன்னுடைய முதல் சர்வதேச ஒருநாள் போட்டி அரைச்சதத்தை பதிவுசெய்ய, தசுன் ஷானக மறுமுனையில் தன்னுடைய நான்காவது அரைச்சதத்தை பதிவுசெய்தார். இவர்கள் இருவரும் 5வது விக்கெட்டுக்காக 118 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பெற்றிருந்த போது, கமிந்து மெண்டிஸ் 57 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இதனால், 181 ஓட்டங்களுக்கு தங்களுடைய 5வது விக்கெட்டை இலங்கை அணி இழந்தது.

இந்த விக்கெட்டையடுத்து சாமிக்க கருணாரத்ன மற்றும் தசுன் ஷானக ஆகியோர் 66 ஓட்டங்களை பகிர்ந்து அணிக்கு நம்பிக்கையளித்ததுடன், தசுன் ஷானக தன்னுடைய கன்னி ஒருநாள் சதத்தை பதிவுசெய்தார். எனினும், இவர் சதமடித்த அடுத்த பந்தில் 102 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க, இலங்கை அணியின் வெற்றிக்கனவு தகர்க்கப்பட்டது.

இவருக்கு அடுத்தப்படியாக சாமிக்க கருணாரத்ன ஓட்டங்களை பெறமுயற்சித்த போதும், அவரால் வேகமாக ஓட்டங்களை குவிக்க முடியாமல் 38 பந்துகளில் 34 ஓட்டங்களை பெற்று ஆட்டமிழக்க இலங்கை அணி 50 ஓவர்கள் நிறைவில் 280 ஓட்டங்களுக்கு 9 விக்கெட்டுகளை இழந்து 22 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது. சிம்பாப்வே அணியின் பந்துவீச்சில் டெண்டாய் சடாரா மற்றும் பிளெஸிங் முஷரபாணி ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இதேவேளை, மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் தற்போது 1-1 என சமநிலையாகியுள்ள நிலையில், தொடரை தீர்மானிக்கும் மூன்றாவதும் இறுதியுமான ஒருநாள் போட்டி நாளை 21ம் திகதி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஸ்கொட்லாந்தினை எதிர்கொண்ட இலங்கை மகளிர் கிரிக்கெட் அணிக்கு இலகு வெற்றி

**கென்ய அணியுடன் இன்று மோதல்**



பொதுநலவாய விளையாட்டு விழாவிற்குரிய கிரிக்கெட் தொடருக்கான அணிகளை தெரிவு செய்யும் தகுதிகாண் போட்டிகளில் கடந்த (18) ஸ்கொட்லாந்தினை எதிர்கொண்ட இலங்கை மகளிர் கிரிக்கெட் அணி 109 ஓட்டங்களால் இலகு வெற்றியினைப் பதிவு செய்திருக்கின்றது.

இங்கிலாந்தின் பர்மிங்கமில் நடைபெறவுள்ள 2022ஆம் ஆண்டுக்கான பொதுநலவாய விளையாட்டு விழாவில் மகளிர் ரி 20 கிரிக்கெட் தொடரும் உள்ளடக்கப்பட்டுள்ள நிலையில், இந்த ரி 20 தொடரில் பங்கெடுக்கும் எஞ்சிய அணியினை தெரிவு செய்வதற்கான தகுதிகாண் போட்டிகள் மலேசியாவில் நடைபெறுகின்றன.

இந்த தகுதிகாண் போட்டிகளில் இரண்டாவது மோதலாக அமைந்த இலங்கை – ஸ்கொட்லாந்து மகளிர் கிரிக்கெட் அணிகள் இடையிலான போட்டி கின்ராரா ஓவல் மைதானத்தில் தொடங்கியிருந்தது.

போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை மகளிர் கிரிக்கெட் அணி முதலில் துடுப்பாட்டத்தினை தெரிவு செய்தது. போட்டியில் முதலில் துடுப்பாடிய இலங்கை மகளிர் அணிக்கு அதன் தலைவி சமரி அத்தபத்து அதிரடியான ஆரம்பத்தினை வழங்கியிருந்தார்.

வெறும் 45 பந்துகளினை மாத்திரமே எதிர்கொண்ட சமரி அத்தபத்து 13 பௌண்டரிகள் மற்றும் 2 சிக்ஸர்கள் அடங்கலாக 86 ஓட்டங்களைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து சமரியின் துடுப்பாட்ட உதவியுடன் இலங்கை மகளிர் கிரிக்கெட் அணி 20 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 182 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

ஸ்கொட்லாந்து மகளிர் கிரிக்கெட் அணியின் பந்துவீச்சு சார்பில் கேத்தரின் பிரேசர், அப்தஹா மக்சூத் மற்றும் கேட்டி மெக்கில் ஆகியோர் தலா ஒரு விக்கெட் வீதம் சாய்த்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

பின்னர் போட்டியின் வெற்றி இலக்காக நிர்ணயம் செய்யப்பட்ட 183 ஓட்டங்களை அடைவதற்கு பதிலுக்கு துடுப்பாடிய ஸ்கொட்லாந்து அணி, தொடக்கத்தில் சிறந்த ஆரம்பத்தினைக் காட்டிய போதும் பின்னர் சரிவடையத் தொடங்கியது.

அதன்படி ஒரு கட்டத்தில் 60 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை இழந்து காணப்பட்ட ஸ்கொட்லாந்து மகளிர் கிரிக்கெட் அணி, இலங்கை வீராங்கனைகளின் பந்துவீச்சுக்கு முகம் கொடுக்க முடியாமல் 12.1 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் பறிகொடுத்து 73 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டது.

ஸ்கொட்லாந்து மகளிர் அணியின் துடுப்பாட்டம் சார்பில் எல்லன் வொட்சன் 30 ஓட்டங்கள் பெற்று அதிகபட்ச ஓட்டங்களைப் பதிவு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கொரோனா பாதிப்பால் அவுஸ்திரேலியா நியூசிலாந்து ஒருநாள் தொடர் ஒத்திவைப்பு



கொரோனா பரவல் அதிகரித்து வருவதால் அவுஸ்திரேலியா நியூசிலாந்து இடையேயான ஒருநாள் தொடர் மற்றும் 20 ஓவர் போட்டி ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி சமீபத்தில் இங்கிலாந்துடன் ஆஷஸ் டெஸ்ட் தொடரில் விளையாடியது. 5 போட்டி கொண்ட இந்த தொடரை ஆஸ்திரேலியா 4-0 என்ற கணக்கில் கைப்பற்றியது.

இதைத் தொடர்ந்து அவுஸ்திரேலியா நியூசிலாந்து இடையேயான ஒருநாள் தொடர் நடைபெறும் போட்டி அட்டவணை அறிவிக்கப்பட்டுள்ளது.

நியூசிலாந்து கிரிக்கெட் அணி எதிர்வரும் 24ந் திகதி முதல் பெப்ரவரி 9ந் திகதி வரை அவுஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் செய்து 3 ஒருநாள் போட்டி மற்றும் ஒரே ஒரு 20 ஓவர் ஆட்டத்தில் விளையாட திட்டமிட்டிருந்தது.

முதல் போட்டி 30ம்திகதி பேர்த்திலும், 2வது ஒருநாள் போட்டி பெப்ரவரி 2ம் திகதி ஹோபர்ட்டிலும், கடைசி ஒருநாள் போட்டி 5ம் திகதி சிட்னியிலும், 20 ஓவர் ஆட்டம் பெப்ரவரி 8ம் திகதி கான்பராவிலும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் கொரோனா பரவல் அதிகரித்து வருவதால் அவுஸ்திரேலியா நியூசிலாந்து இடையேயான ஒருநாள் தொடர் மற்றும் 20 ஓவர் போட்டி ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. இரு நாட்டு கிரிக்கெட் சபைகளும் விவாதித்து, முடிவெடுத்து இந்த தகவலை நேற்று தெரிவித்தன.

இந்த போட்டி தொடர் எப்போது நடைபெறும் என்ற விவரம் பின்னர் அறிவிக்கப்படும். அவுஸ்திரேலிய அணி இலங்கையுடன் ஐந்து 20 ஓவர் போட்டிகளில் விளையாடுகிறது. எதிர்வரும் 11ம் திகதி இந்த தொடர் தொடங்குகிறது. இந்த 20 ஓவர் தொடரும் ஒத்தி வைக்கப்படுமா? என்பது பின்னர் தெரியவரும்.

# விடத்தல்தீவு உதைபந்தாட்ட பயிற்சி கூடம் நடாத்திய உதைபந்தாட்ட போட்டியில் ரோயல் அணி வெற்றி

**மன்னார் குறூப் நிருபர்**



விடத்தல்தீவு உதைபந்தாட்ட பயிற்சி கூட இயக்குனர் வைத்தியகலாநிதி மதுர நாயகத்தின் தலைமையில் அவரது நிதி பங்களிப்புடன் முகாமையாளர் நதன்ராஜ் அவர்களின் நெறிப்படுத்தலில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடாத்தப்பட்ட வீபா பிரீமியர் லீக் 2022 உதைபந்தாட்ட போட்டியில் 12 அணிகள் பங்குபெற்றன.

இறுதிப் போட்டியில் பிரதம விருந்தினராக இலங்கை உதைபந்தாட்ட சம்மேளன உதவித் தலைவரும் மன்னார் மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகருமான டுல்ஷான் நாகஷவத்த, சிறப்பு விருந்தினராக இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம் உதவித் தலைவரும் வடமாகாண உதைபந்தாட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவருமான இம்மானுவேல் ஆர்னோல்ட், மற்றும் விருந்தினர்களாக அடம்பன் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லக்ஷ்மன், விடத்தல்தீவு புதிய அபிவிருத்தி அமைப்பின் தலைவர் அருட்சகோதரர் ஸ்ரனிஸ்லாஸ், விடத்தல்தீவு புனித ஜோசப் வாஸ் பாடசாலை அதிபர். கியோமர் பயஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இறுதிப் போட்டியானது ரோயல் அணிக்கும் Heritage FC அணிக்கும் இடையில் இடம்பெற்றது.

இதன் போது இறுதிப் போட்டியில் ரோயல் அணியினர் 3:1 என்ற கோல் அடிப்படையில் Heritage FC அணியினரை வெற்றி கொண்டு இவ்வாண்டிற்கான சம்பியனாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஜனவரி மாதம் 20ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.